# சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை

# பரணர்

புலவர். கா. கோவிந்தன்

கழக வெளியீடு : ௲௩௮

சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை - II

# பரணர்

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,
எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. சென்னை-1.

*First Edition* : *December*, 1952.

[All Rights Reserved]

*Published by :*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS,
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS - 1.

*Head Office :*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

# பதிப்புரை

இயற்கையோ டொன்றி இன்புற வாழ்ந்தவர் தமிழர். அவர்தம் வாழ்க்கை வரலாற்றுண்மைகளைக் கிளந்தெடுத் துரைப்பன சங்க நூல்கள். அவைகளுள் பல பாக்கள் புனைந்து உதவியவர் '**பரணர்**' என்னும் பண்புடைப் புலவர் பெருமகனாராவர்.

இவர்தம் அரும்பெரும் வாழ்க்கை வரலாற்றையும் இவரைப் போன்ற ஏனைய சங்கப் புலவர்கள் வரலாற்றை யும் நம்மனோர் யாவரும் அறிந்து மகிழவேண்டுவது முதற்பெருங் கடனாகுமன்றோ?

இக்கருத்தை உட்கொண்டு **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை** என்னும் தலைப்பில், முதற்கண் '**கபிலர்**' என்னும் பெயரால் கபிலர் வரலாற்றைத் தொகுத்து வெளியிட்டுள் ளோம். இஃது '**பரணர்**' வரலாறு. ஏனைய புலவர் வரலாறுகளும் இவ்வரிசையில் தொடர்ந்து வெளிவரும். இதனையும் ஆக்கித்தந்தோர் **திரு. புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,** அவர்களேயாவர்.

இவைகள் யாவற்றையும் அவ்வப்போது நந்தமிழ்ப் பெருமக்கள் வாங்கிக் கற்று இப்பணியில் எமக்கு மேலும் மேலும் ஊக்கம் அளிப்பார்களென நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| க. | தோற்றுவாய் | 1 |
| உ. | பிறப்பு, குலம், சமயம் | 7 |
| ௩. | வாழ்க்கைநிலை | 14 |
| ௪. | பெருமை | 18 |
| ௫. | பண்புடைமை | 19 |
| ௬. | பரணர் மேற்கொண்ட உவமைகள் | 37 |
| எ. | பரணர் காலமும் அவர்காலப் புலவர்களும் | 46 |
| அ. | பரணரைப்பற்றிய புராணக் கதைகள் | 50 |
| கூ. | பரணர் பாடியவை எனவழங்கும் பாடல்கள் | 56 |
| க0. | பரணரால் பாடப்பட்டவர்கள் | 58 |
| கக. | பரணர் பாக்களால் அறியப்பெற்ற ஆறு, மலை, ஊர்கள் | 115 |

# பரணர்

## க. தோற்றுவாய்

தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படும் காலம், புலவர்கள் பலர் வாழ்ந்த சங்ககாலமாகும். தமிழர்தம் அழியாப் பெருஞ் செல்வங்களாகிய சிறந்த பல இலக்கியங்கள் தோன்றிய காலம், அச் சங்க காலமே. இலக்கிய வளத்தால் எழில்பெற விளங்கிய காலம். அது; இலக்கியம், மக்கள் வாழ்வில் காணும் நலங்கள் பலவற்றையும் தொகுத்துக் கூறும் ஒரு காலக் கண்ணாடி. நல்லன என்று கண்டனவற்றையும், நல்லன என்று எண்ணியவற்றையும் எடுத்துக் கூறிப் பின்னுள்ளோரை நன்னிலைக்குக் கொண்டு செலுத்தும் ஒரு நல்ல வழிகாட்டி. இலக்கியத்தின் உயர்வும் தாழ்வும், அவ்விலக்கியத்திற்குரிய மக்கள் வாழ்வின் உயர்வு தாழ்வுகளுக் கேற்பவே விளங்கும். நல்லியல்புடைய மக்களிடையே நல்ல இலக்கியம் தோன்றும்; மக்கள்—வாழ்வு, வளமற்ற பாலைபோல் பாழ்பட்டதாயின், அவர்களிடையே தோன்றும் இலக்கியமும் பாழ்பட்டே காணப்படும். நிலத்தியல்பால் நீர் திரிதலேபோல், நல்லோரிடையே தோன்றும் இலக்கியம் நல்லன ஆதலும், தீயோரிடையே தோன்றும் இலக்கியம் தீயன ஆதலும் இயற்கை. கரும்பு விளைவது கழனியில்; களர்நிலத்தில் அன்று. இலக்கியம் நல்லன ஆயின், அவ் விலக்கியத்திற்கு உரிய மக்கள் நல்லராவர்; இலக்கியம் தீயவாகக் காணப்படின், அவ் விலக்கியத்திற்குரிய மக்கள் தீயராவர். ஆகவே, ஒரு நாட்டு மக்களின் தகுதி தகுதியின்மைகளை அறிந்து காட்டும் அளவுகோலாக இலக்கியத்தையே கொள்வர் அறிவுடையோர்.

சங்ககாலம் என அழைக்கப்பெறும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள், வளம் பல நிறைந்த வாழ்வுடையராயினர். நாடு செல்வத்தில் சிறந்து விளங்கிய காரணத்தால், அக்காலப் புலவர்கள், பொருள்வளத்தைப் போற்றவேண்டிய கவலையற்றவராயினர். நிரம்பிய வாழ்க்கையும், நிறைந்த உள்ளமும் பெற்றுத் திகழ்ந்த புலவர்கள், பொன்றாக் கலைவளத்தைப் போற்றிப், புகழ்படைத்த பேர் இலக்கியங்களை இயற்றிச் சென்றனர். "சோற்றுச் செருக்கல்லவோ, தமிழ் மூன்று உரை சொல்வித்ததே!" என்று பிற்காலப் புலவர் ஒருவரும் கூறுவர். புலவர்தம் அவ்வுள்ளப் பயனாகவே, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் முதலிய இலக்கியப் பெருநூல்களும், தொல்காப்பியம் போன்ற ஒல்காப் புகழ்கொண்ட இலக்கண நூல்களும் தோன்றின.

தமிழகம் பண்டு தான் பெற்றிருந்த செல்வச்சிறப்பை இழந்துவிட்ட இக்காலத்திலும், தமிழரும், தமிழகமும், உலகஅரங்கில் உயர்வுடையராக மதிக்கப் பெறுவதற்குக் காரணமாய் விளங்குவன, தமிழ்மொழி பெற்றிருக்கும் தனிச்சிறப்புடைய இலக்கியச் செல்வங்களே ஆகும். ஆகவே, அவ் விலக்கியப் பெருஞ் செல்வங்களை அளித்து, அதன் வழியாகத் தமிழர்க்குத் தாழ்விலாச் சிறப்பளித்த அப் புலவர் பெருமக்கட்குத் தமிழ்நாட்டார் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். "நன்றி மறப்பது நன்றன்று." அவர்க்கு இவர் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றும் இல்லை எனினும், அவரை மறவாது அறிந்து மனத்திடை மதிப்பதாவது செய்வாராக.

ஆனால், பெறுதற்கரிய பேரிலக்கியப் பெருஞ் செல்வங்களைப் படைத்தளித்த அப் புலவர்களின் வரலாற்றினை நம்மால் அறிய முடியவில்லை. புலவர்கள் வாழ்ந்த காலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அப்பாற்பட்ட காலமாகும். அக்காலத்தே வாழ்ந்த ஒருவர் வரலாற்றை, இக்காலத்தார் அறியத் துணைபுரிவனவற்றுள் சிறப்புடையன நான்கு :

ஒன்று, தங்கள் வாழ்க்கை வரலாற்றைத் தாங்களாகவே எழுதிவைத்துச் சென்ற தம் வரலாறுகள் (Autobiography); இரண்டு, தங்கள் வாழ்க்கை வரலாற்றை முறையாக அன்றித், தங்கள் வாழ்க்கையில் அவ்வப்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நிரல்படக் குறித்துவைக்கும் நாட் குறிப்பு (Dairy); மூன்று, ஒருவர் காலத்தே வாழ்ந்து, அவர் நண்பராகவோ, உறவினராகவோ, அவரோடு கூடியிருந்து அறிந்து எழுதிவைத்த அவர் தம் வரலாறு (Biography); நான்கு, புலவர்களுக்குத் தாம் அளித்த பரிசிலை உறுதி செய்ய, அரசர்கள் எழுதிவைத்த செப்பேடுகளும் கல் வெட்டுக்களும். இவையொன்றும் கிடைக்காத விடத்தில், அப் புலவர்கள் வாழ்ந்த காலத்தில் வாழாது போயினும், அவருக்குக் காலத்தால் சிறிதே பிற்பட்டோர் சிலர் எழுதி வைத்த குறிப்புக்களையும் துணையாகக் கொள்வர்.

பழந்தமிழ்ப் புலவர்கள் வரலாற்றை அறிவதில் மேற் கூறியன துணைபுரிகின்றனவா? எனின், இல்லை என்றே கூறலாம். புலவர்கள் தம் வாழ்க்கைவரலாற்றைத் தாமாகவே வகுத்து எழுதிவிட்டுச் சென்றனரா? எனின் இல்லை. புலவர்கள், இலக்கிய வளர்ச்சியிலேயே கருத்துடையராய் நின்றுவிட்டனரே ஒழிய, தங்கள் வரலாற்றைத் தங்கள் வாயிலாகவே அளிக்கத் தவறிவிட்டனர்; அதுமட்டும் அன்று; அவர்கள், தங்கள் காலத்தில், தமிழகத்தை ஆண்டிருந்த பேர் அரசர்களையும் குறுநிலமன்னர்களையும் கொடைவள்ளல்களையும் அவர் தம் நாடு மலை ஊர்களையும் நமக்கு அறிமுகம் ஆக்கியுள்ளார்கள்; ஆனால், தங்கள் காலத்தில், தம்மோடு வாழ்ந்த, தம்மை யொத்த புலவர்களை நமக்கு அறிமுகமாக்கத் தவறிவிட்டனர்; புலவர்கள்வரலாறு ஒருவர் கூற, மற்றவர் கேட்பது என்ற முறைப்படியே, பல தலைமுறைவரை அறியப்பட்டு வந்ததாகலின், அவர்கள் வரலாற்றில் உள்ள பகுதி விடப்பட்டும், இல்லாத பகுதி நுழைக்கப்பெற்றும், ஒன்று ஒன்றாகத் திரிக்கப்பெற்றும், ஒருவர் வரலாறு, மற்றொருவர்க்கு ஏற்றி உரைக்கப்பட்டும் நிகழ்ந்திருத்தல் கூடும்.

ஆதலின், பிற்காலத்தார் கூறும் வரலாற்றுச்சான்றுகள் உண்மைச்சான்றுகள் ஆகா; இதனால், புலவர்களுடைய வரலாறு, நம்மால் அறிய இயலாமல் போனதோடு, அவர்களிற் பலருடைய இயற்பெயர்தாமும் அறிய இயலாமற் போய்விட்டது; தமக்கு 'உயர்வளிக்கும் புலவர் பெருமக்களுக்குத் தமிழ்மக்கள் அளிக்கும் கைம்மாறு என்னே!

இவ்வாறு புலவர்களின் வரலாற்றை அறிய மறந்த நன்றிகெட்ட தமிழர்களிடையே, நன்றி மறவாத் தமிழர்களும் சிலர் இருந்துள்ளனர். அவர்கள், அப் புலவர்களின் வரலாற்றினை அறியப் பெரிதும் முயன்று, முடியாமற் போகவே, அவர்கள் பெயரையாவது அறிந்து அறிவிக்க முயன்றுள்ளனர். அம் முயற்சியில், அவர்கள் ஓர் அளவு வெற்றியும் பெற்றனர். புலவர் ஒருவருடைய ஊரும், அவர் மேற்கொண்டிருந்த தொழிலும், அவர் இயற்பெயரும் தெரிந்தால், உறையூர் மருத்துவன் தாமோதரனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் என ஊரும் பெயரும் அறிந்ததோடு, அவர்தம் தந்தை பெயரும் அறியும் நிலையில் உள்ளனர். மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரர் என ஊரும் தொழிலும் அறிந்து அவர்தம் இயற்பெயர் அறியமாட்டாதாரை, உறையூர் இளம்பொன் வணிகனார், வெண்ணிக் குயத்தியார் எனப், புலவர்தம் ஊர்மட்டும் அறிந்து, அவர்தம் தொழிலோ, இயற்பெயரோ அறியமாட்டாதாரைக் கல்லாடனார், கழாத்தலையார் என, அப் புலவர்தம் வரலாற்றை, அப் புலவர் பெயரோடு இணைத்து வழங்கித் தமிழுலகம் அறியச் செய்தனர். அவ்வளவோடு நில்லாமல், புலவர்தம் ஊரோ, தொழிலோ, இயற்பெயரோ, அல்லது அவர் தந்தை பெயரோ அறியமாட்டாப் புலவர்களையும், அவர்கள் இயற்றிய பாக்களைப் பயின்று அப் பாக்களில் காணப்பெறும் அரிய நயம் செறிந்த சொற்றொடர், இனிய உவமைகள் ஆகிய இவற்றைக்கொண்டு முறையே, கங்குல் வெள்ளத்தார், பதடிவைகலார் எனவும், கல்பொருசிறுநுரையார், செம்

புல்ப் பெயனீரார் எனவும் பெயரிட்டு வழங்கி அவர்களையும் அறிமுகமாக்கினர்.

இந்நிலையில், புலவர் வரலாற்றை அறியவிரும்பும் நமக்குப் பெரிதும் துணைபுரிந்து நிற்பன, அப் புலவர்கள் இயற்றிச் சென்ற ஒருசில பாடல்களே; அப் பாடல்களும், அவர்கள் வாழ்க்கை வரலாற்றினை முழுதும் வகுத்துரைக்கும் இயல்பினவா எனின், அதுவுமில்லை. பழந்தமிழ் இலக்கிய ஆசிரியர், வரலாற்று நூலாசிரியர் (Historians) அல்லர்; அவர்கள் புலவர்களே; அவர்கள் தொழில் எல்லாம், தம்மைப் பேணிய பேர்அரசர்களைக் - குறுநில மன்னர்களைப் - பிற கொடைவள்ளல்களைப் பாராட்டிக் கூறுவதே; அவர் தம் வரலாற்றை வரைவது அல்ல; தங்களைப் பேணியோரைப் பாராட்டுங் காலத்தும், அவர்கள் செய்த செயற்கரும் செயல் எல்லாவற்றையும் எடுத்து வகுத்துக் கூறுவதைப் புலவர்கள் வழக்கமாக மேற்கொள்வதிலர். புரவலரைப் பாராட்டுங் காலத்தும், தங்கள் வறுமை, தம்மைப்போன்ற புலவர்களை மற்ற இரவலர்களைப் புரக்கவேண்டியதன் இன்றியமையாமை, புரவலர் சிலர், தம்மைப்போன்ற புலவர்களைப் பேணிய வகை ஆக இவற்றைப் பெரிய அளவில் கூறி, சிறிய அளவில், அப் புரவலர்கள் செய்த செயல் சிலவற்றைக் குறிப்பிடுவதே அப் புலவர் வழக்கமாகக் காண்கிறோம். ஆகவே, அவர் பாக்கள், அக்கால அரசர்கள் வரலாற்றை ஓர் அளவு அறியத் துணைபுரிகின்றனவே அன்றி, அவற்றை இயற்றிய புலவர்கள் வரலாற்றை அறியத் துணைபுரிவன அல்ல. என்றாலும், அரசர்களைப்பற்றிக் கூறும்பொழுது, அவ்வரசர்களோடு, அப் புலவர்கள் கொண்டிருந்த தொடர்பு சிலவற்றையும், அப் பாக்கள் அறிவிக்கின்றன. ஆகவே, புலவர்வாழ்க்கை வரலாற்றை அறிய அவையும் ஓர் அளவு துணை புரிகின்றன என்றே கொள்ளலாம்.

ஆகவே, புராணங்கள் தனிப்பாடல்திரட்டுக்கள் போன்ற பிற்கால நூல்கள் கூறுவனவற்றைக்கொள்ளாது, அப்புலவர்கள், தம் வாயால் பாடிய பாடல்களில் காணப்

படும் ஒருசில குறிப்புக்களையே அவர்கள் வரலாருகக் கொள்ளுதல் வேண்டும். மேலும், ஒருவர் வரலாறு என்பது, அவர் பிறந்த ஊர், காலம், வாழ்ந்த இடம், அவர் வாழ்க்கையோடு தொடர்புடைய அவர் மனைவி, மக்கள், பெற்ருர், உற்ருர், பேணிய அரசர்கள், பிற நண்பர்கள், அவர் வாழ்நாள், வாழ்நாளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இவை மட்டுமே ஆகாது; அவர்தம் குணமும், பெருமையும், பிறவும் வரலாறு என்றே கொள்ளப்படும்.

ஆதலின், புலவர் பாடிய பாடல்களாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய பெருநூல்களில் காணப்படுவனவற்றைத் துணையெனக் கொண்டு, அவர்கள் வரலாற்றை அறிய முற்படுதலே அறிவுடையோர் கடன். அவ்வாறே, பரணர் வரலாற்றினையும், அவர் பாக்கள் காட்டும் பாதை வழிச்சென்று பார்த்து மகிழ்வோமாக.

# உ. பிறப்பு, குலம், சமயம்

(1) பிறப்பு:—பரணர், பலருடைய வரலாற்றினை விளக்க உரைத்துள்ளார்; ஆனால், தம்முடைய வரலாற்றில் ஒருசிறு பகுதியையும் அறிய அவர் பாடல்கள் துணைபுரிவன அல்ல; ஆகவே, 'புலவர்களும் போற்றும் புகழ்மிக்க பரணரைப் பெற்றுப் பெருந்தவமுடையராய் விளங்கிய பெற்றோர் யாவர்? அவர் உற்றார் யார்? உறவினர் யார்? உடன்பிறந்தார் யார்? பரணரின் பிள்ளைப் பருவப் பண்புகள் யாவை? நூல் பல கற்று நுண்ணறிவெய்தத் துணைபுரிந்த நல்லாசிரியர் யார்? அவர், அவர்க்குக் கற்றுத் தந்த நூல்கள் யாவை? பெண்ணொருத்தியை மணந்து, பேரறமாம் இல்லறம் பேணியவரா பரணர்? அவ்வாறாயின், மங்கலமாம் மாட்சியுடைய மனைவியார் யார்? அவர் இயல்பு யாது? அவ் வில்லறத்தின் நன்கலமாம் மக்கட்பேறுண்டா பரணர்க்கு? உண்டெனின், எத்தனை மக்கள்? அவருள் ஆடவர் எத்தனையர்? பெண்மக்கள் எத்தனையர்? புரவலர்பால் சென்று பாடிப் பெறும் பொருளையன்றி, வேறுபொருள்பெறும் வழி யாதேனும் அவருக்கு உண்டா?' என்னும் இவற்றிற்கு ஏற்றவிடை காணும் வகையொன்றும் இல்லை; நக்கீரர், கணக்காயனார் மகனார், என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுத் தம் தந்தை, யார் என்பதை அறிவிப்பது போலவும், மருதன் இளநாகனார், மதுரை மருதன் இளநாகனார் என அழைக்கப்பெற்று மதுரையைச் சார்ந்தவர் என்பதை அறிவிப்பது போலவும், சீத்தலைச்சாத்தனார், கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் என அழைக்கப்பெற்றுக், கூலவாணிகத் தொழில் புரிபவர் என்பதை அறிவிப்பது போலவும், கோவூர்கிழார், பெயராலேயே வேளாளர் என்பதை அறிவிப்பது போலவும் பரணர், தந்தை, ஊர், தொழில், பிறந்தகுலம் ஆகிய இவற்றை அறிவிக்கும் ஆற்றல் அவர் பெயர்க்கு இல்லை.

(2) குலம்:—பரணர் குலம் யாது என்பதை அவர் பெயர் அறிவிக்கவில்லை. கபிலர், அந்தணர் குலத்தைச்

சேர்ந்தவர் என்பதை, "யானே, பரிசிலன்; மன்னும் அந்தணன்" என்னும் அவர் பாட்டும், "புலனழுக்கற்ற அந்தணாளன்" என்னும் பிறர் பாட்டும் அறிவிப்பதைப் போல், பரணர் பாட்டோ, அல்லது அவர்காலப் புலவர் பாக்களோ பரணர்குலம் யாது என்பதை எடுத்து இயம்பவில்லை. ஆனால், பரணர், பேகனைப் பாராட்டிப் பாடிய பாக்களில், "சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின், காரெதிர் கானம் பாடினேம்" எனவும், "களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ், நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி" எனவும், சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவனைப் பாராட்டிய பாட்டில், "அரிக்குரல் தடாரி, உருப்ப ஒற்றிப் பாடி வந்திசின் பெரும!" எனவும் பாடியிருப்பதைக் கொண்டு, "பரணர், பாணர் குடியிற் பிறந்தவர். பாணர் குடியிலே பிறந்து, புலமையாலும், புகழாலும் பலரும் போற்ற வாழ்ந்த காரணத்தால், அக்கால மக்கள், அவரை இயற்பெயரிட்டு அழைக்க அஞ்சி, குலப்பெயரால் பாணர் என அழைத்தனர்: அதனால், அவர் இயற்பெயர் மறைந்து போக, குலப்பெயரே நின்று விளங்கலாயிற்று. 'படித்தவன் பாட்டைக் கெடுத்தான் எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்,' என்பதுபோல், பாணர் என்ற இவர் பெயர், பிற்காலத்தில், ஏடெழுதினோரால், 'ப'விற்குப்பின் நெடில் குறிக்கவருங் 'கால்' என அழைக்கப்பெறும் ா என்ற வடிவம், ர என மாற்றப்பெற்று, பாணர், பரணர் என எழுதப்பட்டு விட்டது; அன்றுமுதல் அவர் பரணர் என்றே அழைக்கப் பெற்றார்; உண்மையில் அவர் பாணர் என்பதே; அவர் குலம் பாண்குலமே; இயற்பெயர் மறைய சிறப்புக் குறித்து வழங்கிய குலப்பெயரே விளங்க வாழ்ந்த புலவரும் உளர்; சேக்கிழார்; குயத்தியார் என்பன காண்க. ஏடெழுதுவோரால், கால், ரகரமாக மாற்றப்படுவதேபோல், ரகரம், காலாக மாற்றப்படுவதும் உண்டு. "சரகம் என்றசொல், தேனீ எனப்பொருள்படும்; இச்சொல்லில் உள்ள ரகரம், காலாக மாற்றப்பட்டுவிட்டமையால், அச்சொல் சாகம் என ஆகி, சூடாமணி நிகண்டிலும் இடம்பெற்றுவிட்டது காண்க," என்று சிலர் கூறுவர்.

பழந்தமிழ்க் குடிகளில் பாணர்குடி என்பதும் ஒன்று. "பாணன், பறையன், துடியன், கடம்பன் என்று இந் நான்கல்லது குடியு மில்லை" என்பது புறநானூறு. பாணர்குடியில் பிறந்த ஆண்மகன், பாண்மகன் அல்லது பாணன் என்றும், பெண்மகள் விறலி எனவும் அழைக்கப் பெறுவர். பாண்மகன் பல்வேறு இசைக் கருவிகளோடும் சென்று, அவற்றினின்றும் எழும் இசைக்கேற்ப, தன் இன்குரல் எடுத்துப் பாடிப் பாராளும் மன்னர்களை யும், ஊராளும் தலைவர்களையும் கண்டு பரிசில் பெற்று வருவன். விறலியர், அவ்வாடவர் பாடும் பாடற்பொருளும், தாமே பாடும் பாடற்பொருளும் தெளிவாகத் தோன்று மாறு, கையாலும் கண்ணாலும் நடித்து ஆடி, அத்தலைவர் களை மகிழ்வித்துப் பொருள்பெற்று மீள்வர்; அரசர்கள், அவர் பாடல் கேட்டு மகிழ்ந்து, பாணனுக்குத் தம் பகை வர் யானையின் முகபடாம் அழித்துச் செய்த பொற்றாம ரைப்பூவையும், விறலியர்க்குப் பொற்றொடியையும் பரிசி லாக அளித்துச் சிறப்புச் செய்வர். இதுவேயன்றி, தலைவன் தலைவியர்க்கிடையே தோன்றும் ஊடல் தீர்த்து ஒற்றுமை உண்டாக்குவதாகிய அப்பணியினையும் அப் பாணர் மேற்கொண்டிருந்தனர் எனப் புலவர்கள் பாடல் புனைவர்.

புலவர்கள் அரசரைப் பாடிப் பரிசில்பெறும் வழக்கம் தோன்றிய அந்தக் காலத்திலேயே, புலவர்கள் எக்குடிப் பிறந்தாராயினும், தங்களைப் பாணராகக்கொண்டு, பாணன் ஒருவன், அரசன் ஒருவனிடத்தில் சென்று, இசையெழுப் பிப் பாடுவதைப் போல் பாடல்புனைவதையே கவி மரபாகக் கொண்டுவிட்டனர். உறையூர் ஏணிச்சேரி முடமோசி யார் என்ற புலவர் அந்தணர் குலத்தார் என்பர், தொல் காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை வகுத்துள்ள பேராசிரியர். அம்முடமோசியார், 'ஆய்' என்ற அரசனைப் பாடிய பாட்டொன்றில், விறலி பின்வரச் சென்று யாழ் இசைத்துப் பாடியதாகப் பாடியுள்ளார்: "வளைக்கை விறலி என் பின்னளாக.......படுமலை நின்ற பயங்கெழு

சிறியாழ், ஒல்கல் உள்ளமொடு ஒருபுடைத் தழீஇப், புகழ் சால் சிறப்பின் நின் நல்லிசை உள்ளி வந்தனென்.'' கிழார் என்ற குடிப்பெயர், வேளாளர்க்கு உரியது என்பர்; அக்குடியிற் பிறந்து சிறந்தமையால், பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் என அழைக்கப்பெறுவதும் காண்க. கிழார் என்ற சிறப்புப் பெயர்பெற்று, வேளாளர் என அறியப் பெற்ற அரிசில்கிழார் என்ற புலவர், பேகனைப்பாடிய பாட்டொன்றில், பாணரைப்போல் யாழ் இசைத்துப் பாடியதாகப் பாடியுள்ளார்: "சிறியாழ்செவ்வழி பண்ணிநின்வன் புலநன்னுடுபாட என்னை நயந்து.'' பார்ப்பனருள் ஒரு பிரிவினராகிய கீரன் என்ற குடியிற் பிறந்தவர் எனக் கூறப்பெறும், கணக்காயர் தொழில் மேற்கொண்ட நக்கீரர், சோழ நாட்டுப் பிடவூர்கிழான் பெருஞ்சாத்தனைப் பாடிய ஒரு பாட்டில், தடாரிப் பறை முழக்கிப் பாடிநின்றதாகப் பாடியுள்ளார்: "அரிக்குரல் தடாரியோடு ஆங்குநின்ற எற்கண்டு.'' இவ்வாறு தம்மைப் பாணராகக் கொண்டு பாடுவதோடு, தங்களை வேறு பாணர் சிலர், பரிசில்பெறும் இடம் யாண்டுளது எனக் கேட்பது போலவும், அதற்கு விடையளிப்போராக, பரிசில்அளிப்போன், அவன் அன்பு, அருள், ஆற்றல், அவன் தமக்கு அளித்த பரிசில் பொருளின் பெருமை, அவன் நாடு, அந்நாட்டு வளம், அவன் நாடு அடைதற்குச் செல்லும் வழிகளின் வகையும், அருமையும் ஆகியவற்றை விளங்க அறிவிப்பார் போலவும் பாடுவனவதயும் புலவர்கள் கவிமரபாகக் கொண்டுள்ளனர். இதனை ஆற்றுப்படுத்தல் என்பர். பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாலான பாடல்கள் அவ்வாறு வந்த ஆற்றுப்படைப் பாடல்களே. அதனால்; பத்துப்பாட்டிற்கு ஆற்றுப்படைப் பாடல்கள் என்ற ஒரு பெயரும் வழங்குகிறது. ஆகவே, அவர் பாட்டில் காணப்பெறும், இவைபோன்ற நிகழ்ச்சிகளைக் கொண்டு, பரணரைப் பாணர்குடியிற் பிறந்தாராகக் கொள்ளுதல் கூடாது. பரணர், பாணர் குடியிற் பிறந்தார் அல்லர் எனவே, "அவர் பெயர் பாணர் என்பதே; அது ஏடு எழுதியோரால் பரணர் எனத் திருத்தப்பட்டு விட்டது,'' என்பதும் பொருந்தாது.

பரணர் பெயர், பரணர் என்பதே; பாணர் என்பது அன்று என்பதற்கு ஆதாரமாக அழகிய அகச்சான்று ஒன்றும் கிடைத்துளது. ஔவையார் பரணர் காலப் புலவர்; அவர், அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாராட்டிய பாட்டொன்றில், அதியமான், பரணராலும் பாராட்டப்பெற்ற பெருமையுடையான் எனக் கூறுவர்.

"பரணன் பாடினன் மற்கொல்; மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி ஏந்திய தோளே." (புறம். கக).

இப்பாட்டில், முரண்மிகு, அரணடு என்ற சொற்களுக் கேற்ப, எதுகைத் தொடையாகப் பரணன் என்பதே பொருந்துவதாக உளது; பாணன் என்பது பொருந்தாமை அறிக. நக்கீரர் பாடியது என்ற ஒரு பாட்டு தொல்காப் பியப் பொருளதிகார உரையின் மேற்கோளாகக் காட்டப் பட்டுளது; அதன் முதல் இரண்டு அடிகள்

"முரணில் பொதியின் முதற் புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி - அரணியல்"

(தொல். பொருள். உகூ0 மேற்கோள்).

எனவரும்; இதிலும், முரணில், அரணியல் என்பனவற் றிற்கு ஏற்ப பரணர் என்பதே பொருந்துவது அறிக. ஆகவே, பரணர் பெயராலோ, அல்லது பாட்டாலோ பாணர் ஆகார்; அவர் இயற்பெயரும் பாணர் என்பதன்று; பரணர் என்பதே என்பது முடிவாகக் கொள்க. இதனால், அவர் பாண்குடியினர் என்பதும் பொருந்தாமை அறிக.

(3) சமயம்:—சங்ககாலத் தமிழரிடையே சமயப் பூசல் இடம்பெறவில்லை. சங்ககாலத்தார் சாதி சமயச் சண்டைகளைக் கண்டவரல்லர்; 'எம்மதமும் சம்மதம்' என்ற உயர்நோக்குடையவர் அவர்; 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற பொதுநோக்கு அவர்பால் இருந் தது; தந்தை ஒருசமயம்; மகன் மற்றொரு சமயம்; அண்ணன் ஒருசமயம்; தம்பி இன்னொருசமயம்; கணவன்

ஒருசமயம்; மனைவி மறுசமயம். இப்படி வாழ்வதை அவர்கள் மனநிலை வெறுக்கவில்லை. இவ்வாறு அவரவர், அவரவர்க்கு விரும்பிய சமயத்தைச் சார்ந்திருந்ததோடு, ஒருவரே பல சமயத் தொடர்புடையராகவும் இருந்துள்ளனர்; மக்களிடையே இத்தகைய சமரச எண்ணம் நிலவியது எனின், மக்களுக்கு வழிகாட்ட வேண்டியவராகிய புலவர்களிடத்தில் அவ்வெண்ணம் இருந்தது என்று கூறுவது தேவையில்லை.

பரணர், தாம் பாடிய பாடல்களில், உலகம் புகழும் நான்மறைகளை நல்கியோன் சிவன், அவனுக்குக் கண் மூன்று உண்டு. "ஞாலம் நாறும் நலங்கெழு நல்லிசை நான் மறை முதுநூல் முக்கட்செல்வன்" எனவும், அலைவாய் என அழைக்கப்பெறும் செந்திற்பதிக்குரியோன், செவ்வேள் என அழைக்கப்பெறும் முருகன், அவன் போர்வன்மை மிக்கவன்; அவனமர் அலைவாய், அழகிய மணிவிளக்கால் மாண்புறும், "திருமணி விளக்கின் அலைவாய்ச் செருமிகுசேய்" எனவும், சிவனையும் முருகனையும் அறிந்து கூறியிருப்பதால், பரணர் சைவச் சார்புடையவர் என்பர் சிலர்; அதற்கு ஆதாரமாக, "பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்" என்று சுந்தரமூர்த்தி நாயனார் கூறிய தொடர், சங்ககாலப் புலவர்களையே குறிக்கும் எனக் கொண்டு, நம்பியாண்டார் நம்பி அவர்களும், உமாபதி சிவாசாரியரும் நக்கீரர், கபிலர், பரணராகிய பெரும்புலவர்கள், "அரன் சேவடிக்கே பொருள் அமைத்து இன்பக்கவிபாடும் புலவர்களே," எனவும், "மெய்யுடைய தொடைகள் எல்லாம் மன்றுளாடல் மேவியகோன் இருதாளில் விரவச் சாத்தினர்," எனவும்கூறி, பரணரைப் பரம்பரைச் சைவர் என்றே கொண்டதைக் காட்டுவர். ஆனால், பரணரோ அல்லது அவர்காலப் புலவர்களோ சைவராவர் என்பதற்கான அகச்சான்று எதையும் அவர் பாக்களில் காண இயலவில்லை. ஆதலானும், பரணர் குறிப்பிட்ட அவ்விரு குறிப்புக்களும், சிவன் இருந்த ஒரு துறையினையும், முருகன்முன் தலைமகன் உரைத்த சூளுற

வினையும் குறிக்க வந்தனவே அன்றி, அவர்கள், பரணர் வணங்கும் வழிபடு கடவுளாவர் என்பதை உணர்த்த வந்தன அல்ல ஆதலாலும், தம் காலவரலாற்று நிகழ்ச்சிகளைப் பிழையின்றி வகுத்துக் கூறவல்ல சேக்கிழார், சுந்தரமூர்த்திநாயனார் பாடலைப் பின்பற்றிப் பாடிய தம் பெரியபுராணத்தில், சுந்தரர்தேவாரத்தில் வரும் அத்தொடர் சங்கப்புலவர்களைக் குறிக்கும் எனக் கூறாமையாலும், பரணர், சைவசமயத்தவரே எனத் துணிந்து கூறுவதற்கில்லை.

பரணர்பாடல்களைப் படித்துப் பார்க்கின், கடவுள் உண்டு; அவரைக் கைகூப்பித் தொழுதல் வேண்டும்; கல்வி கற்றல், கடவுள் தொடர்பான நிகழ்ச்சி; "கைதொழு மரபின் கடவுள் சான்ற செய்வினை மருங்கு;" (ஓதற் பிரிவு) "உரைத்த சூள் பொய்த்தாரைத் தெய்வம் ஒறுக்கும்;" "அவலம்....அலைவாய்ச் செருமிகு சேயொடு உற்ற சூளே," இவ்வுலகில் இறந்தார் போய்ப் பிறக்கும் மறுமை உலகம் உண்டு: "மறுமை உலகத்து மன்னுதல் பெறுமே." நரகம் உண்டு; பெண்கொலை போன்ற பெருங் குற்றம் புரிந்தவர், அந் நரகிடைச் சென்று மீளாத் துயர் உறுவர்; "பெண்கொலை புரிந்த நன்னன் போல, வரையா நிரையத் துச் செலீஇயர்." பேய் உண்டு; அது பிணம் தின்னும்; பலி கொடுத்தால் பணி செய்யும்; பேய் நடுஇரவில் இயங்கும் தன்மை உடையது. "பேய் மகள் பற்றிய பிணம்;" "கழுது வழங்கு யாமம்"; "ஊட்டரு மரபின் அஞ்சுவருபேய்" என்ற கொள்கைகளை உடையவராகக் காணப்படுகின்றார் பரணர்; சமயச்சார்பான பரணர் கொள்கைகளாக இவற்றையே காண்கிறோம்.

## ௩. வாழ்க்கைநிலை

பரணர் வாழ்வுநாள்வரை வாழ்ந்தவராவர்; தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, ஆங்காங்குள்ள அரசர்கள், அரும் பெருந் தலைவர்கள், அவர்கள் ஆண்ட இடங்கள், அவர்க்குரிய மலைகள், ஆறுகள், அவ்வவ் விடங்களில் நிகழ்ந்த அரிய நிகழ்ச்சிகள் ஆகிய இவற்றை நேரில் அறிந்து பாராட்டுதற்கு வேண்டிய ஆயுட்காலத்தை அவர் பெற்றிருந்தார். பரணர் பாராட்டிய அரசர்களுள், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியும், சேரன் செங்குட்டுவனும் இடம் பெற்றுள்ளனர். இவ்விரு அரசர்களுக்கும் உள்ள உறவு முறையினைக் கீழ்வருமாறு கொள்வர் ஆராய்ச்சியாளர். உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகன், கரிகாற்பெருவளத்தான் ஆவன்; கரிகாலன் மகன் சோழன் மணக்கிள்ளி; இக் கிள்ளியின் மகள் நற்சோணையும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் மணந்து பெற்ற மகனே செங்குட்டுவன். ஆக, இம்முறைப்படி கொண்டால், இளஞ்சேட்சென்னி, கரிகாலன், மணக்கிள்ளி, நற்சோணை, செங்குட்டுவன் ஆகிய ஐந்து தலைமுறைக்காலம் வரையிலும், பரணர் வாழ்ந்திருந்த காரணத்தினாலேயே, தமிழ்நாட்டு வரலாற்றின் பெரும் பகுதியினை அறிந்துகூற அவரால் முடிந்தது போலும்.

பரணர், அரசர் பலரைச் சேர்ந்து பாராட்டியுள்ளார் என அறிய முடிகிறதே அன்றி, அவர் முதன்முதல் கண்டு பாராட்டிய அரசர் யார்? எந்த அரசன் அவையகத்தில் நீண்டதோர் நாள் வாழ்ந்திருந்தார் என்பனவற்றை அறிந்துகொள்ள முடியவில்லை. பரணர் பாராட்டைப் பெற்ற அரசர் பலராயினும், அவருள், அவர் பாராட்டுதலை மிகுதியாகப் பெற்ற அரசன், சேரன் செங்குட்டுவனே ஆதலாலும், அவன் பரணர் பாடல் கேட்டு மகிழ்ந்து, அவர்பால் பெருமதிப்புற்று, தன் மகனையும் அவரைப்போல் அறிவுடையனாக்க வேண்டும் என்ற ஆசையால் அவரிடம் ஒப்படைத்தான் எனக் கூறப்படுதலாலும், பரணர் சேர

நாட்டைச் சேர்ந்தோராதலும் கூடும் என்று எண்ணுவர் சிலர்; ஆனால், அவர் அவனைப் பாராட்டிய பாடல்களில், காடும் மலையும் கலந்து கடத்தற்கரிய வழி பல கடந்து சென்றே கண்டதாகவும், "செங்குட்டுவனைக் காண யான் செல்கின்றேன்; நீங்களும் வாருங்கள்" எனத் தம்மை யொத்த புலவர் முதலாயினாரை அழைப்பதாகவும் பாடியுள்ளார். "மழை பெயல் மாறிய கழைதிரங்கு அத்தம், ஒன்றிரண்டல, பல கழிந்து, திண்தேர் வசையில் நெடுந்தகை காண்கு வந்திசின்;" "யாமும் சேறுகம்; நீயிரும் வம்மின்;" ஆதலின், பரணர் சேரநாட்டார் அல்லர்; வேற்று நாட்டினரே என்பது முடிபாகக் கொள்க.

"இரு வேறு உலகத் தியற்கை; திரு வேறு; தெள்ளியராதலும் வேறு" என்பர்; செல்வமும் கல்வியும் சேரப் பெற்றோர் உலகத்து அரியர்; உலகப் பெரும் புலவர் அனைவரும் வறியராகவே வாழ்ந்துள்ளனர்; அவர்கள் வறுமை வாழ்வில்தான், அறிவு ஒளிவிட்டு விளங்கும் போலும்! செல்வம் இல்வழியே, உள்ளொளி பெருகும் போலும்! இவ் வியல்பு தமிழ்ப்புலவர்களிடையேயும் இருக்கக் காண்கிறோம். பரணர், பெருஞ் செல்வம் பெற்றுப் பெருமை தோன்ற வாழ்ந்தவரல்லர்; பொறுத்தற்கரிய பசித்துயர் வாழ்க்கையில் போராடி வந்தவரே ஆவர். பேகனைக் கண்டு பாராட்டி, அவன் அளித்த பரிசில் பெற்று, கடும் பரி பூட்டிய நெடுந்தேர் ஏறி வருபவர், இடைவழியில் எதிர்ப்பட்ட இரவலன் ஒருவனை நோக்கி, "இரவல! இப்போதைய என் செல்வநிலை கண்டு வியந்து நோக்கி, 'நீவிர் யாவிர்? உங்களுக்கு இவ் வாழ்வு எவ்வாறு உண்டாயிற்று?' எனக் கேட்கின்றனை; இது, பேகன் அளித்த பரிசில்; அவனைக் காணுமுன், என் நிலை, உன் நிலையினும் மிக மிக இழிவுடையதாகவே இருந்தது;

"காரென் ஒக்கல் கடும்பசி இரவல!
வென் வேல் அண்ணல் காணா ஊங்கே,
நின்னினும் புல்லியேம் மன்னே;
இனியே, இன்னேம் ஆயினேம்."

என்று கூறுவதால், அவர் வறுமையின் கொடுமை ஒரு வாறு தோன்றுதல் காண்க.

புலவர் அனைவரும் வறுமையால் வாடுபவரே எனி னும், அவ் வறுமைத்துயர் தோன்றுவாறு வாழ்வதற் கேற்ற ஒரு வசதி பரணருக்கு இருந்தது; புலவர்கள், தங்களைப் பேணிக்கொள்வதோடு, தங்களை நம்பி வாழும் பெரிய சுற்றத்தினையும் பேணவேண்டிய பொறுப்பினையும் உடையராவர்; அதனால், அரசர் அவையில் அமர்ந்து, அகமகிழ்ந்து வாழ்வதோடு, தம் சுற்றத்தினரின் வாழ்விற் கான பெரும்பொருளைப் பெறவேண்டிப் புரவலர்களை நாடிப் போகவேண்டியவ ராகின்றனர். அத்தகைய பொறுப்பு பரணருக்கு இல்லை; பரணரை நம்பி வாழும் சுற்றம் எதுவும் இல்லை. இதனால், 'அவரைக் காக்கவேண் டுமே' என்ற கவலையோ, 'அவரையும் அழைத்துச் செல்ல வேண்டுமே' என்ற ஏக்கமோ பரணருக்கு இல்லை. "புசித்து வாரேம்; பாரமும் இலம்" எனப் பெருமிதம் தோன்ற அவர் கூறுவதைக் காண்க. அதனாலேயே அவர், தமிழக கத்தின் எவ்வெப் பகுதிகளைக் காணவேண்டும் என்று விரும்பினரோ, அங்கெல்லாம் அவரால் செல்ல முடிந்தது; சுற்றத்திற்காக என்று பொருள் பெறவேண்டிய தேவை இல்லாத காரணத்தால், அரசர்களை அடுத்துப் பொருள் பெறவேண்டிப் பாடாது, அவர்க்கு அறிவுரை ஊட்ட, அவர்கள் செய்த தவறு கண்டு இடித்துக்கூறித் திருத்த அவரால் முடிந்தது; பேகனை நோக்கிப் பாடிய பாட்டில், "பசித்து வந்தவன் அல்லன் நான்; பசியோடு வருந்தும் சுற்றமும் எனக்கில்லை. ஆகவே, பொன்னும் பொருளும் வேண்டி வந்தேன் அல்லேன்; மனைவியைப் பிரிந்து அற னல்லன செய்யும் நின் செயல் கண்டு நாணி, நினக்கு அறி வுரை கூறி அறநெறி நிறுத்தவே வந்துளேன். ஆகவே, அறநெறி நிற்பாயாக; அதுவே எனக்கு அளிக்கும் பரிசில்," என்று பாடியுள்ளமை காண்க.

நிலத்தினின் தட்ப வெப்ப நிலைகளையும், காடும் மலை யும் ஆகிய இயற்கை நிலைகளையும் அறிவிக்கும் நிலநூல்

களும் (Geography), நாட்டின் அரசியல் நிலைகளை விளக்கும்வரலாற்று நூல்களும் (History) பழங்காலத் தமிழர் பெற்றிருக்கவில்லை. ஆகவே, அவற்றை அறிந்துகொள்ள வேண்டின், அவ்வவ் விடங்களுக்கு நேரில் சென்று அறிந்துகொள்வதுதவிர வேறு வழியில்லை. பரணர் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கும் மலைகள், ஆறுகள், ஊர்கள் இவற்றின் இயல்புகளை நன்ருகத் தெரிந்து பாடியுள்ளார்; பல அரசர்களைப் பார்த்துப் பாராட்டியுள்ளார்; வாகைப் பறந்தலை, வெண்ணிப் பறந்தலை, கூடற் பறந்தலை, பாழிப் பறந்தலை போன்ற போர்க்கள நிகழ்ச்சிகளை விளங்க விரித்துரைத்துள்ளார்; கழார்ப் பெருந்துறை நீர்விழாவில், ஆட்டனத்தி மறைந்தது; கரிகாலன் வெண்ணியில் பெற்ற கன்னிப்போர் வெற்றி குறித்து அழுந்தூரில் விழா நிகழ்ந்தது; நறுமா தின்ருள் ஒரு பெண் என்பதற்கு நன்னன் அவளைக் கொன்றது; பாழியில் வேளிர் பெரும் பொருள் சேர்த்து வைத்தது; தந்தையின் கண்ணைப் போக்கிய கோசரைப் பழிவாங்க வஞ்சினம்கொண்ட அன்னி மிஞிலியின் செய்கை; மனைவியைப் பிரிந்து, பரத்தையொடு வாழ்ந்த பேகன் செய்கை ஆகிய இந் நிகழ்ச்சிகளை அறிந்து கூறியுள்ளார். இவ்வாறு இவற்றை யெல்லாம் உள்ளவாறு உணர்த்தல், நேரில் உணர்ந்தார்க் கன்றி இயலாது; பரணர் தமக்கென ஓர் இடத்தை வரைந்துகொள்ளாது, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற எண்ணமுடையராய்த் தமிழகமெங்கும் சுற்றிக் கண்டு களித்து வாழ்ந்தவர் என்பது இதனுல் புலனும்.

## ௪. பெருமை

பெரும் புலவர்களுள் வைத்து மதிக்கத்தக்க பெருமை வாய்ந்த முதுபெரும் பெண்பாற் புலவராகிய ஔவையார், பரணர் பெருமை யறிந்து பாராட்டியுள்ளார். ஔவையார், அதிகமான் அஞ்சியைப் பாராட்டிப் பல பாக்கள் பாடியுள்ளார். தன் பாடலைப் பெற்றமையே அதிகனுக்குப் புகழாம் என்று அறிவார் அவர்; ஆனால், அவன் அதனினும் மிக்கோன் என்று பாராட்ட விரும்பினார்; அதற்கு அவர் கூறுகிறார்: "அதிய! நின் வெற்றியே வெற்றி! நின் வெற்றியின் சிறப்புக் கண்டு நான் பாராட்டியது பெரிது அன்று; நின் வெற்றி குறித்துப் பரணர் பாராட்டியுள்ளார் எனின், நின் வெற்றிச் சிறப்பை என்னென்பது! பரணர் பெரும் புலவர்; அவர் பாராட்டைப் பெறுவது எளியோரால் இயலாது; செயற்கரும் செயல் செய்த பெரியோரே அவர் பாராட்டைப் பெறுதல் இயலும். அதை நீ பெற்றுவிட்டாய்," என்று கூறிப் பரணர் பெருமையும், அவர் பாட்டின் அருமையும் தோன்றப் பாராட்டியுள்ளார் எனின், பரணரின் பெருமையே பெருமை! அவர் புலமையின் அருமையே அருமை!

" இன்றும்,
பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி ஏந்திய தோளே!"

யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர், "மனத்தது பாடவும், ஆசுவும் கெடவும் பாடல் தரும் கபிலர், பரணர், கல்லாடர்" எனக் கூறுவதாலும், தொல்காப்பியத்திற்கு உரைகண்ட பேராசிரியர், "ஆரியம் நன்று, தமிழ் தீது" என்றான் ஒருவனை அழிக்க நக்கீரர் பாடிய பாட்டு என்று மேற்கோள் காட்டிய "முரணில் பொதியின் முதற் புத்தேள் வாழி! பரண கபிலரும் வாழி!" என்ற பாட்டில், அகத்தியரோடு ஒப்ப, பரணரும் நக்கீரரால் வணங்கப்பட்டார் எனக் கூறுவதாலும், பரணர், அவ்விரு பேர் உரையாசிரியர்கள் காலத்திலேயே, தெய்வத்தன்மை உடையராக மதிக்கப்பட்டார் என அறிதல் பெறப்படும்.

# ௫. பண்புடைமை

பண்டைத் தமிழ்ப் புலவர்கள், தம் புலமையின் பெருமையினை உலகறியச் செய்வது என்ற ஒரே குறிக்கோள் உடையவரல்லர்; அது, பெரும்புலவர்க்கு அழகும் அன்று; மக்கள் வாழ்வு வளம்பெறத் தம் பாக்கள் துணைபுரிதல் வேண்டும் என்றே அவர்கள் விரும்புவர்; அது அவர்கள் கடமையுமாகும்; புலமைநலம் ஒன்றே அமைவது செய்யுட்குச் சிறப்பளிக்காது; உயரிய வாழ்விற்கு உறுதுணையாய கருத்துக்கள் பலவற்றையும் அது கொண்டிருத்தல் வேண்டும். இதை உணர்ந்தவர் சங்கப்புலவர்கள். அதனாலேயே ஆண் பெண் வாழ்க்கையின் வளங்கள் பலவற்றை வகுத்துக்காட்டும் அகத்துறைப் பாடல்களை அள்ளித் தந்துள்ளனர். பிறர் பழிகண்டு நாணலும், அவரை நண்ணி நல்லுரை பல நல்கித் திருத்தலும், பிறர் செய்த தவறு பெரிதாயின், அதை அவர் பேதைமை எனக் கொண்டு அமையாது, கடுஞ்சொல் கூறிக் கண்டித்தலும் செய்துள்ளனர்; பேர் அரசர் இருவர் தம்முட் பகைத்துக் கொள்வதால், அவர் நாடு அழிவதைக் கண்டு அழுதுபாடி, அதன் வழியே அவ்வரசர்க்கு அறிவுரைச்செய்து தடுத்துள்ளனர்; இப்பண்புகள், புலவருட் புலவராய பரணர் பால் இருந்தன எனக்கூறல் மிகை. அவர் பாக்களைப் பார்க்கும் வாய்ப்பினைப்பெற்ற எவரும், அவர்பால் உள்ள இவ்வரும்பெரும் பண்புகளை அறிவர்.

"பொறுமை, புலவர்க்கு அணிகலன்" என்ற அழிவுரை, பரணர் காலப் புலவர்களுக்குப் பொருந்தாது; "அவன் என்ன புலவன்? நான் பாடிய பாட்டிற்குப் பொருள்கூறத் தெரியுமா அவனுக்கு? நாலு பாட்டு நன்றாக மனப்பாடம் வராது; மேடையில் நின்று ஒரு வார்த்தை கூறவராது; இவனும் புலவனாய் வந்துவிட்டான்!" என்பன போன்ற புல்லுரைகளைப் பரணர் காலப் புலவர்களிடையே கேட்டல் இயலாது. இதற்கு மாறாக, ஒரு புலவரை, ஒரு புலவர் உயர்வாக மதித்துப் பாராட்டும்

பெருமையினைக் காணுகின்றோம். பரணர் பெரும்புலவர்; ஆகவே, அவர் தம்மையொத்த புலவர்களின் அருமை அறிந்தவராவர். பரணர், புலவர்களைப் பெயர் கூறிப் பாராட்டுவதற்கான சான்று கிடைக்கவில்லை எனினும், புலவர்களைப் பாராட்டும் பண்புடையவர் என்பதைக் காட்டும் சான்று ஒன்று கிடைத்துளது. மாந்தரம் பொறையன் கடுங்கோ என்ற சேர அரசனைப் பாடிய புலவர் பலராவர்; தாம் பாடிய அகநானூற்றுச் செய்யுளில் அப்புலவர்களைக் குறிப்பிடும் பரணர், 'அப்புலவர்கள் நாக்கு, இலவ மலர் போல் அழகுடையது; அஞ்சியோ, அல்லது அன்பு கொண்டோ, அறநெறியிற் பிறழாச் செம்மையுடையது; புலமையிற் சிறந்தார் அவர்; புகழிற் பெரியார் அவர்' என்று அவரையும், அவர் நாவையும் பாராட்டியுள்ளார்; "இலமலர் அன்ன அஞ்செந் நாவின், புலமீக் கூறும் புரையோர்." பரணர் பாராட்டைப் பெற்றோர் பலராவர்; அவருள் ஒருவராய ஆதிமந்தியார், அவர்காலப் புலவராவர்; ஆதிமந்தியாரின் அருமைக் கணவனார், காவிரி ஆற்றில் ஆழ்ந்துபோய்விட்டார்; தம்மையொத்த புலவர் ஒருவர்க்கு உண்டான அத்துயர், பரணர் உள்ளத்தைப் பெரிதும் உறுத்திற்று. காதலனை இழந்து, சுழழ்ந்த கண்ணளாய், அறிவும் பிறிதாகி அலைந்து திரிந்த அவ்வாதிமந்தியாரின் துயர்நிலையைப் பல பாக்களில் படம்பிடித்துக் காட்டியுள்ளார் பரணர்.

பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்கைதால் அறிவுடையவராவர்; நிலத்தின் இயல்பு, நீரின் தன்மை, காற்றின் ஆற்றல், மழையின் பயன், ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர்வாழ்வன, மரம், செடி, கொடி இவற்றின் பண்பு, பயன் ஆகிய இவற்றையெல்லாம் உணர்ந்து, உணர்ந்த தம் அறிவினை ஏற்ற இடங்களில் எடுத்து இயம்புவர்; இவ் இயற்கையுணர்வினைப் பெருமளவில் பெற்றுள்ளார் பரணர்; பரணர் பாக்களில் காணப்படும் விலங்குகள், பறவைகள், பிற உயிர்வகைகள், மரம் செடி கொடிகள் இவற்றையும், இவற்றின் இயல்புகளையும், அவற்றின் பய

ளையும் ஒவ்வொன்றாக விரித்துக்கூறின், நூலின் பரப்பு விரியுமாதலின், அவைகளை விடுத்து, அவர் அறிந்து கூறும் அரிய உண்மைகளை மட்டும் எடுத்துக்காட்டுகின்றேன். இரவின் இடையாமத்தில் கடல்மீன்கள் துயில் கொள்ளும். "கடல்மீன் துஞ்சும் நள்ளென் யாமம்". இறால் மீன்கள் பெருங்கூட்டமாகக் கூடிவாழும் இயல்பின; அவை கூடி எதிர்ப்பின், கடலிற் செல்லும் பெரும் நாவாய்களும் அழிவுறும். "கலம்சிதையத் தாக்கும் சிறுவெள் இறவின் குப்பை". பெருங்காற்று அடிப்பதாலும், பெருமழை பெய்வதாலும், இடியாலும், மின்னலும், நில நடுக்கங்களாலும் உலகிற்குக் கேடு உண்டாகும். "கால் பொருது இடிப்பினும், கதழுறை கடுகினும், உரும் உடன்று எறியினும், ஊறு பல தோன்றினும், பெருநிலங் கிளரினும்....மாயா இயற்கை." பரணர் பாக்கள் அறிவிக்கும் இயற்கைப் பொருள்களின் இயல்புகள் இவை.

புலவர்கள், 'கல்வியே கருந்தனம்' என்ற கருத்துடையரேனும், பொருளின் சிறப்பை உணராப் புல்லியரல்லர்; பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது பொருளே; பொருளில்லாதவன், ஈத்து உவக்கும் இன்பத்தையோ அல்லது துய்த்து உவக்கும் இன்பத்தையோ அடைதல் இயலாது; இல்லாதவன், இப்பிறவியிலேயே அல்லாமல், மறுபிறவியிலும் இன்பம் அடையான். "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்;" "இன்மைஎன ஒரு பாவி, மறுமையும் இம்மையும் இன்றிவரும்." பொருளின் அருமை அறிந்து, அதை ஈட்டியபின், அப்பொருள் பயன்படல் வேண்டுமாயின், இல்லார்க்குக் கொடுத்து உதவுதல் வேண்டும்; செல்வத்தைச் சேர்ப்பது, இல்லோர்க்கு ஈதற்கே ஆகும்; "செல்வத்துப் பயனே ஈதல்;" பேரழகு மிக்க பெண்ணொருத்தி வளர்ந்து பெரியவளாயின், அவள் தக்கான் ஒருவனை மணந்து வாழ்ந்தால்தான், அவள் வாழ்வும் வனப்பும் பயன்உறும்; ஆனால், அதற்கு மாறாக, மணமாகாக் கன்னியாகவே காலம் கழிக்க எண்ணுவாளாயின், அவள் அழகும் வாழ்வும் அழிந்துவிடும். அதைப்

போலவே, சேர்த்துவைத்த செல்வமும், பொருளற்ற வறியார்க்கு வழங்கிப் பயன்பெறுதல் வேண்டும்; அவ்வாறின்றி, பொருளின்றி வாடுவோர்க்கு வழங்காது வறிதே சேர்த்து வைக்கப்படுமாயின், பயனின்றிப் பாழாகும்;" "அற்றூர்க்கொன்று ஆற்ருதான் செல்வம், மிகநலம் பெற்ருள் தமியள் மூத்தற்று." இன்மை, ஈயாமை ஆகிய இவ்விரண்டின் கொடுமைகளையும் அறிந்தவர் பரணர்; ஆண்மகன் ஒருவன், ஒரு பெண்ணைக் கண்டான்; அவள் அணியும், அழகும், அருங்குணமும் கண்டு அவள் நல்லவள்; நமக்கு ஏற்றவள் என்று உணர்ந்தான்; ஏற்றவள் என்பதை உணர்ந்த அவன், அவள் தனக்குக் கிடைத்தற்கு அரியள் என்பதை உணரும் அறிவற்றவனாயினன்; அவ்வறிவு இல்லாமையால், அவளைப் பெறவேண்டும் என்ற பெருவேட்கை உடையனாய் வருந்துவானாயினன்; அந் நிலையில் அவன் கொள்ளும் ஆசை, 'பொருள் இல்லாதவன் பேரின்பம் பெறவிரும்பும் ஆசைபோல் அழியும்' என்று கூறி, இன்மையின் இன்னமையினை எடுத்துக் காட்டினர்.

"இல்லோன் இன்பம் காமுற் றுங்கு,
அரிது வேட்டனையால் நெஞ்சே! காதலி,
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியா தோயே."

ஒரு பெண், ஒருவனை மணக்க விரும்புகிருள்; ஆனல், அவள் எண்ணம் ஈடேருது என்று அவள் ஆருயிர்த் தோழியர் கூறுகின்றனர்; அதற்கு அவள், "விரும்பிய கண்வனைப் பெறேனாயின், என் தாய் பேணி வளர்த்த என் அழகு, தன்பால் வந்து இன்மைகூறி இரந்துநின்றவர்க்குச் சிறிதும் கொடுக்காது சேர்த்துவைத்தோன் செல்வம் பிறரால் பாராட்டப்பெறுதல் இன்றி மறைந்து அழிவதே போல் அழிக," என்று கூறியதாகப் பாடிய பாட்டில், பரணர், ஈயாது ஈட்டிய செல்வத்தின் இழிவினை விளக்குவதையும் காண்க :

" ஆர்வுற்று, இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள் போல்
பரந்து வெளிப்படா தாகி
வருந்துக தில்ல யாய் ஓம்பிய நலனே."

தமிழரசர்கள் ஆற்றலும் பெருமையும் உடையவரே; ஆனால், அன்பும், அருளும் உடையாரல்லர்; மக்களுக்கு இருத்தல்கூடாது என விலக்கப்பட்ட குணங்களாகிய பொறாமை, ஒற்றுமையின்மை போன்ற இழிகுணங்கள், அவர்கள்பால் எவ்வாறோ அமைந்துவிட்டன; தமிழகம் தாழ்ந்தமைக்குத் தமிழ்அரசர்கள்பால் இருந்த இக்குறை பாடுகளே காரணமாம். ஒருகாலத்தில், ஓர் அரச குலத்தில் ஆற்றல்மிக்க அரசன் ஒருவன் தோன்றிவிட்டால், அவன், தன் ஆற்றலை, ஏனைய இருபேர் அரசர்களும், மற்ற குறுநிலமன்னரும் உணரும் வண்ணம், அவர் நாடுகளை வென்று அகப்படுத்த நினைப்பதும், அவன் காலத்தில், பிற இரு நாடுகளை ஆளும் வலிவற்ற அரசர்கள், ஏனைய குறுநில மன்னர்கள் துணையைப் பெற்றுவது, அவ்வரசன் ஆற்றலை அடக்க, அவன் நாட்டின்மீது கூட்டாகப் படையெடுப்பதும், தமிழக வரலாற்றில் காணும் வழக்காறும். தமிழரசர்களின் இப் போராட்டத்தின் விளைவாய்த் தமிழகத்தின் நாடும், நகரமும், வீடும், வயலும் பாழாயின; நாட்டுமக்களும் அழிந்து பெருந்துயர் உற்றனர்; காணக் கலங்கும் இக் காட்சிகளைக் காணும் புலவர்கள் கண்ணீர்விட்டுக் கலங்கினர்; அவ்வழிவுக்காட்சியை, அரசர்களுக்கு அறிவு வரும் வகை பொதுவாக அமைத்துப் பாடுவதையும், அரசர்களை அடுத்து நின்று, "நின்வெற்றிச் சிறப்பால் விளைந்த பகைவர் நாட்டு அழிவு இவை" எனக்கூறி, அவன் வெற்றியைப் பாராட்டுவார்போல், அவன் அறியாமையினை அறிவுறுத்துவதும் செய்துள்ளனர். இப்பெரும் பணியில் பரணருக்கும் பங்குண்டு.

அரசன் படைக்கலம் ஏந்திப் போருக்குப் புறப்பட்டு விட்டான்; இனிப் புனல் சூழ்ந்து வளங்கொழிக்கும் இப் பணையூர், யானை புகுந்து ஆடிய குளத்துநீர், கலங்கிச் சேறுவது போல், அழகிழந்து அழிந்துவிடுமே!

"படைதொட் டனனே குருசில்! ஆயிடைக்,
களிறு பொரக் கலங்கிய தண்கயம் போலப்,
பெருங்கவின் இழப்பது கொல்லோ,
மென்புனல் வைப்பின்இத் தண்பணை ஊரே!"

குளத்துக் கயல்மீன்களைப் பிடித்து உண்ண, நாரைகள் கண்மூடிக் காத்திருக்கும்; காத்திருக்கும் நாரைகள், அஞ்சி ஓடுமாறு, அக்குளத்து வாளைமீன்கள், அவற்றின் மீது பாயும்; பாயும் வாளைமீன்களைக் குளத்தில் நீராடிச் செல்லும் மகளிர் பிடித்துக்கொண்டு வீடுசெல்வர்; இத் தகைய வளமிக்க ஊர், நாளை என்னும்! அவ்வூருக்குரிய அரசன், பகைவர்மீது போர்தொடுத்துவிட்டான்; இனி, அவ்வழகிய ஊர் அழியவேண்டி வருமே!

"கயலார் நாரை யுகைத்த வாளை,
புனலாடு மகளிர் வளமனை யொய்யும்,
ஊர்கவின் இழப்பவும் வருவது கொல்லோ!"

என்று பாடிப் புலம்பும் பரணர் பாடல்கள் பலப்பல.

பரணர், பல்லாண்டு வாழ்ந்து பல போர்க்களங்களைக் கண்டவர்; ஆதலின், போர்க்களக் கொடுமைகளை நன்கு உணர்ந்தவராவர்; போர்க்கள நிகழ்ச்சியால் பாழான ஊர்களில் வாழ்வார் துன்புறுவதினும், அப்போர்க்களத்திற்கு அண்மையில் வாழ்வோர், "இப்போரின் முடிவு என்னுமோ! பகைவர் படை எந்நேரத்தில் நம் ஊருள் புகுந்துவிடுமோ! எத்தகைய அழிவு நமக்கு வந்து சேருமோ!" என்று அஞ்சும் அச்சம், அவர் கண்முன் வந்து நிற்கின்றது; அவ் வச்சத்தால், அம்மக்கள் கண்கள் உறங்குவது இல என்பதையும் உணர்கிறார்; உணர்ந்த பரணர், தாம் பாடிய அகத் துறைப் பாடல் ஒன்றில், கவலையால் கண்துஞ்சாது இருக்கும் ஒரு தாயின் செயலுக்குப் பகைமுகத்து ஊர்களில் வாழ்வோர், கேட்டினை எதிர்நோக்கி இரவு பகல் கண் மூடாது கலங்கி நிற்கும் செயலை உவமை கூறிப் போரின் கொடுமை கண்டு கண்ணீர் விடுகிறார்.

"அன்னை,
ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தெனப்,
பகைமுக ஊரின் துஞ்சலோ இலன்."

பரணர், போர்க்களநிகழ்ச்சியொன்றைக் கண்முன் காட்டி அக்களத்தின் கொடுமையைச் சுட்டிக் கண்ணீர் விடும் மற்றோர் காட்சியும் உண்டு: "சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதனும், சோழன் வேற்பஃறடக்கைப் பெரு விறற் கிள்ளியும் போரிட்டு, இருவர் படையும் அழிய, இருவரும் களத்திலேயே மாண்டு மடிந்தனர்; களம் நோக்கி வந்த யானைகள் அனைத்தும் மடிந்து மலைபோல் வீழ்ந்து கிடக்கின்றன; வெற்றியன்றித் தோல்வியை என்றும் கண்டறியாக் குதிரைகள் எல்லாம், தம்மீது ஏறிய வீரர்கள் அழியத் தாமும் அழிந்து வீழ்ந்து கிடக்கின்றன; தேர் வீரர்கள் தேர்த்தட்டுக்களிலேயே தலை இழந்து இறந்து கிடக்கின்றனர்; போர்முரசுகள், முழக்குவாரின்றி விடப் பட்டுள்ளன; இருபெரும் அரசர்களும் மார்பில் வேலேற்று மடிந்து கிடக்கின்றனர்; களத்தின் காட்சி இது; இனி, அவர்கள் நாட்டின்நிலை என்னும்! எவ்வளவு அழகிய நாடுகள்! எவ்வளவு அமைதி இருந்தது அங்கே! புனலாடு மகளிர், ஆம்பல்தண்டை வளையலாக்கி அணிந்து, அவலை வாயில் அடைத்துக்கொண்டு நீரிற்குதித்து ஆடி மகிழ்வரே! அவ்வளவு வளமும், வனப்பும் மிக்க அந் நாடு இனி என்னுமோ!"

"வேந்தரும் பொருது களத்தொழிந்தனர்;
இனியே, என்னு வதுகொல் தானே, கழனி,
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்,
பாசவல் முக்கித் தண்புனல் பாயும்,
யாணர் அறா வைப்பின்,
காமர் கிடக்கைஅவர் அகன்தலை நாடே."

பரணர், இவ்வாறு, போரின் பின்விளைவால் நாடு அழிவதின் கொடுமையினை நாட்டார், நாடாள் அரசர் இவர்கள் மனத்தில் உறுத்துமாறு பாடி, அவர்கள் பிழை

யினை எடுத்துக்காட்டித் திருத்துவதோடு, அக் கொடுமைகளை, அரசர்க்கு நேருக்கு நேராகவே எடுத்துக் காட்டித் திருத்தியும் உள்ளார்.

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, போராற்றல் மிக்க பேர் அரசன்; பெரிய தேர்ப்படை உடையவன்; பேர் அரசர் பலரை வென்று, அவர்கள் நாட்டை அழித்து மகிழ்ந்தவன்; அவனுக்கு அறிவூட்டி அக்கொடுமையை ஒழிக்க எண்ணினார் பரணர்; அவனிடம் சென்றார்; அவன் நால்வகைப்படையின் பெருமையைப் பாராட்டினார்; அவன் ஆற்றலைப் புகழ்ந்தார்; இவ்வளவும் செய்துவிட்டு, இறுதியில் அவனுக்கு ஒன்றை நினைவூட்டினார். "அரசே! குழந்தைகள் அழுவதைக் கேட்டுள்ளனை அன்றே? குழந்தை அழுவதைக் கண்டு, அதை எடுத்து அணைத்து, ஆறுதல் கூறி அழுகையை மாற்றி அகமகிழ்வாரை அன்றி, குழந்தையின் அழுகையொலி கேட்டு அகமகிழ்ந்திருப்போரை யாண்டேனும் கண்டதுண்டோ? இல்லை யன்றே? குழந்தைக்குத் தாய் ஒருத்தி உள்ளாள் என்பதை உணர்ந்தும், குழந்தையின் அழுகையொலி கேட்கப் பொறாது, ஓடி எடுத்து அணைக்கும் அன்புள்ளம் படைத்தோர், குழந்தை தாயற்றது என்பதை அறிந்தாராயின், அந்நிலையில் அக்குழந்தையின் அழுகையொலி கேட்பின், அதை எடுத்தணைப்பர் என்பதில் சிறிதும் ஐயமில்லை யன்றே? இது உலகியல் என்பதை நீ உணர்வாய்; நின் பகைவர் நாட்டுமக்கள், இப்போது தங்கள் அரசனை இழந்து அல்லல் உறுகின்றனர்; நாட்டுமக்களுக்கு அரசனே தாய்; ஆகவே, அரசனில்லா அவர்கள், தாயில்லாச் சேய்களுக்கு நிகர்; அவர் துயர், தாயில்லாக் குழவியின் துயர்க்கு நேராம்; அதைக் காணும் நீ, உண்மையில் அன்புளத்தான் ஆயின், அவர் துயர் துடைத்தல் வேண்டும்; மாறாக, மேலும் துயர் விளைவிப்பையாயின், இரக்கமொன்றில்லா அரக்கன் எனப் பழிக்கப் படுவாய்," என்ற அறிவுரைகள் தோன்ற,

" தாயில் தூவாக் குழவி போல,
ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே."

என்று பாடியுள்ளார்.

வாழ்க்கையில் வழுக்கி வீழ்ந்தாரை, அறிவுரைகூறித் தெருட்டி நல்வழிப்படுத்தும் பண்பும் பரணர்பால் இருக்கக் காண்கிறோம். பேகன் என்பான் ஒரு பெருங் கொடை வள்ளல்; அவன் புகழ்கேட்டு, அவனைக் கண்டு பாடச் சென்றார்; அங்கே அவன் இல்லை; அவன் மனைவி கண்ணகி யைக் கண்டு அவன் யாண்டுளன் என்று வினவினார்; அவர் கேள்வி, அவள் கண்களில் நீரைத் தேக்கிற்று; அவள், அதைத் தன் விரல்களால் துடைத்துக்கொண்டே, " அவன் ஈண்டிலன்; என்போல்வாள் ஒருத்தியோடு உறவு கொண்டு முல்லைநல்லூரின்கண் வாழ்கின்றான்," என்றாள். கேட்ட பரணர், மனம் பதறினார்; பெரிய வீரனும், சிறந்த கொடைவள்ளலுமாகிய அவனிடத்தில் தகாத ஒழுக்கம் இருக்கலாமா என்று எண்ணினார்; அவனைப் பாடி மகிழ் வித்து, அவன் அளிக்கும் பரிசில்பெற்று மீள்வதினும், அவனை நல்லோன் ஆக்குதல் தம்போல்வார் கடனும் என உணர்ந்தார். " நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக் கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு," என்று கொண் டார்; உடனே, பேகன் வாழ்ந்திருந்த முல்லைநல்லூருக்குச் சென்றார்; அங்கே, தம்மையொத்த புலவர்களாகிய கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் முதலியோரும் அவ னுக்கு அறிவுரை கூறிக்கொண்டிருப்பதைக் கண்டார்; பேகனை நெருங்கிப், " பேக! எம்மையொத்த பெரும்புல வர்க்குப் பரிசில் அளிக்கவேண்டும் என்று விரும்புவை யாயின், இன்றே தேர்ஏறிச்சென்று, நின் மனைவியோடு வாழ்தல்வேண்டும்; அதுவே நீ எமக்களிக்கவல்ல பரிசில்," என்று கூறினார். அவனும், அவர் வேண்டுகோளை மறுத் தற்கஞ்சி, முல்லைநல்லூர் விட்டுத் தன்பதி அடைந்து மனைவியோடு மகிழ்ந்து வாழ்வானாயினன்; பேகனின் இவ் வாழ்வில் பரணருக்கும் பங்குண்டென்பது பெருமைக் குரிய செயலன்றோ?

இவ்வாறு ஒழுக்கத்தின் இழுக்கியவரை, உபதேசம் உரைத்துத் திருத்தும் அருள் உள்ளம் உடையவராகிய பரணர், பெருங்குற்றம் புரிந்தாரைப் பலர்முன் பழிதூற்றிக் கண்டிக்கும் பேராண்மையும் உடையவராவர்.

நன்னன் என்பவனுக்கு உரியது ஒரு மாந்தோட்டம்; அதை அடுத்துப் பாய்ந்தோடும் ஒரு நீரோடை; ஒருநாள் பெண்ணொருத்தி நீராடச்சென்றாள் அவ்வோடைக்கு. அங்கே, அவ்வோடை நீர், அடித்துக் கொணர்ந்தது ஒரு மாங்காய்; அக்காய் நன்னனுக்குரியது என்பதை அறியா அப்பெண், அதை எடுத்துத் தின்றுவிட்டாள். தன் தோட்டத்துக் காயைத் தண்ணீர்த்துறையில் பெண் ணொருத்தி பற்றித் தின்றுவிட்டாள் என்பதை நன்னன் அறிந்தான்; உடனே, அவளைக் கொன்றுவிடக் கட்டளை யிட்டான்; அப்பெண்ணைப் பெற்றோர் அதை அறிந்தனர். அவர்கள் நன்னன் இயல்பினையும் அறிவார் போலும்! அவள் செய்தது குற்றமா? அது குற்றமாயினும், அதற்குக் கொலைதானா தண்டம்? அவ்வளவு பெரிய குற்றமா அது? என்றெல்லாம் எதிர்த்து வழக்காடாது, "அவள் உயிருக்கு ஈடாக, எண்பத்தோர் யானைகளும், அவள் நிறையளவு பொன்னால் செய்த அவள் போன்ற பாவையும் தருகிறோம்; ஏற்றுக்கொண்டு அவளை விடுக," என்று வேண்டிநின்றனர். ஆனால், அவன் அதை ஏற்றுக்கொள் ளாது, அவளைக் கொல்வதையே மேற்கொண்டான். இக் கொடுஞ்செயல், அக்கால மக்கள் உள்ளத்தையெல்லாம் உறுத்தியது; பரணர்க்கும் இச்செய்தி எட்டிற்று. நன்னன் பெருவீரன்; படைவலிமை உடையவன்; போர் பல வென்றவன்; அவனைப் பழிப்பின் கேடு உண்டாம் என்று எண்ணாமல், "பெண்கொலை புரிந்த நன்னன்" என்று பழிப்பட்டம் சூட்டி, "வரையா நரகத்துச் செல்க" என்று வன்புரையும் வழங்கினார். பரணரின் பேராண்மையே பேராண்மை!

பரணர்பால் அமைந்திருக்கும் வரலாறு உரைக்கும் பண்பு, பலராலும் பாராட்டற்குரியது; தமிழகத்தின்

வரலாற்றினை அறியும் வகைகாணமாட்டாமல் திகைத்து நின்ற நம்மவர்க்கு, அதை அறிவிக்கும் வழிகாட்டியாய் நின்று பெருந்துணை புரிந்தவர் பரணராவர்; தமிழகத்தின் முதற்பெரும் வரலாற்று நூற் பேராசிரியர் (First Historian) பரணரே. பரணர் பாடிய பாக்கள், பிற பெரும்புலவர் பாடிய பாக்களின் எண்ணிக்கையை நோக்க, மிகமிகக் குறைவே; அவர் பாடியனவாக நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் எண்பத்தைந்து; இவ்வெண்பத்தைந்திலும் வரலாறு உரைப்பதற்கென்றே அமைந்த புறப்பாடல்கள் இருபத்துமூன்று மட்டுமே; இவற்றுள்ளும், சேரன் செங்குட்டுவன் ஒருவனைப்பற்றி மட்டுமே பத்துப் பாடல்களுக்குமேல் உள்ளன. எஞ்சிய சிலவற்றுள், வரலாற்றுச் சிறப்பு வாய்க்காது, பொதுவாக அக்கால அரசர் இயல்பினை விளக்கும், மகட்பாற் காஞ்சித்துறை தழுவிய பாடல்கள் நான்கு. ஆக இவையெல்லாம் நீங்க, வரலாற்று விளக்கம் அளிக்கும் பாடல்கள் எட்டே; இவை அளிக்கும் வரலாற்றுக் குறிப்புக்களும் அவ்வளவு மிகுதியன்று; இவை எட்டாலும் அறியக்கூடியன அறுவர் வரலாறு மட்டுமே; ஆனால், அவரால் அறிந்து உரைக்கப்பட்டோர் ஐம்பதின்மர்க்கும் மேலாம்; இவருள் மேற்கூறிய எழுவர் நீங்க, ஏனையோர் வரலாறெல்லாம், அவர் பாடிய அகத்துறைப் பாடல்களினாலேயே அறியப்படும். அவர் பாடிய அகத்துறைப் பொருள் தழுவிய பாடல்கள் அறுபத்திரண்டு. இவற்றுள் ஐம்பதுக்கு மேற்பட்ட பாடல்கள் புறத்திணைத் தலைவர்களின் வரலாறுகளை விளக்குவனவாம்.

அகத்துறைப் பாடல்கள் யாருடைய வரலாற்றினையும் சிறப்பாகக் குறிப்பதின்றிப், பொதுவாக அக்கால ஆண், பெண் கூடிவாழ்ந்த வாழ்க்கை வகைகளை வகுத்துரைப்பனவாம். அகத்திணைத் தலைவர்களை அல்லாமல், புறத்திணைத் தலைவர் பெயரைக் குறிப்பிடல் கூடாது:

" மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்,
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்."

யாண்டேனும், அப் புறத்திணைத் தலைவர் குறிப்பிடப் படின், அது அகத்திணைப் பொருளுக்குச் சிறிதும் கேடு விளைக்கா நிலையிலேயே வருதல் வேண்டும்:

"புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது,
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே."

என்று வரையறை விதிப்பர் ஆசிரியர் தொல்காப்பியனார். பரணர், இத்தகைய வரையறைகள் உள; அவற்றை மதித்தல் மதியுடையோர் செயல் என்பதை உணர்ந்து, அவற்றிற்குக் கட்டுப்பட்டே, புறத்திணைத் தலைவர் வரலாறு பலவற்றையும், அவ்வகத்துறைப் பாடல்களிலேயே அமைத்துப் பாடியுள்ளார் என்றால், வரலாறு உரைப்பதில் அவருக்கிருக்கும் உள்ள வேட்கையை என்னென்பது!

மூவேந்தருள் சிறந்த இருவராகிய, கரிகாற் சோழனையும், சேரன் செங்குட்டுவனையும் பாடியுள்ளார்; நன்னன் வரலாற்றை விளங்க அறிவதற்குப் பரணர் பாக்களே பெருந்துணை புரிகின்றன; ஆதிமந்தி ஆட்டனத்தி வரலாற்றைத் தமிழகம் அறியச் செய்தவர் இவர்; கடைஎழு வள்ளல்களுள், பாரி ஒருவன் நீங்க, எஞ்சிய அறுவரையும் பாராட்டியுள்ளார்; இவர்களே அல்லாமல், படைத்தலைவர்களாகவும், பெருவீரர்களாகவும், கொடைவள்ளல்களாகவும் விளங்கிய பலரையும் நமக்கு அறிமுகம் செய்துள்ளார்; தமிழகத்தின் தலைசிறந்த மலைகளையும், பேராறுகளையும், பெரும் நகரங்களையும் அறிந்து அறிவித்துள்ளார்; தமிழ்மக்கள், தமிழ்அரசர்கள் இவர்களின் வாழ்க்கையில் காணும் அரிய வழக்கங்களை எல்லாம் எடுத்துக் காட்டியுள்ளார். சுருங்கக் கூறின், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த, தமிழ்நாட்டு அரசியலை அவர் துணை இன்றி அறிதல் இயலாது எனலாம்; பரணர்பால் காணப்பெறும், வரலாறு உரைக்கும் இப் பண்புடைமைக்குத் தமிழுலகம் என்றென்றும் நன்றி செலுத்துமாக.

மனக்கவலை, அகக்குறை, புறக்குறை இரண்டாலும் உண்டாம்; அகக்குறை, தாம் மேற்கொண்ட இல்லறத்தின்

நல்லுறுப்பாம் மனைவியும், மக்களும் மாண்பிலராயவழி யும், புறக்குறை வாழும் நாட்டில், நன்மக்களும், நல்லாட்சி யும் இல்வழியும் உண்டாம். இவ்விரு வழியும் குறை யில்லையாயின், அந்நாட்டு வாழ்மக்கள் கவலையற்றவராவர்; கவலையற்றவர், நல்லுடல் பெற்றுத் திகழ்வர்; நல்லுடல் பெற்றோர், நரையும் திரையும் இன்றி நெடுநாள் வாழ்வர். இவ்விரு நிலையினும், அகவாழ்வே, புறவாழ்விற்குத் துணை புரியும் இயல்புடையதாம். ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரும், அகவாழ்வு நன்கு வாய்க்கப் பெற்றாராயின், அந்நாட்டுப் புறவாழ்வும் வளம் பெற்று விளங்கும்; அவர் கள் அகவாழ்வில் அமைதி யின்றாயின், நாட்டுப்புறவாழ்வு எத்துணைப் பெருமையுடையதாயினும் பயனின்றாம்; ஆகவே, அகப்புறவாழ்வினும், அகவாழ்வே சிறப் புடைத்து என்பது விளங்கும். 'யாண்டுபலவாகியும், நரையில ஆகுதல் யாங்காகியர்?' என வினவியோர்க்கு விடையளித்த ஒரு புலவர், கூறிய காரணங்களுள்,

"மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையர் என் இளைஞரும்."

என அகவாழ்வு அமைதியினையே முதற்கண் நிறுத்தி யுள்ளமையும் அறிக.

இவ்வாறு, அகவாழ்வின் நல்வாழ்வே நாட்டிற்குத் தேவை என்பதை அறிந்த தமிழர்கள், அவ் வாழ்வைத் தூய்மைக்கண் நிறுத்தப் பெரிதும் முயன்றுள்ளனர். அவர்கள்தம் அம்முயற்சியின் பயனே அகத்துறைப் பாடல்கள்; அவை ஒவ்வொன்றும் இல்லற வாழ்வின் நல் லறத் துணைவர்களாய் விளங்கும் தலைவன், தலைவி, தோழி, தாய், தந்தை ஆகியோர்க்குரிய அருங்கடனை அறிவுறுத் தும் இயல்புடையனவாம். அவ்வறிவுரையினை ஆற்றும் புலவர்கள், அதைச் செய்த முறை, அறிவுடை உலகம் அறிந்து, வியக்கத்தக்க அரிய முறையாகும். 'அறம் செய்க', 'சினம் ஆறுக', 'புலன் அடங்குக', என அறி வுறுத்தினரல்லர். தாம் அறிவுறுத்த வேண்டிய அறவுரை

களை, ஏற்றுப் போற்றினார் வரலாற்றைப் புனைந்துரைத்து, அதை மக்களுக்குக் காட்டி, அதை உணர்ந்து தாமும் மேற்கொள்ள அவர்கள் உள்ளத்தைத் தூண்டியுள்ளார்கள்.

உளநூல் உணர்ந்தோர், நீதி உரைகளை நேரே கூறுவதினும், அந்நீதிகள் பொதிந்த கதைகளைக் கூறுவதே பெரும்பயன் அளிக்கும் என்பதை அறிவர். புலவர்கள், மக்கள்மனப்பண்பு அறிந்தவர்கள்; ஆகவே, தாங்கள் உணர்த்த விரும்பிய விழுமிய கொள்கைகளைச் சிறு கதைகள் போன்ற சிறுசிறு நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டி, அவற்றின் வாயிலாக உணர்த்துவாராயினர். அவ்வாறு உணர்த்த வந்த பாடல்களே அகத்துறைப் பாடல்கள்; அகத்துறைப் பாடல்கள் ஒவ்வொன்றும் வாழ்வைப் பண்படுத்தும் பண்புடையன. ஆகவே, அவை அறிதற்குரியன; தமிழில் அகத்துறைப் பாடல்கள் அளவின்றிப் பெருகியுள்ளன; அவ்வளவையும் அறிதல் இயலாது; ஆகவே, பரணர் பாடிய அகத்துறைப் பாடல்கள் சிலவற்றையாவது கண்டு, அவற்றின் வழி, அவர் காட்டும் அறிவுப்பாதையில் அடியெடுத்து வைப்போமாக.

மனம், இன்பநாட்டம் உடையது; இன்பம்தரும் பொருள்கள் உலகத்தில் எவ்வளவோ உள்ளன; அவ்வெல்லாப் பொருள்களையும் அடைதல் வேண்டும் என மனம் விரும்பும்; அதில் தவறும் இல்லை; ஆனால், அப்பொருள்கள் இன்பம்தரும் என்பதை அறியும் அறிவு, அப்பொருள்கள் தனக்குக் கிடைக்கக் கூடியதுதானா என்பதையும் அறிதல் வேண்டும்; கிடைக்கக் கூடியது என்பதை அறிந்தவழி, அவற்றைப் பெறும் வழிவகைகளை எண்ணிப் பெற முயற்சித்தல் நன்று. ஆனால், அப்பொருள் கிடைக்காது என்பதை அறிந்தால், பின்னரும், அப் பொருளையே எண்ணி ஏங்கியிருத்தல் கூடாது; கிட்டாதாயின் வெட்டென மறத்தல் வேண்டும். இவ்வுண்மையினை உரைத்து அறிவூட்ட விரும்பும் பரணர் பாட்டொன்றுளது:

அறிவு, உரு, திரு ஆகியவற்றால் சிறந்த ஆண்மகன் ஒருவன், பேர் அழகும் பெருங்குணமும் படைத்த பெண்ணொருத்தியைக் கண்டான்; அவள் நலன் பலவற்றையும் அறிந்தான்; அவளும் தன்பாட்டு அன்பு கொள்ளும் நல்லவள் என்பதையும் அறிந்தான்; அவளைப் பெற வேண்டும் என்று பேரவாக் கொண்டான். ஆனால், அவன் முயற்சியெல்லாம் வீணாயின. அவளை அடைய ஒவ்வொரு நாள் இரவிலும் அவன் முயற்சிசெய்தான். ஒருநாள், ஊர்க் காவல் கடுமையாக இருந்தது; அதனால் ஊருள் நுழைய முடியாமலே திரும்பி விட்டான். மற்றொரு நாள், அவன் அவ்வூருக்குப் புதியவன் ஆதலின், அவ்வூர் நாய்கள் அவனைக் கண்டு குரைத்துத் துரத்தத் தொடங்கின; இதனால், தன் வரவை ஊரார் உணர்வர் என அஞ்சி அகன்று விட்டான். ஒருநாள், காவலர் காவலையும் கடந்து, ஊர் நாய்கள் உணர்தலினின்றும் தப்பி வீடுவரை வந்து விட்டான்; ஆனால், அங்கே தலைவியின் தாய் உறங்காது விழித்துக் கொண்டிருப்பது கண்டு காரியம் கைகூடாமல் கலங்கி மீண்டான்.

வேறோர் நாள், காவலர் கண்ணிற்கும் அகப்படாமல், நாய்களின் தொல்லையையும் கடந்து வந்து சேர்ந்தான்; தாயும் உறங்கி விட்டாள்; ஆனால், அந்நிலையில் நிலவு வெளிப்போந்து பேரொளி பரப்பிக் காயத் தொடங்கியது கண்டு, களவொழுக்கத்திற்குத் தகுதியுடையதன்று அக்காலம் எனக் கருதி ஊர் திரும்பி விட்டான். ஒருநாள் எவ்விதத் தடையுமின்றி வந்து சேர்ந்தான்; வந்து தலைவிக்குத் தன் வருகையை அறிவிக்கும் குறியாக, அவ் வீட்டருகே உள்ள மரத்தின்மீது சிறு கல்லொன்று வீசி, மரத்துவாழ் பறவைகளைக் குரல் கொடுத்து எழுந்து அமரச் செய்தான். ஆனால், அதற்குமுன் யாது காரணத்தாலோ அப்பறவைகள் குரல் எழுப்ப, அதை அவன் வருகை அறிவிக்கும் குறியாகக் கொண்ட தலைமகள், ஆங்கே வந்து அவனைக் காணாது கலங்கி வறிதே மீண்டாள்; அதனால், இம்முறை அவன்வந்து குறிசெய்தா

னாகவும், அவள், அதையும் முன்போன்ற நிகழ்ச்சியாகவே கொண்டு வராது நின்றுவிட்டாள்; அதனால் அன்றும் அவளைக் காணாதே மீண்டான்.

இவ்வாறு, அவள் கிடைத்தற்கு அரியவள் என்பதை உணர்ந்தான்; நல்லள் என்பதை உணர்ந்த தன் அறிவு, அவள் அரியள் என்பதை முன்னரே உணர மறந்ததை எண்ணி வெட்கினான்; தன் நெஞ்சை நோக்கி, "நெஞ்சே! இன்பம் பெற விரும்புதல் எல்லோர்க்கும் இயல்பு எனினும், அவ்வின்பத்தைக் குறைவறப்பெற விரும்புதல் நிறை செல்வம் பெற்றார்க்கே இயலும்; ஆதலின், இன்ப வேட்கையராதல் அவர்க்கு நன்று; ஆனால், பொருளற்ற வறியவன், பேரின்பம் பெற விரும்புதல் இயலாது; கூடாது; விரும்புவது வீண். அவனால் அவ்வின்பத்தைப் பெற முடியாமையோடு, அவ்வேட்கையால் உடல் மெலிந்து கேடு பலவும் உண்டாம். இவ்வுண்மை உணரா வறியோன் ஒருவன், இன்பம் பெற ஏங்கித் தவிப்பதைப் போல், நீயும் அவள் கிடைத்தற்கு அரியள் என்பதை அறியாது, அவள் நல்லள் நல்லள் என்று அரிய பொருள்மீது ஆசை கொள்கின்றனையே, நின் அறிவின்மையை என்னென்பது!" என்று கூறி இரங்குவானாயினன்:

"இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு
அரிது வேட்டனையால்; நெஞ்சே! காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியா தோயே" (குறுந். கஉ0.)

இவ்வாறு தன் அறியாமையினைத் தன் நெஞ்சின் மேல் ஏற்றிக்கூறித் தன் தவறுணரும் அத்தலைமகன் உள்ளம், உயர்பெரு வழிகாட்டியாதல் காண்க.

ஒருவர்தம் எச் செயலுக்கும் விழைவும் வெறுப்புமே காரணமாம். ஒருவர் நல்லது செய்கின்றனர் எனின், அதற்கு நல்லது செய்யவேண்டும் என்ற அவர் நல்லெண்ணம் மட்டுமே காரணமாகாது; இது செய்தால் இன்ன புகழ் உண்டாம் என்ற விழைவோ, அல்லது இதைச்

செய்யாது போனால் இன்னின்ன கேடுகள் உண்டாம் என்ற அச்சமோதான் அதற்குக் காரணமாம்; இறைவனை வணங்கி வழிபடுவதற்கும், இவ்வன்பும் அச்சமுமே காரணங்களாம் என அப்பரும் கூறுவர்:

"அஞ்சி ஆகிலும் அன்புபட் டாகிலும்,
நெஞ்சம்! வாழி! நினைநின்றி யூரனை"

என அவர் பாடுவர். இவ்வாறே ஒருவர் தவறு செய்யாது-வாழ்க்கையில் இழுக்காது-வாழும் நல்வாழ்விற்கும், அவ் விழைவு வெறுப்புக்களே, ஆசை அச்சங்களே காரணமாம். தவறு செய்தல் கூடாது என இயல்பாக எண்ணுவோர் உலகத்தில் அரியர். தவறு செய்வதற்கான சூழ்நிலை உலகில் நிறைய உள. ஆகவே, எவரும் எளிதில் தவறு செய்து விடுவர். ஆனால், அவர்கள் தவறு செய்யாமைக் குக் காரணம், தம் உள்ளம் மட்டும் ஆகாது; தாம் தவறு செய்வதைப் பிறர் அறியின் பழிப்பரே என்ற அச்சமே அவர்கள் தவறு செய்யாமைக்குக் காரணமாம்; அவ் வச்சமே, அவர் தவறு செய்வதைத் தடுத்து நிறுத்த வல்லது; இவ்வாறு பழிகண்டு அஞ்சும் அச்சம் நல் லோர்க்கு அணியாம். அவ்வச்சம், அவர்களை உயர்நிலை உய்க்கும்; இவ்வுண்மை உணர்ந்த பரணர், தவறு கண்டு அஞ்சும் ஆண்மகன் ஒருவனை நம்முன் நிறுத்தி அறி வூட்டுவர்.

பரத்தையர் ஒழுக்கம், தமிழகத்தில் எவ்வாறோ தழைத்துவிட்டது; குணங்களால் நிறைந்தோன் எனப் போற்றப்படும் தமிழ்மகனும், தவறான அவ்வொழுக் கத்தை மேற்கொண்டுவிடுகிறான்; அவ்வாறு தவறினான் ஒரு தலைமகன். பரத்தை ஒருத்தியோடு நட்புக்கொண்டு வாழலாயினன்; ஒருநாள் அப்பரத்தை தலைவனை நோக்கி, "தலைவ! இதோ பார், தவறிய நின் ஒழுக்கத்தை நின் தலை மகளுக்கு அறிவித்து விடுகிறேன்," என்று விளையாட்டா கக் கூறினாள். அவள் சொல் கேட்ட அவன், அந்நிலையே அயர்ந்து நின்று அறிவும் பிறிதாகி நடுங்கலாயினன்.

தலைமகள் - தன் மனைவி - அறியாவரை அஞ்சாது தவறு செய்த அவன், தன் தவற்றினை அவளுக்கு அறிவிப்பர்; அவளும் அறிவாள் என அறிந்தவுடனே அஞ்சும் அவன் உள்ளம் உண்மையில் உயர்ந்ததேயாகும்; ஒழுக்கத்தின் விழுப்பத்தை உணர்ந்த உள்ளமாகும்; இன்று இல்லையாயினும் ஒருநாள் அவன் தவறு நீங்கிய நல்வாழ்வு வாழத் துணை புரியும்.

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்," என்பவாகலின், தவறு கண்டு அஞ்சும் அவ்வுள்ளம் அனைவர்க்கும் தேவை என்பதை, அத்தலைமகள் வழியாகப் பரணர் உணர்த்துவது உணர்ந்து உயர்வோமாக!

"உள்ளுதொறும் நகுவேன் தோழி! வள்ளுகிர்
மாரிக் கொக்கின் கூரல அன்ன
குண்டுநீர் ஆம்பல் தண்துறை ஊரன்,
தேங்கமழ் ஐம்பால் பற்றி என்வயின்
வான்கோல் எல்வளை வெளவிய பூசல்,
சினவிய முகத்துச் சினவாது சென்று, நின்
மனையோட்கு உரைப்பல் என்றலின்......
நன்ன ராளன் நடுங்கு அஞர் நிலையே." (நற்: ௧OO.)

## ௯. பரணர் மேற்கொண்ட உவமைகள்

செய்யுள் அணிகள் எண்ணற்றன உள எனினும், பழந்தமிழ்ப் புலவர்கள் உவமை அணி ஒன்றையே பெரிதும் விரும்பி மேற்கொண்டனர்; தெரிந்த ஒரு பொருளைக் காட்டித் தெரியாத ஒரு பொருளை விளக்குவது உவமை. தாம் உணர்ந்த ஒன்றைப் பிறர்க்கு உணர்த்தவும், பிறர் உணர்ந்த ஒன்றைத் தாம் உணரவும் பயன்படுவதே மொழி; உணர்த்தலும் உணர்தலுமாகிய தொழிற்கு உறுதுணையாய் நிற்பது உவமை; உணர்ந்த ஒன்றை உணராதார்க்கு உணர்த்த விரும்புவோர்க்கு, அவர் செயலை எளிதாக்கித் துணைபுரிவதில் உவமை போல் சிறந்தது வேறு இல்லை. ஆகவே, சங்ககாலப் புலவர்கள், உவமை அணி ஒன்றையே விரும்பி மேற்கொண்டனர்.

பரணர் மேற்கொண்ட உவமைகள், பாக்களின் பொருளைத் தெளிவாக்கப் பயன்படுதலோடு, அக்கால மக்களின் மனவளத்தை விளக்குவனவாகவும், அரிய அறவுரைகளை அறிவிப்பனவாகவும் அமைந்து, கற்றோர்க்குக் கழிபேர் உவகை அளிக்கும் தன்மையன; அவர் கையாண்ட உவமைகள் அவ்வளவையும் எடுத்துக்கூறல் இயலாது; ஆகலின், அவற்றுள் சிலவற்றை மட்டும் ஈண்டு நோக்குதல் நன்றாம்.

குழந்தை, தாயின் அணைப்பிலேயே இருந்து வளர்வது; தன்குறையையும் முறையையும் சொல்லால் எடுத்து இயம்பும் ஆற்றல் அற்றது; அதனால், அவை நேர்ந்த போதெல்லாம் அழும் இயல்புடையது; குழந்தை அழுவது கண்டால், அதற்குக் குறையுண்டு என அறிந்து ஆவன செய்வது தாயின் கடமை; அத்தாய் தன் கடமையில் தவறின், குழந்தை அழுது அழுது சாகும்; தாயுள்ள குழந்தைகளின் நிலையே இதுவெனின், தாயற்ற குழந்தைகளைப்பற்றிக் கூறவேண்டுவதில்லை; அதன் குறையறிந்து காப்போர் இன்மையால், அது ஓயாது அழுதுகொண்டேயிருக்கும். குழந்தைகளின் இவ்வியல்பினை உணர்ந்த

பரணர், அதை ஏற்ற இடத்தில் எடுத்தாண்டுள்ளார். ஒரு நாட்டு மக்களுக்கு அந் நாட்டு அரசன் தாய்போன்றவனாவன்; அவன், அவர்கள் குறையறிந்து போக்கிக் காப்பாற்றக் கடமைப்பட்டவனாவன். அத்தகையான், பகையரசன் ஒருவனால் கொல்லப்பட்டால், அந்நிலையில் அவன் நாட்டு மக்களின் துயர் பெருகும்; தங்கள் துயர்நிலை அறிந்து போக்குவாரை இன்றி வருந்துவர். இதையும் பரணர் அறிவார்; ஆகவே, அவ்வாறு அரசனை இழந்து அலமரும் மக்களுக்கு, தாயிழந்து வருந்தும் குழந்தைகளை ஒப்பிட்டு, இருவர் துயர்நிலையையும் உள்ளவாறு உணர்த்தியுள்ளார்.

"தாயில் தூவாக் குழவி போல
ஓவாது கூவும் நின் உடற்றியோர் நாடே." (புறம்: ௪.)

மழை, நீரற்று வற்றிய குளத்திலும் வித்தி வான் நோக்கும் வயல்களிலும் பெய்து பெரும்பயன் அளிக்கும். அதுவே, ஒன்றும் விளையாக் களர் நிலத்திலும் பெய்து பயனின்றியும் கழிகிறது. இவ்வாறு பெய்தால் பயன் அளிக்கும் இடமிது; ஆகவே, ஈண்டுப் பெய்தல் நன்று; பெய்தாலும் பயன்பெறாத இடம் இது; ஆகவே ஈண்டுப் பெய்தலால் நன்மை இல்லை என வரையறுத்துக்கொள்ளாது எங்கும் ஒப்பப் பெய்யும். மழையின் மாண்புறு இவ்வியல்பை உணர்ந்த பரணர், அதை இரவலர் தம் தகுதி, தகுதியின்மைகளை அறிந்து நோக்கும் அறிவிலனாய்த் தன்பால்வந்து இரப்பார் யாவர்க்கும் பொருள் கொடுத்துப் போற்றும் பேகனுக்கு உவமை ஆக்குவர்:

"அறுகுளத்து உகுத்தும், அகல் வயல் பொழிந்தும்
உறும் இடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரிபோலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடை மடம் படுதல்" (புறம்: ௧௪௨.)

சேரநாட்டுத் தலைநகரைச் சென்று சேரும் பரணர், இடைவழியில் உள்ள நீர்நிலையில் மீன்பிடிக்கும் சிரல்

என்ற மீன்கொத்தி நீர்க்குட் பாயுங்கால், தன் அலகைக் கீழ்நாட்டிக்கொண்டு மூழ்கி, வெளியேறுங்கால் அலகை மேனோக்கி நிறுத்திக்கொண்டு எழுவதைக் கண்டார். தலைநகருள் புகுந்தார்; போர்வீரன் ஒருவன் வீட்டில் அவன் மார்பில் உண்டான பெரிய போர்ப்புண் ஒன்றை வெள்ளிய ஊசிகொண்டு தைப்பதைக் கண்டார்; ஊசி வீரன் உடலுட் புகுந்து, செந்நீரில் படிந்து வெளிவரும் அக்காட்சி நீர்நிலையில் தாம் கண்ட காட்சியை அவருக்கு நினைப்பூட்டிற்று; உடனே அவர்,

> "மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
> சிரல்பெயர்ந் தன்ன நெடுவள் ளூசி
> நெடுவசி பரந்த வடுவாழ் மார்பு" (பதிற்: சுஉ.)

என்று பாடி உவமை கூறினர்.

சேரநாடு நோக்கிச் செல்லும் பரணர், இடைவழியில் மழை இல்லாமல் மலைகள் வறண்டு கிடப்பதையும், மூங்கில்கள் உலர்ந்து முறிவதையும், அருவிகள் நீர் அற்று வறிதே கிடப்பதையும் கண்டார். சேரநாடு சேர்ந்தார்; அந்நாட்டில் பேராறு பெருகி ஓடுவதையும், நீர்பெற்ற உழவர் பொன்னேர் பூட்டிப் பூரிப்பதையும், அதற்கேற்ப வானம் வழங்குவதையும் கண்டார். வழங்குவோர் இல்லாமல் வறுமையால் வாடிவந்தவர் பரணர்; வந்த தம்மைச் செங்குட்டுவன் விரும்பியேற்று வேண்டுவன அளிப்பதைக் கண்டார்; உடனே பரணர்க்கு வந்த வறண்ட வழிகளும், வளம் கொழிக்கும் சேரநாட்டு நிலையும் நினைவிற்கு வந்தன:

> "இரும்பனை திரங்கப் பெரும்பெயல் ஒளிப்பக்
> குன்றுவறங் கூரச் சுடர்சினம் திகழ,
> அருவி யற்ற பெருவறற் காலையும்
> அருஞ்செலற் பேராற்று இருங்கரை உடைத்துக்
> கடியேர் பூட்டுநர் கடுக்கை மலைய
> வரைவில் அதிர்சிலை முழங்கிப் பெயல்சிறந்து
> ஆர்கலி வானம் தளிசொரிந் தாங்கு" (பதிற்று: சங.)

என்று செங்குட்டுவன் கொடைத்தொழிலிற்கு உவமை கூறினர்.

தடைகளை உடைத்தெறிந்து ஓடும் இயல்புடையது வெள்ளம். பெருமழை பெய்தவழி வந்த வெள்ளமாயின், அதன் அழிவாற்றலிற்கு அளவே இராது. உப்பு, சின்னீர் பட்டவழியும் கரைந்து மறையும் மாண்புடையது! இவ்வியல்புடைய உப்பைக்கொண்டு, அத்தகைய பெரு வெள்ளத்தைத் தடைசெய்வதற்கான அணையினை அமைக்க எவரும் எண்ணார். வெள்ளம் அவ் வுப்பணையால் தடை யுறாது; மாறாக, அதை இருந்த இடம் தெரியாமல் அழித்து ஓடும். மகளிர்க்கு, நாண் தாயிற் சிறந்தது எனினும், காமம் உற்றார்மாட்டு அந்நாண் நிற்றல் இயலாது.

> " காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
> நாணுத்தாழ் வீழ்த்த கதவு." (திருக்குறள்: கஉடுக.)

என்பர்.

> " என்னொடும் வளர்ந்த பொற்பார் திருநாண்,
> பொருப்பர் விருப்புப் புகுந்து நுந்தக்,
> கற்பார் கடுங்கால் கலக்கிப் பறித்து;
> எறியக் கழிக "

என்று கூறுகிறாள் ஒரு பெண். காமம் நாணிற்கு அடங்கி யிராது, அதை அழித்து ஆட்சி செய்யும் ஆற்றல் உடை யது; இவற்றின் இயல்பினை உணர்ந்த பரணர், நாணிற்கு அடங்கியிராது பெருகித்தோன்றும் காமத்திற்கு, உப்பு அணைக்கு அடங்கிவிடாது அதை அழித்துப் பெருகும் வெள்ளத்தை உவமை கூறினர்.

> " மிகுபெயல்
> உப்புச்சிறை நில்லா வெள்ளம் போல
> நாணுவரை நில்லாக் காமம் " (அகம்: உ0அ.)

நீர்நிலை ஒன்றில் உள்ள மீன்களைப் பிடித்துண்ண வந்து சேர்ந்தது ஒரு நாரை. வந்த நாரை, தன் வருகை

யினை மீன்கள் அறிந்துகொள்ளுமோ என்று அஞ்சிற்று. அதனால், அது தன் கால்களை ஓசையெழாவண்ணம் மெல்ல மெல்ல எடுத்துவைத்து நடந்து செல்லலாயிற்று. நாரையின் இந்நடை, பரணர்க்குப் பெருநகையும் வியப்பும் அளித்தது; அது மட்டும் அன்று; நாரை நடந்துசெல்லும் அக்காட்சி, காவல் செறிந்த ஒரு வீட்டிலே களவாடச் சென்ற கள்வன் ஒருவன், தன் வருகையை வீட்டாரும், வீட்டுக் காவலரும் அறிந்துகொள்ளாவண்ணம் தன் அடிகளை ஒலி எழாதவாறு மெல்லமெல்ல எடுத்துவைத்து நடந்து செல்வதையும் அவருக்கு நினைப்பூட்டிற்று. உடனே, பரணர் அவ்விரண்டையும் ஒன்றுசேர்த்து,

"நீளிரும் பொய்கை இரைவேட் டெழுந்த
வாளை வெண்போத்து உணீஇய நாரை, தன்
அடிஅறி வுறுதல் அஞ்சிப் பைப்பையக்
கடியிலம் புகூஉம் கள்வன் போலச்
சாஅய் ஒதுங்கும்" (அகம்: உஎசு.)

என உவமை கூறி அமைத்தார்.

எவரும் ஏறி அடையவொண்ணா அருமையும், பெருமையும் உடைய மலை ஒன்று; அதன் உச்சியில் மிகப் பெரிய தேன்கூடு ஒன்று இருந்தது; அதைக் கண்ணுற்றான் ஒருவன்; கண்ட அவனுக்கு அத்தேனை எவ்வாறேனும் உண்ணவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று; எழுந்த ஆசை அளவின்றி வளர்ந்துகொண்டே சென்றது; நாக்கிலும் நீர் ஒழுகத் தொடங்கிவிட்டது. ஆனால், விரும்பும் அவன் நிற்கும் இடமோ, அப் பெருமலையின் அடிவாரம்; வரைஏறிப் பெறலாம் என எண்ணினாலோ, அவன், வரையேற இயலாவாறு இருகையும் இழந்த முடவன்; ஆகவே, வரையேறிப் பெறுவதும் அவனால் இயலாது. அந் நிலையில், ஆசையோடு நிற்கும் அவன், முடம்பட்ட தன் இரு கைகளையும் குடையாக வளைத்துக்கொண்டு, அத் தேனடையைச் சுட்டிக் காட்டிக்கொண்டே, எச்சில் ஒழுகும் தன் வெறும்வாயை நக்கி நக்கி இன்புறலாயினன்.

அழகும் ஆண்மையும் அன்பும் அருளும் நிறைந்த தலைமகன் ஒருவன்பால் உள்ளத்தைக் கொடுத்துவிட்ட ஒரு பெண், அவனை அடைந்து அருகிருந்து இன்புற விரும்புகிறாள்; ஆனால் அத் தலைவனை அடைதல் தன்னால் இயலாது என்பதை உணர்கிறாள்; பெண்ணியல்பால் தன் காதலைப் பலர்க்கும் கூறிப் பயன்பெறும் உரிமையை அவள் இழந்துவிட்டாள்.

"உடம்பும் உயிரும் வாடியக் காலும்
என்னுற் றனகொல் இவையெனின் அல்லது,
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை"

என அவள் உரிமை பறிக்கப்படுதலும் காண்க. ஆகவே, அந் நிலையில் அவள் அவனை அடைந்து இன்புறுதற்கு மாறாக, அவனைக் காண்பதைமட்டும் பெற்றே இன்புற லாயினள். இதனால் அவள் நிலை, அம்முடவன் நிலையோடு ஒத்திருப்பது உணர்ந்த பரணர்,

"நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருங் கை முடவன்,
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்து,
சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவார் ஆயினும்,
பல்காற் காண்டலும் உள்ளத்துக் கினிதே." (குறுந்: கூ0.)

என்று பாடியுள்ளார்.

கணவரோடு கலந்து வாழுங்கால் கவின் பெற விளங்கும் மகளிர் நுதல், கணவர் பிரிந்தக்கால், மாசுற்ற மதியே போல் மங்கித் தோன்றும். அம் மாற்றத்தைப் புலவர்கள் பசலைநோய் என்பர்; பசலையாவது, "மகளிர் கணவரைப் பிரிந்த காலத்து அவர்க்கு முன்புள்ள நெற்றியின் ஒளி கெட்டுக் கண்ணாடியில் வாயினால் ஊதியபொழுது ஆவி படர்ந்து ஒளி மழுங்குவதுபோல வேறுபட்டுக் காட்டும் தன்மை," என்று விளக்கம் கூறுவர்; பசலை, விளக்கற்றம் பார்த்துப் புகுந்து அவ்விளக்கு வந்தக்கால் அகலும்

இருளேபோல், கணவர் பிரிந்த உடனே பற்றிக்கொண்டு, அவர் வரவு அறிந்தவுடனே அற்று நீங்கும் இயல்புடையது; இந் நோயின் தன்மையை ஒரு தலைவி, தன் தோழிக்கு விளக்க விரும்புகிறாள்: "தோழி! நாம் நாள் தோறும் நீர் கொண்டுவரும் குளத்தில், நீர்மீது படர்ந்திருக்கும் பாசி, நீர்க் குடத்தை அழுத்தியவழி அகன்று, அதை வெளியே எடுத்த உடனே கூடிவிடுவதைக் கண்டுள்ளனை அன்றே; அப் பாசியைப்போலவே, இப் பசலையும் கணவர் வந்தக்கால் அகன்று, அவர் அகன்றக்கால் பற்றிக்கொள்கிறது," என்று கூறி விளக்கினாள். இவ்வாறு, மகளிர்க்கு வரும் இந் நோயின் தன்மையை அம் மகளிர் அறிந்த பொருளையே உவமையாகக் காட்டி விளக்கும் பரணர் புலமையின் சிறப்பே சிறப்பு.

"ஊருண் கேணி உண்துறை தொக்க
பாசி அற்றே பசலை; காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே" (குறுந்: ௩௯௯.)

ஆம்பலும் தாமரையும் கலந்து படர்ந்துள்ள பெரிய நீர்நிலை ஒன்றில், ஆம்பல் மலர்களுக்கிடையே அழகிய தாமரை ஒன்று மலர்ந்துளது. பெருங்காற்று வீசத் தொடங்கியது; ஆம்பலினும் தாமரை மலர் சிறிது பருத்தது ஆகவே, அது காற்றால் அலைப்புறாமல் இருந்த இடத்திலேயே நிலைத்து நிற்கிறது; ஆனால், ஆம்பல் மலர்கள் உருவுச் சிறுமையும் உயர்ந்த தண்டும் உடைமையால் இடம் பெயர்ந்தும் தலை அசைத்தும் ஆடத் தொடங்கிவிட்டன; அவ்வாறு அசையுங்கால் அவை, தாமரைமலர் வரையும் சென்று தாழ்ந்து மீண்டு மேலெழலாயின; இவ் வியற்கைக்காட்சியினைக் கண்டார் பரணர்; அவர், அரண்மனையில் இருந்து பழகியவர்; அங்கே அவர் காணும் காட்சியொன்றை, இவ் வியற்கைக்காட்சி நினைவூட்டிற்று; அரசமகள் ஒருத்தியும் அவள் தோழியர்களும் ஒன்றுகூடி இருக்கின்றனர்; திடீரென அரசமகளுக்கு ஆற்றொணாச் சினம் பிறந்துவிட்டது; அவள் சினம்

கண்ட அவள் தோழியர், உடலும் உள்ளமும் ஒருங்கே நடுங்க எழுந்து இருகைகூப்பித் தொழுது வணங்குவா ராயினர்; இவ்விரு பெரும் காட்சிகளையும் கண்ட பரணர் உள்ளத்தில் அழகிய உவமையொன்று உருப்பெற்றது; சினம்கொண்ட அரசமகளை அவள் தோழியர் கைகூப்பி வணங்குதல்போல், காற்றால் அலைப்புண்ட ஆம்பல் மலர்கள், தாமரை மலரிற்குத் தலைசாய்த்து வணங்குகின்றன என்று, அழகிய பாடல் ஒன்றைப் பாடிமுடித்தார்:

"சுடர்த் தொடிக் கோமகள் சினந்தென அதனெதிர்
மடத்தகை ஆயம் கைதொழு தாங்கு
உறுகால் ஒற்ற ஒல்கி ஆம்பல்
தாமரைக் கிறைஞ்சும் தண்துறை." (நற்: ௩00.)

நாட்டிலும் காட்டிலும் வாழ்ந்து பழகியவர் பரணர்; நாட்டில், நாகரிகமிக்க நகரங்களில், பஞ்சை வில்லால் அடித்து வேறு வேறாகப் பிரிப்பதைப் பார்த்துள்ளார்; வில்லால் அடியுண்டு பஞ்சு மாசுநீங்கி வெண்ணிறம் மிக்கு மேலெழுந்து பறந்து செல்வதையும் பார்த்துள்ளார்; காடுகளில் செல்லுங்கால், கருத்துத் திரண்டுவந்து பெரு மழை பெய்த மேகம், தான் கொண்டுவந்த நீர்முற்றும் வற்றிப்போக, வெண்மை நிறம்பெற்று மென்மையுடைய தாயவழி மேலெழுந்து செல்வதையும் கண்டுள்ளார்; ஆகவே, அவ்வாறு வெளுத்துச்செல்லும் மேகம், வில்லால் அடியுண்ட வெண்பஞ்சு போன்றது என்று உவமை காட்டி உரைத்துள்ளார்:

"அழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி
எஃகுறு பஞ்சிற் றாகி வைகறைக்
கோடுயர் நெடுவரை ஆடும்." (நற்: உசஎ.)

இவ்வாறே பரணர் பாக்களில் காணப்படும் உவமைகளை எல்லாம் எடுத்துக் காட்டிக்கொண்டே செல்வனாயின் ஏடு விரியும்.

இனி, பரணர், தம் காலத்தில் தாம் அறிய நிகழ்ந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஏற்ற இடங்களில் உவமையாக எடுத்துக் காட்டியுள்ளார்; அவ்வாறு காட்டிய நிகழ்ச்சி களைமட்டும் எடுத்துக்கூறி மேலே செல்வோம் :

எவ்வி யிழந்த வறுமை யாழ்ப் பாணர் பூவில் வறுந் தலை; நன்னன் நறுமா கொன்று நாட்டிற் போக்கிய கோசர்; பெண்கொலை புரிந்த நன்னன்; அகுதை தந்த மடப்பிடிப் பரிசில்; அத்தியை ஈர்த்த அந்தண் காவிரி; கரிகாலன் முன்நிற்க மாட்டாராய் ஓடிய பீடில் மன்னர் ஒன்பதின்மர்; வேளிரால் அழிவுற்ற காமூர்; வேண் மகளிர் பூசலை அகுதை களைதல்; கணவனை இழந்த ஆதி மந்தி; கோசர் உயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய அன்னி மிஞிலி; பசும்பூட் பாண்டியன் கொடுத்த கள் ளூடைப் பெருஞ்சோறு; பாழியாங்கண் வேண்முது மாக் கள் வைத்த அருங்கல வெறுக்கை; ஆற்றுப் புனலில் ஆடின அத்தி; இவை, அவர் காட்டிய வரலாற்று உவமைகள்.

## ஏ. பரணர் காலமும் அவர்காலப் புலவர்களும்

தமிழ்மொழியும், தமிழரசும் சால உயர்ந்த நிலையில் ஒளிர்வுற்றிருந்த காலம் சங்ககாலமாகும். அச்சங்ககாலம், கி. பி. இரண்டாம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகும் என்பர் வரலாற்றுநூற் பேராசிரியர் பலரும்; ஆகவே, சங்ககாலப் புலவர்களுள் தலைமைக்கண் நின்ற பரணர், (கஅ00) ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவராவர்.

பரணர் வாழ்ந்திருந்த காலத்தில், தமிழகத்தை முடிவேந்தர் மூவரும் ஆண்டுவந்தனர்; அவர்கட்கு அடங்கியும் அடங்காமலும் ஆங்காங்கே குறுநில மன்னர் பலர் வாழ்ந்து வந்தனர்; பேர் அரசர்கள், தம்மை யொத்த பேர் அரசர்களோடும் ஏனைய குறுநில மன்னர்களோடும் பகைகொண்டு போர் புரிந்து தம் வெற்றியை நிலைநாட்டுவதை விரும்பினர்; பேர் அரசர்களின் துணைகொண்டும் கொள்ளாதும் தம்முட் போரிடுவதைக் குறுநிலமன்னர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்; அவர்கள் முடிவேந்தர்களுக்குத் துணை போவதும், ஒரோவழி அவர்களையே பகைத்துக் கொள்வதும் உண்டு. பெரும்படையும் பேராற்றலும் பெற்ற பேரரசர்கள், தங்கள் நாட்டுக் குடிகள் அச்சமின்றி வாழ வழிசெய்து தருவர் எனினும், பகைவர்களைத் தீயிட்டு எரித்தலும், அந்நாட்டு விளைநிலங்களைத் தம் யானை முதலியவற்றுல் அழித்தலும் செய்து ஆங்கு வாழ் மக்களுக்குத் துயர்பல தருவர். பரணர்காலத் தமிழ் அரசர்கள் வடநாடு சென்று ஆரியஅரசர்களை வென்று, அவர்கள் இமயத்தில் தங்கள் கொடியைப் பொறித்தும் வந்துள்ளனர்.

தமிழகம் வளத்தால் தழைத்திருந்தது; களத்தே வெற்றிடம் காண இயலாவண்ணம் நீண்ட கதிர்களைக்கொண்ட நெற்கட்டுக்களால் நிறைந்திருக்கும்; நெல் அரிவோர், தமக்கு உணவு முதலியன கொண்டுவரும் வண்டிகள் வழியில் சேற்றில் சிக்கிக்கொள்ளாவண்ணம், அவ்விடத்திய

சேற்றுநிலையினைப் போக்க, செங்கரும்பினை அரிந்து போட்டு அடுக்குவர்; தமிழக வீடுகளில், வரும் விருந்தினரை விரும்பி யேற்று உபசரிக்கும் தொழில் மிகுதியால், பெண்கள் தங்கள் கணவன்மார் வருகையினையும் அறியாராவர்.

தமிழக நகரங்களில் மண்ணை அரைத்துக் கட்டிய மாடங்கள் நிறைந்திருக்கும்; விழா இல்லாக் காலங்களிலும் மக்கள் ஆரவாரம் மிகுந்திருப்பதால், ஊரார் நெடிது விழித்திருப்பர்; மாநகர்களில் வளம் பல தலைமயங்கும் ஆவண வீதிகள் பல இருக்கும்; இரவில் நகர்க்காவலர், உறங்காக் கண்ணராய் ஊர்சுற்றிக் காவல் புரிவர்; அக்காலப் படைவீரர்கள் பலமொழி அறிந்திருந்தனர்; அவர்கள், தங்கள் மார்பில் உண்டாய புண்களை, ஊசியும் நூலும் கொண்டு தைத்து மருந்து வைத்து மாற்றுவர்.

தமிழ்மக்கள், திரைகடலோடிப் பெரும் பொருள் திரட்டுவர்; புறநாட்டு வாணிபம், மரக்கல வழியே நடைபெற்றது; சங்கை அரத்தால் அறுத்து வளையல், கழங்கு முதலியன செய்வர்; பொன்னின் உரை காணும் கட்டளைக் கற்களைத் தமிழர்கள் அறிந்திருந்தனர்; பொன்னாற் பல அணி செய்து மகிழ்ந்தனர்; உப்பையும் மீனையும் விற்றுப் பிழைப்போரும் இருந்தனர். பஞ்சை வில்லால் அடிக்கவும் பழகியிருந்தனர்.

தம் மகளை விரும்பி வந்தோர் வேந்தரேயாயினும், அவர் தரும் பொருள் எத்துணைப் பெரியவாயினும், அவர்பால் பெருந்தகைமை இல்லாயின், அவர்க்குத் தம் மகளைக் கொடுக்க விரும்பாப் பேர் உள்ளம்படைத்த தந்தையர் பலர் தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர். தம்மையொத்த வீரரோடன்றி இழிந்தோருடன் பொர விரும்பாப் பேராண்மை மிக்க தறுகண் மறவர் பலரும் இருந்தனர்.

நீர் விழாவும் பிறவிழாவும் சிறக்கக் கொண்டாடினர்; இளைஞர், அவலை வாயிலடைத்துக்கொண்டு நீரிற் குதித்து ஆடுவர்; பண்டைத் தமிழர்கள், பேய்க்குப் பலி கொடுத்

தனர்; நரகம் உண்டு, மாண்டார்போய்ப் பிறக்கும் மறுமை உலகம் உண்டு என நம்பினர்.

அரிபெய் சிலம்பு, ஆம்பலம் தொடலை, அரம்போழ் அவ்வளை, இழை அணி போன்ற அணி வகைகளை அணிந்திருந்தனர்; வேனிற்காலத்தில் வெளியே சென்று பொழில்களில் தங்கிப் பொழுதைக் கழித்தனர்; விழாக் காணச் செல்வுழித் தேர் ஏறிச்சென்றனர்; இவை போன்ற செல்வவாழ்வும் வாழ்ந்தனர்; பரணர் காலத் தமிழகத்தின் பண்பாட்டினை, அவர் பாக்களில் கண்டு மகிழ்க.

பரணர்காலப் புலவர் பலராவர்; சங்கப் புலவர்கள் நாற்பத்தெண்மர் என்றும், நாற்பத்தொன்பதின்மர் என்றும் கூறுவர்; ஆனால், சங்க இலக்கியங்களாகிய, பத்துப்பாட்டு எட்டுத்தொகைகளில் வரும் பாடல்களைப் பார்க்குங்கால் சங்கப்புலவர்களின் எண்ணிக்கை, முற் கூறிய எண்ணிக்கையைவிடப் பத்து மடங்கு பெருகித் தோன்றும். சங்கப்புலவர்கள் அனைவரும் ஒரேகாலத்தில் வாழ்ந்திருந்தவராகார்; சங்க காலம் என்பது, நூறு அல்லது, நூற்றைம்பது ஆண்டுகள்வரை நீடித்து இருந்ததாக அறிஞர்கள் கூறுவர்; ஆகவே, அப் புலவர்கள் எல்லாம், இந்த நூறு அல்லது நூற்றைம்பது ஆண்டுகளில் முன்னும் பின்னுமாக வாழ்ந்தவராவர் என்றே கொள்ளுதல் வேண்டும்.

பரணர் பாராட்டைப் பெற்றவர்கள், அவர்களைப் பாராட்டிய புலவர்கள் என்ற முறைகொண்டு நோக்கிய வழி, **அம்மூவனார், அரிசில்கிழார், ஆதிமந்தியார், இடையன் சேந்தன் கொற்றனார், ஊன்பொதி பசுங்குடையார், ஔவையார், கபிலர், கல்லாடனார், கழாத்தலையார், கழைதின்யானையார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், காப்பியாற்றுக் காப்பியனார், குடவாயிற் கீரத்தனார், குண்டுகண்பாலியாதனார், குமட்டூர்க் கண்ணனார், பாலைக் கௌதமனார், பெருங்குன்றூர் கிழார், மதுரைப் பேராலவாயர், வன்பரணர்** முதலிய புலவர் பெருமக்கள்

பரணர் காலத்திற்குச் சிறிது முன்னோ பின்னோ வாழ்ந்தவ ராவர் என்பது புலனும்.

இவர்களுள், ஆதிமந்தியாரைப் பரணர் அறிந்து பாராட்டியுள்ளார்; ஔவையார், பரணர் பெருமை அறிந்து பாராட்டியுள்ளார்; ஆகவே, ஆதிமந்தியாரை முற்பட்டோராகவும், ஔவையைப் பிற்பட்டோராகவும் கொள்ளலாம்.

அரிசில்கிழார், கபிலர், பெருங்குன்றூர்கிழார் ஆகிய மூவரும், பரணர் பாராட்டிய வையாவிக் கோப்பெரும் பேகனைப் பாடியுள்ளனர்.

பெருங்குன்றூர் கிழார், பேகனையேயன்றிப் பரணர் பாராட்டிய சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியையும் பாடியுள்ளார்.

கழாத்தலையார், பரணர்பாராட்டைப் பெற்ற சேர மான் குடக்கோ நெடுஞ்சேரலாதனையும், சோழன் வேற் பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியையும் பாடியுள்ளனர்.

கழைதின்யானையார், பரணர் பாடிய வல்வில் ஓரி யைப் பாடியுள்ளார்.

நக்கீரர், கபிலர், பரணர் ஆகிய முப்பெரும் புலவர் களுள், முதற் பெரும் புலவராகவும் புலவர்கள் தலைவ ராகவும் நக்கீரரையே கூறுவர் எனினும், காலமுறைப்படி கணக்கிட்டால், அவர்களுள் பரணரே முதற்பெரும் புலவ ராவர் என்று கொள்ளலாம்.

## ஆ. பரணரைப்பற்றிய புராணக் கதைகள்

பரணர்வரலாறு குறித்துப் பல நூல்கள் பல கதைகள் கூறுகின்றன; அவரைப்பற்றிக் கூறும் நூல்கள் பழைய திருவிளையாடல் எனப்படும், செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம் முதலிய தமிழ்நூல்களும், ஆலாஸ்ய மஹாத்மியம் எனப்படும் வடமொழிநூலுமாம்.

(1) திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில், சங்கப்பலகை கொடுத்த திருவிளையாடல், ஊமை தமிழறிந்த திருவிளையாடல் என்ற இரு பகுதிகளும், பரணர் முதலிய புலவர்கள் வரலாற்றை விளங்க உரைக்கின்றன; அவை கூறுவன:

மதுரையில் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்து வந்த புலவர்கள், தங்கள் புலமையின் தகுதி திறமைகளுக்கேற்ப, வரிசையாக அமர்வதற்கு விரும்பினர்; அதற்கு அவர்கள் அனைவரும் இருப்பதற்கேற்ற பெரிய இருக்கை (ஆசனம்) ஒன்று வேண்டியிருந்தது. உடனே, கபிலர், நக்கீரர், பரணர் முதலாம் புலவர்கள் அனைவரும், சொக்கநாதன் கோயில் அடைந்து, தாங்கள் அனைவரும் இருந்து தமிழாராயத்தக்க இருக்கையொன்றை அளிக்குமாறு, அக்கோயி லிடம்கொண்ட பெருமானை வேண்டினர்; இறைவனும், புலவர்கள்தம் வேண்டுகோட்கிரங்கி, ஒருவர் இருக்கத்தக்க பலகை ஒன்றை அளித்தார். அதைக் கண்ணுற்ற புலவர்கள், மறுவலும் இறைவனை நோக்கிப் "பெருமானே! நாங்கள் அனைவரும் இருக்கத்தக்க பேரிருக்கை வேண்டினோம்; ஒருவரே இருக்கத்தக்க இப் பலகை கொண்டு நாங்கள் என் செய்வோம்," என்று குறைகூறினின்றனர்.

அவ்வேளை, "இப்பலகை புலவர்தம் புலமை அறிந்து அவர் இருக்க இடம் வளர்ந்து கொடுக்கும்," என்று ஒரு

குரல் கேட்டது; அதுகேட்ட புலவர்கள் அகமகிழ்ந்து, பலகையைக் கொண்டுசென்று சங்க மண்டபத்தே வைத்து முதலில் நக்கீரர் அதில் அமர்ந்தார். அவரை அடுத்துக் கபிலர் அமர்ந்தார்; பின்னர் பரணர் அமர்ந்தார்; இவ்வாறே அது வளர வளரப் புலவர்கள் அனைவரும் அதில் அமர்ந்து மகிழ்ந்தனர்.

புலவர்கள் தாங்கள் அவ்வப்போது பாடிவிட்டுச் சென்ற பாடல்கள் பலவாய்ப் பெருகியதைக் கண்டு, அவற்றுள் விளக்கம் அற்றனவற்றை நீக்கிவிட்டு நல்லனவற்றைக் கொள்ள விரும்பினர். ஆனால், அதைச் செய்துமுடிக்கும் ஆற்றல் தங்களுக்கில்லை என்பதை உணர்ந்தனர். தங்கள் ஆற்றாமைகண்டு மனம்நொந்து இருந்த புலவர்கள் முன்னே இறைவன் ஒரு புலவராய் வந்து அப்பாடல்களை வரிசைப் படுத்தி அவர்களோடு கலந்து வாழ்ந்துவந்தார்.

ஒருநாள், பொருள்இலக்கணத்தைப் புலவர்களுக்கு அறிவுறுத்த விரும்பிய இறைவன், "அன்பின் ஐந்திணை" என்று தொடங்கும் செய்யுளைக் கொண்ட களவியல்நூலை ஆக்கி அவர்களிடம் கொடுத்தார். அவர் நூலைப் புலவர்கள் எல்லாம் பாராட்ட, நக்கீரர் மட்டும் குறைகூறிப் பழித்தார். அதைக் கண்ட இறைவன், அவர் செருக்கை அழிக்க எண்ணங்கொண்டு அரும்பொருள் செறிந்த அழகிய பாடல் ஒன்றைப் பாடி, "இதற்குப் பொருள் கூறுக," எனப் புலவர்களை நோக்கிக் கூறினார். அந்நிலையிலும் தம் செருக்குக் குலையாது நின்ற நக்கீரர், "இப்பாட்டு பிழையுடையது," என்றார். உடனே இறைவன், "இவன் பொறாமை உடையன்; ஆகவே, இவன் குற்றம் என்றால் என் கவி குற்றமுடையதாகாது. நீங்கள் யாரேனும் கூறுங்கள், என் கவி குற்றமுடையதா?" என்று கேட்டுநின்றார். புலவர்கள் வாய்திறந்திலர்; அந்நிலையில், "உங்கள் முன்னிற்கும் புலவன், மதுரைச் சொக்கன்; உங்கள் பகைபோக்க வந்துளான்; பகையொழிந்து அவனை வணங்கி வழிபடுங்கள்!" என்றொரு குரல் கேட்டது.

உடனே புலவர்கள அனைவரும் அவரை வணங்கி நின்றனர் அவரும் மறைந்தார்.

புலவர்கள் அனைவரும், இறைவன் செய்த களவியலுக்கு உரையெழுதி முடித்தனர். பின்னர்த் தங்கள் உரைகளின் தகுதி தகுதியின்மைகளை அறிந்து கூறுமாறு இறைவன் திருமுன் நின்று முறையிட்டனர். இறைவன், புலவர் வடிவில் வந்துநின்று, "இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனார் ஊமை உருத்திரசன்மன்முன் உங்கள் உரைகளைக் கூறி, அவன் கூறும் முடிவினை ஏற்றுக்கொள்ளுங்கள்," என்று கூறினார். புலவர்கள், ஊமை உரைவளங் காண்பது எவ்வாறோ என உளங்கவன்றனர்; புலவர் மனக்கவலை அறிந்த மன்றாடி, "உங்கள் உரைகளை அவன்முன் படியுங்கள்; யார் உரை, கேட்டவழி கண்ணீர் உகுப்பனோ, அவ்வுரையே மெய்யுரை என உணருங்கள்," என்று கூறி மறைந்தார். புலவர்கள் ஊமை மகனை மன்றம் கொணர்ந்து மண்டபத்தேற்றி, அவன்முன் தம் உரைகளைப் படித்தனர்; ஊமை, நக்கீரர் கபிலர் பரணர் ஆகிய மூவர் உரை கேட்டபோதே கண்ணீர் உகுத்தமை கண்டு, அவ்வுரைகள் மூன்றுமே சாலச்சிறந்தன என அறிந்து, கலந்து வாழ்ந்திருந்தனர்.

(2) பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்துச் 'சங்கப்பலகை தந்த படலம்,' 'சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்' ஆகிய இரண்டும், பரணர் வரலாறாகக் கூறுவன இவை:

காசியில் அசுவமேதயாகம் செய்துமுடித்த பிரமன், தம் மனைவியர், சரசுவதி, சாவித்திரி, காயத்திரி முதலியோருடன் கங்கை நீராடச் சென்றான்; இடைவழியில் விஞ்சையன் ஒருவன் பாடிய இன்னிசை கேட்டு மயங்கிய சரசுவதி, அங்கேயே நின்றுவிட்டாள்; கங்கையடைந்த நான்முகன், நாமகள் இல்லாமை கண்டு, அவளை நீக்கி, அவ்விருவருடன் கங்கைமூழ்கிக் கரை ஏறினான். அந்நிலையில் அங்கு வந்துசேர்ந்த நாமகள், "நான் இல்லாதபோது

நீவிர்மட்டும் நீராடியது எவ்வாறு?" என்று வெகுண்டு வினவினாள். தான் செய்த குற்றத்தை மறந்து, தன்னைப் பழிக்கும் அவளை, நான்முகன் நோக்கி, "இக்குற்றம் நீங்க நாற்பத்தெட்டுப் பிறவி, மக்களாய்ப் பிறப்பாயாக," என்று சாபம் கொடுத்தான்; பின் சாபம் கேட்டுவருந்தும் மனைவியின் துயர்நிலை கண்டு இரங்கி, "நின் உடல் உறுப்புக்கள் என விளங்கும் எழுத்துக்கள் ஐம்பத்தொன்றில், ஆகாரம் முதல் ஹகாரம் ஈறாக உள்ள நாற்பத்தெட்டு எழுத்துக்களும், நாற்பத்தெட்டுப் புலவர்களாகவும், அகரவடிவினனை இறைவனும் ஒரு புலவனாய்த் தோன்றி, அப்புலவர்களுக்கு அறிவூட்டுவானாக," என்று கூறிச் சாபவிடை தந்தான்.

அவ்வாறே நாற்பத்தெட்டு எழுத்துக்களும் நாற்பத்தெட்டு மக்களாய்ப் பிறந்தன; அவர்கள் அனைவருங்கூடி ஆங்காங்குச் சென்று, தம் அறிவின் திறம்காட்டி வென்று இறுதியில் மதுரை சென்றனர்; அவர்களை ஆலவாய்ப் பெருமான் புலவர் உருவில் வந்து வரவேற்றார்; அப்போது அந்நாட்டு அரசனாக விளங்கிய வங்கிய சேகரன் புலவர்களின் பெருமையறிந்து, அவர்கள் இருப்பதற்கென்றே கோயில் வடமேற்கு மூலையில் மண்டபம் ஒன்று கட்டித் தந்து பெருஞ்சிறப்புச் செய்தான்; அரசன் செய்த சிறப்பைக் கண்டு, அப்புலவர்கள்பால் அழுக்காறு கொண்ட பிறபுலவர்கள், நாடோறும் அவர்கள்பால் சென்று வாதிடலாயினர்; தொல்லை பொறுக்கமாட்டாப் புலவர்கள், இறைவனை அடைந்து, அறிவினை அளக்கும் அளவு கோலொன்று வேண்டினர்; இறைவன் ஒருவர் இருக்கத் தக்க பலகையொன்று தந்து, "தகுதியுடையார் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு முழம் வளர்ந்து இடம் கொடுக்கும்; இதை அறிவு அறிகோலாகக் கொண்டு உய்ம்மின்," என்று கூறினான். புலவர்கள், பலகையைக் கொண்டு சென்று மண்டபத்தே வைத்து மலரிட்டு வணங்கி, முதன்முதலில் நக்கீரர் ஏறி அமர்ந்தார்; அவர் பின் கபிலர் ஏறினார்; பின்னர் பரணர் அமர்ந்தார்;

இவ்வாறே ஏனைய புலவர்களும் ஏறி அமர்ந்தனர். இதற்கு மேல் இப்புராணம் கூறும் கதை, முன்னர்க்கூறிய கதையினையே பெரும்பாலும் ஒத்துளது.

(3) கடம்பவன புராணத்தில், லீலாசங்கிரக அத்தியாயத்தில், ஒவ்வொரு திருவிளையாடற் செய்தியும், ஒவ்வொரு செய்யுளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் வரும் 15, 19 பாடல்கள் இரண்டும் பரணர் வரலாற்றின் பகுதிகள் சிலவற்றை உணர்த்துகின்றன. நக்கீரர், கபிலர், பரணர் உள்ளிட்ட புலவர்கள், இறைவனிடம் பலகையினை வேண்டிப்பெற்றது முதல் உருத்திரசன்மன் உரைவளம் உரைத்தது வரையுள்ள கதைகள், முன்னர்க்கூறிய புராணங்கள் கூறிய முறைப்படியே கூறப்பட்டுள்ளன.

(4) ஹாலாஸ்ய மஹாத்மியம் என்ற வடமொழி நூல், மதுரைச் சொக்கநாதர் மேற்கொண்ட திருவிளையாடல்களை, அகஸ்தியர் சில முனிவர்களுக்கு அறிவிக்கும் முறையில் எழுதப்பட்டுளது; அதில் உள்ள "சங்கத்தவர்களுக்குச் சங்கப் பலகை தந்தது," என்ற 57-ஆம் அத்தியாயமும், "சங்கப் புலவர்களின் கலகத்தைச் சிவபெருமான் தீர்த்தருளியது," என்ற 61-ஆம் அத்தியாயமும் பரணர் வரலாறக் கூறுவனவற்றைத் தொகுத்துக் காணின், அவை முழுதும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலிற் கண்டவாறே உள்ளன.

இக்கதைகள் அனைத்தையும் ஒப்புநோக்கியவழி, இவையெல்லாம் ஒன்றற்கொன்று மாறுபடக் கூறுகின்றன என்பது புலனும். திருவாலவாயுடையார் திருவிளையாடல், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் இரண்டனுள், பழைய திருவிளையாடல் எனச் சிறப்பிக்கப்பெறும் திருவாலவாயுடையார் திருவிளையாடல் காலத்தால் முற்பட்டது. அதில் சங்கப்புலவர்களின் முற்பிறப்பு வரலாறு ஒன்றும் கூறப்படவில்லை; சங்கப்புலவர்களோடு வேறு புலவர் பலர் வாதம் புரிந்தனர் என்றும், அதனல் மனம் தளர்ந்த சங்கப் புலவர்கள், மதுரை சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட்டுப் பலகை வேண்டினார்கள் என்றும் கூறப்படும்

செய்திகளும் அதிற்காணப்படவில்லை; சங்கப் புலவர்கள், நாமகள் உடலுறுப்புக்களின் அம்சமாம் என்றும், நாமகள், நான்முகன்பால் பெற்ற சாபத்தின் விளைவால், அவ்வெழுத்துக்களே அப்புலவர்களாய்ப் பிறந்தன என்றும் கூறப்படும் புலவர்களின் முற்பிறப்பு வரலாறுகளும், பிறவும் வடமொழி ஆலாஸ்ய மஹாத்மியத்திலும், அதை முதல் நூலாகக்கொண்ட பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திலும் மட்டுமே கூறப்பட்டுள்ளன; ஆகவே, இவையெல்லாம் பின்னர் நுழைக்கப்பட்ட பிற்காலத்தார் கற்பனைகள் என்பதே முடிபாகக் கொள்க. இவ்வாறு, முன்னூலில் இல்லாத ஒன்று, பின்னூலில் நுழைக்கப்பட்டுள்ளன என்பதுமட்டும் அன்று; முன்னூலில் கூறப்பெற்ற நிகழ்ச்சிகள், பின்னூலில் முரண்படவும் கூறப்பட்டுள்ளன.

# ௯. பரணர் பாடியவை என வழங்கும் பாடல்கள்

பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கீழ்க் கணக்கு என்ற சங்க நூல்களுள், பரணர் பாடல்கள், எட்டுத் தொகையில்மட்டுமே இடம் பெற்றுள்ளன; எட்டுத் தொகை நூல்களுள்ளும், பரணர் பாடல்களைக் கொண்ட நூல்கள், நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு என்ற ஐந்துமட்டுமே. இவற்றுள், பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறப்பொருள் உணர்த்துவன; அவற்றுள் அவர் பாடல்களாக, முறையே பத்துப்பாடல்களும், பதின்மூன்று பாடல்களுமாக வந்துள்ளன. நற்றிணை, குறுந்தொகை, நெடுந்தொகை ஆகிய நூல்களில் வந்துள்ள அகத்துறைப்பாடல்கள் அறுபத்திரண்டில், குறிஞ்சித்திணைப்பாடல்கள் முப்பத்துமூன்று; மருதத்திணை கூறுவன இருபத்து நான்கு; பாலைத் திணையின் பாற்படுவன ஐந்து. ஆக, பரணர் பாடிய பாடல்களெல்லாம், இவ் எண்பத்தைந்து பாடல்களே ஆம்.

பரணர் பாடிய பாடல்கள் என வேறு சில பாடல்களைக் கூறுவர்; அவை: பன்னிருபாட்டியல் என்னும் ஒருவகைச் செய்யுள் இலக்கணம் கூறும் நூலில் வரும் சில சூத்திரங்கள்; பதினொன்றும் திருமுறையில் ஒன்றெனக் கருதப்பட்ட சிவபெருமான் திருவந்தாதி, "மாலும் குறளாய்," எனத் தொடங்கும் திருவள்ளுவமாலைச் செய்யுள்.

பாட்டியல் சங்ககாலப் புலவர்கள் அறியாதது; பாட்டியல் கூறும் இலக்கணம், பண்டைத் தமிழ்ப்புலவர் பாடல்களுக்குப் பொருந்தாது, பாட்டியல் இலக்கணமே பிற்காலத்தில் உண்டாயது, இப் பன்னிருபாட்டியலும் பண்டைப் புலவரால் செய்யப்பட்டதன்று என்றே, நச்சினார்க்கினியர் போன்ற பேராசிரியர்கள் எல்லாம் கருதுவர். ஆகவே, பன்னிருபாட்டியலோடு, பரணர்க்குத் தொடர்பில்லை என்றே துணிதல்வேண்டும்.

சிவபெருமான் திருவந்தாதி, நூறு செய்யுட்கள் அந்தாதித்தொடராக அமைந்துள்ள ஒரு பிரபந்தம். பாட்டுக்களில், முன்னிரண்டடிகளில் ஓர் யமகமும், பின்னிரண்டடிகளில் வேறோர் யமகமும் அமைந்திருக்கின்றன ; யமகம், மாலைமாற்று, ஏகபாதம், எழுகூற்றிருக்கை போன்ற நூல்கள் முற்காலத்தில் இல்லை. பரணர் பாக்களாகப் பண்டை நூல்களில் வரும் செய்யுட்களில், வடசொற்கள் மிக மிக அருகி ஆளப்பட்டுள்ளன ; அவை அனைத்திலும் வந்துள்ள வடசொற்கள் ஐம்பதிற்கு மேற்படா ; ஆனால், இவ் வந்தாதியில் வந்துள்ள வடசொற்களைக் கணக்கிட்டால் அவை நூற்றிற்கும் மேலாம். சங்கச் செய்யுட்களில் பயில ஆளப்படும், வெரீஇ, மரீஇ போன்ற அளபெடைச்சொற்கள், இவ் வந்தாதியில் யாண்டும் காணப்படவில்லை ; பண்டைப் பாடல்களில் இடம் பெறாத, கின்ற என்ற நிகழ்கால இடைநிலையால் இயன்ற வினைச்சொற்கள், அந்தாதியில் அளவின்றி ஆளப்பட்டுள்ளன. மேலும், சங்க நூல்களுள், புராணக் கதைகளைப் பெரும் அளவில் குறிப்பிடும் இயல்பினதான கலித்தொகையில் காணப்படும் கதைகளினும், மிகுதியான புராணக் கதைகளை அந்தாதி கொண்டுளது ; கூறிய இக் காரணங்களால் சிவபெருமான் திருவந்தாதி, பரணர் இயற்றியது அன்று. பிற்காலச் சைவப்புலவர் ஒருவரால் பாடப்பட்டது என்றே கொள்ளுதல் வேண்டும்.

திருவள்ளுவமாலையில் வந்துள்ள செய்யுட்கள் எல்லாம், திருவள்ளுவர், அவர் திருக்குறள் இவற்றிடத்தில் பெருமையும், மதிப்புங்கொண்ட ஒருவரோ பலரோ அவர்களைப் பாராட்டிப் பாடிய பாடல்களை, அவை தாம் பாடியன எனப் பிறர் அறியின், அப்பாடலை மதியார் என மனத்திடைக்கொண்டு, சங்ககாலப்புலவர்கள் பெயர்களோடு இணைக்கப்பட்டுவிட்டன என்றே அறிஞர் கருதுவர் ; ஆகவே, அப் பாடல்களுள் ஒன்றாய, "மாலும் குறளாய்" என்ற பாட்டும் பரணர் பாடியது அன்று என்றே கொள்க.

## ௧௦. பரணராற் பாடப்பட்டவர்கள்

பரணர்பாக்களில் இடம்பெற்றோர் பலராவர்; ஆனால், அவர்கள் அனைவரையும், பரணர் நேரிற்கண்டே பாராட்டினார் என்று கூறுதல் இயலாது. அரசர்களைக் கண்டு அவர் நேர்நின்று பாராட்டிய பாடல்கள் எனக் கூறப்படும் புறநானூறு, பத்துப்பாட்டுச் செய்யுட்களால் அறியப்படுவோர், அவர்களுள் எழுவர்மட்டுமே; அவர்கள், சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, சோழன் வேற்பஃ றடக்கைப் பெருவிறற்கிள்ளி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேர லாதன், சேரன் செங்குட்டுவன், பேகன், தழும்பன், நித்தன் என் பவராவர். இவர்களுள், தழும்பன், தித்தன் என்ற இரு வரையும்; 'ஊணூர் தழும்பனுக் குரியது.' 'உறந்தை தித்தனுக் குரியது' என்ற பொருள் தோன்றவே குறிப் பிட்டுள்ளாராதலின், பரணர் அவர்களை அடுத்து நின்று பாராட்டினார் எனக் கூறுதல்கூடாது; அதைப்போலவே, அகத்துறைப்பாடல்களால் அறியப்படும் அரசர்களையும், அவ் வரசர்களுக்குரிய ஆறும், ஊரும், காடும், மலையும் அவ் வரசர்களோடு தொடர்புடைய சில நிகழ்ச்சிகளும், உவமைகளாக ஆளப்படும் இடங்களிலேயே குறிப்பிட் டுள்ளாராதலின், பரணர் அவர்களையும் நேர்நின்று பாராட் டினார் எனக் கொள்வதற்கில்லை. ஆனால், நேர்நின்று பாராட்டினாரல்லர் என்பதனாலேயே, அவர்களையும் அவர் களோடு தொடர்புடையனவற்றையும் பரணர், அறிந்தார் வாய்க் கேட்டே பாடினார் எனக் கொள்ளுதல் கூடாது; அவர் நேரில் அறிந்தே பாடியுள்ளார்.

கண்டு பாராட்டிய அரசர்கள் எனப்படுவோரினும், பரணர் எந்த அரசரை முதலிற் பாராட்டினார்? அவர் பாராட்டை இறுதியிற் பெற்றோன் யாவன்? என்பதை யும் அறிந்துகொள்ள முடியவில்லை. என்றாலும், அவர் களைக் கால முறைப்படி, மேற்கூறிய வரிசையில் வைத்துக் காண்பதற்கே அகச் சான்றுகள் துணைபுரியுமாதலின், அவர்கள் வரலாற்றை அம் முறையிலேயே அறிந்து கொள் வோமாக!

(1) சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி:

சங்கநூல்களால் அறியப்பெற்ற சோழ அரசர்களுள், காலத்தால் முதற்கண்வைத்துச் சிறப்பிக்கப்பெறுவோன், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியே என்று கூறின், அது பொருந்தும். உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, கரிகாற் பெருவளத்தானைப்பெற்றுப் புகழ் கொண்ட பேறுடையான் ஆவன்; இது, ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார், பொருநராற்றுப் படையில், கரிகாலனை, "உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்" என்று பெயரிட்டு அழைப்பதால் தெளிவாகும். இளஞ்சேட் சென்னியின் மனைவி, அழுந்தூரில் வாழ்ந்த வேளிர்குடியிற் பிறந்த பெருமாட்டியாராவர்; இது, "மன்னர் பாங்கிற் பின்னராகுப" என்ற தொல்காப்பியம் அகத்திணையியல் சூத்திரஉரையில், "உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, அழுந்தூர்வேளிடை மகட்கோடலும், அவன் மகன், கரிகாற்பெருவளத்தான், நாங்கூர்வேளிடை மகட்கோடலும்" என்று நச்சினார்க்கினியர் கூறுவதால் உறுதியாகும்; அவ்வுரையின் பிற்பகுதி, உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மகன் கரிகாலன் என்ற பொருநராற்றுப்படைக் கொள்கையை உறுதிசெய்வதும் காண்க. இளஞ்சேட் சென்னியின் மனைவி, அழுந்தூர்வேள் மகள் என்ற கொள்கையை, இளஞ்சேட்சென்னியின் மகன் கரிகாலன், வெண்ணிப் பறந்தலையில் பெற்ற கன்னிப் போர் வெற்றி குறித்து, அழுந்தூரில் விழாக் கொண்டாடப் பெற்றது என்று அறிவிக்கும் பரணரின் அகநானூற்றுப் பாட்டொன்று அரண்செய்து நிற்பதுங்காண்க. இளஞ்சேட் சென்னி மகன் கரிகாலன் பிறப்பதற்குச் சின்னாட்களுக்கு முன்னரே மாண்டுவிட்டான் என்ப. இவன், அழகிய பல தேர்களுக்கு உரியவன் என்பதை அவன் பெயரைக் கொண்டே அறியலாம். இஃது உண்மையாம் என்பதைக்,

"கடலிடைத் தோன்றும் ஞாயிறேபோல்,
பொற்றேர்மீது பொலிவுதோன்ற விளங்குகின்றனை"

என்று கூறிப் பரணரும் உறுதி செய்வர்.

இளஞ்சேட் சென்னியைக் குறித்துப் பரணர் பாடிய பாட்டு ஒன்றே; அவ்வொரு பாட்டிலேயே, அவன் படையின் பரப்பும் சிறப்பும், அவன் ஆண்மையும் ஆற்றலும் நன்கு விளக்கப்பட்டுள்ளன:

"வீரர் ஏந்திய வாள்கள், பகைவர் உடலைப்பிளந்து பிளந்து, குருதிக் கறைபெற்று, செவ்வானம்போல் சிவந்து தோன்றுகின்றன; வீரர்கள் களம் முழுதும் ஓடிப் போரிட்டமையால், அவர் காலிற் கட்டிய வீரக் கழல்கள் சித்திரவேலைப்பாடு சிதைந்து, கொல்லும் ஆனேற்றின் கூரிய கொம்புகள்போல் காட்சி யளிக்கின்றன; கையிற் பிடித்த கேடயங்களில், பகைவர் விட்ட அம்புகள் பட்டுத் தோன்றிய துளைகள், இடம் பெயராது எழுதிவைத்த இலக்குகள்போல் இலங்குகின்றன; குதிரைகள் மேலேறிய வீரர்கள், பகைவரைப் பாய்ந்து பாய்ந்து தாக்க, வலமும் இடமும் மாறிமாறித் திருப்புவதால், கடிவாளத்தால் தாக்குண்டு இரத்தம் கசியும் வாயுடையவாய் நிற்கும் காட்சி, மான் முதலியவற்றைக் கடித்து உண்டு இரத்தக் கறை படிய நிற்கும் புலிபோல் தோன்றுகின்றன; யானைகள், பகைவர் கோட்டையின் வாயிற்கதவுகளை முறித்து அழித்து நுனிசிதைந்த வெண்கோடுடைவாய் வெகுண்டு திரிவன, உயிர் உண்ணும் எமனைப்போல் தோன்றும்; இளஞ்சேட்சென்னி, குதிரைகள் பூட்டிய பொற்றேர் மீது கருங்கடல் மீது எழும் செஞ்ஞாயிறுபோல், சினத்தால் சிவந்து தோன்றுவன். இளஞ்சேட் சென்னியும், அவன் படையும் இத்தகையன ஆதலைக்கண்டு, அவன் பகைவர் நாட்டுமக்கள், தாயற்ற குழந்தை தான் உண்ணும் உணவைப் பெறமாட்டாமையால் ஓயாது அழுவதைப் போல், அரற்றலும் அழுகையும் உடையராயினர்."

"வாள், வலந்தர மறுப்பட்டன,
செவ்வானத்து வனப்புப் போன்றன;
தாள், களங்கொளக் கழல் பறைந்தன,
கொல்லேற்றின் மருப்புப் போன்றன;
தோல், துவைத்தம்பிற் றுளைதோன்றுவ,

நிலைக்கொராஅ இலக்கம் போன்றன ;
மாவே, எறிபதத்தான் இடங்காட்டக்
கறுழ் பொருத செவ்வாயான்
எருத்து வவ்விய புலிபோன்றன ;
களிறு, கதவு எறியாச் சிவந்து உராஅய்
நுதி மழுங்கிய வெண்கோட்டான்
உயிருண்ணும் கூற்றுப் போன்றன ;
நீயே, அலங்குளைப் பரீஇ இவுளிப்
பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல் நிவந்தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ !
அனையை யாகன் மாறே,
தாயில் தூவாக் குழவி போல
ஓவாது கூஉம் நின் உடற்றியோர் நாடே." (புறம் : ௪.)

இளஞ்சேட் சென்னியின் வீரமும் பெருமையும் இவ்வாறு விளங்க உரைக்கப்பட்டுள்ளதே அன்றி, அவன் பகைவர் யார் என்பது தெளிவாக உணர்த்தப்படவில்லை. பெருங்குன்றூர் கிழார் என்ற புலவரும் இவனைப் பாராட்டியுள்ளார்.

## (2) சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி :

சங்கப்புலவர்கள் அறிவிக்கும் சோழ அரசர்கள் பலராவர் ; ஆனால், அவர்களுள் ஒருவருக்கொருவர் என்ன உறவுடையவர் என்பதை அவர் பாக்களால் அறிதல் இயலாது ; மேலும் சோழநாடு முழுதும் ஓராட்சிக்குட்பட்டே இருந்தது என்று கூறல் இயலாது; ஒரேகாலத்தில் சோழநாட்டின் பல பகுதிகளிலும் பல சோழ அரசர்கள் ஆண்டுவந்துள்ளனர் ; ஆதலின், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியின் தந்தை யார்? இவனுக்குப் பின் அரசு கட்டில் ஏறினோன் யார் என்பதை அறிதல் இயலாது.

இவனைப் பாராட்டிய புலவர்களும் பலரல்லர் ; பரணர், கழாத்தலையார் இருவரே பாடியுள்ளனர் ; அவர்களும்,

இவனை வேறுவேறு சூழ்நிலையில் பாடியிருப்பாராயின், கிள்ளியின் வரலாற்றின் மேலும் சில பகுதிகள் வெளியாகியிருத்தல் கூடும்; ஆனால், அவர்கள் இருவரும், இவன் வாழ்க்கையின் ஒரு பகுதியையே பாடியுள்ளனர்; அதனால், கிள்ளியின் வரலாற்றின் முழுப்பகுதியையும் அறிந்து கொள்ள இயலாமற் போய்விட்டது. அவர்கள் பாக்களால் அறிந்துகொள்ளக்கூடிய ஒரே செய்தி, சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் பகைத்து மேற்கொண்ட போரில், இருவர் படையும் அழிய, இருவரும் களத்திலேயே மாண்டனர் என்பதே; இதுவன்றி, வேறு எதையும் நம்மால் அறிய முடியவில்லை.

வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்ற இவன் பெயர், கிள்ளி பேராற்றல் வாய்ந்தவன்; வேற்படை மிக்கவன்; வேலேந்திப் போரிடும் விறல் படைத்தவன் என்பனவற்றை விளக்கும்; இவனைக் குறித்துப் பரணர் பாராட்டிக் கூறியவற்றைப் "பரணர் பண்புகள்" என்ற தலைப்பின்கீழ்க் கண்டுகொள்க.

(3) சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன்:

சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளிக்குக் கூறிய வரலாறு இக்குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கும் பொருந்தும். அவனைப் பாடியவர்களே இவனையும் பாடியுள்ளார்கள்; அவனை ஒரு பாட்டிலும் இவனை வேறு ஒரு பாட்டிலுமாகப் பாடாமல், அவர்கள் பாடிய பாக்கள் ஒவ்வொன்றிலும் இருவரையும் ஒன்றுசேர்த்தே பாடியுள்ளார்கள்; ஆகவே, குடக்கோ நெடுஞ்சேரலாதனும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் பகைவர்; இருவரும் ஒரு களத்தில் மடிந்தனர் என்பதே இவன் வரலாறாகவும் கொள்ளுதல் வேண்டும்.

சேர அரசர்களுள், நெடுஞ்சேரலாதன் என அழைக்கப்பெறுவோர் இருவர் உளர்; ஒருவன், இக்குடக்கோ நெடுஞ்சேரலாதன்; மற்றொருவன், இமயவரம்பன் நெடுஞ்

சேரலாதன். ஆனால், இவ்விருவரும் வேறு வேறு அல்லர்; ஒருவரே என்பது அறிஞர்கள் முடிவாம். இருவர்க்கும் நெடுஞ்சேரலாதன் என்ற பெயர் ஒற்றுமை உளது; இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன், 'குடவர்கோமான் நெடுஞ் சேரலாதன்' எனவும், 'குடக்கோ நெடுஞ்சேரலாதன்' எனவும் பதிற்றுப்பத்துப் பதிகங்களில் அழைக்கப் பெறு கின்றான்; இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வெற்றிச் சிறப்பு எனப்பட்ட இமயத்தில் வில்பொறித்த செய்கை யைக் குடக்கோ நெடுஞ்சேரலாதனைப் பாடிய பரணரும், தம் பாட்டொன்றில் குறிப்பிட்டுள்ளார்; பரணர், இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் வாழ்ந்தவராவர்; ஆகவே, அவர் குறிப்பிடும் இமயத்தில் விற்பொறித்த செயல், அவரால் பாராட்டப்பெற்ற இக்குடக்கோ நெடுஞ் சேரலாதனுக்கு உரியதாகக் கொள்ளுதலும் கூடும். கூறிய இக்காரணங்களால், இவ்விரு சேரலாதர்களும் வேறுவேறு அல்லர்; ஒருவரே என்பது உறுதியாதல் காண்க.

அவ்வாறாயின், சோழன் வேற்பஃறடக்கைப் பெரு விறற்கிள்ளியோடு போரிட்டு உயிரிழந்த நெடுஞ்சேரலா தன், சேரன் செங்குட்டுவன் தந்தையாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனே ஆவன்; இவன் தந்தை, பெருஞ் சோற்றுதியன் சேரலாதன்; தாய், வெளியன் வேண்மான் மகள் நல்லினி; இவனுக்கு மனைவியர் இருவர்; ஒருத்தி, சோழன் மணக்கிள்ளியின் மகள் நற்சோணை; மற் றொருத்தி, வேளாவிக்கோமான் பதுமன் என்பவன் மகள். முன்னவள் வழியாகச் செங்குட்டுவன், இளங்கோ என்ற இருமக்களையும், பின்னவள் வழியாகக் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற இருமக்களையும் பெற்றிருந்தான்; ஆரியரை வென்றான்; அவர்கள் தலையில் நெய் வார்த்துக் கைகளைப் பின்கட்டா கக் கட்டி, அரிய பல பொருள்களைத் தண்டமாகப் பெற் றான்; அவர்கள் இமய மலையில், தன் குலக் கொடியாகிய வில்லைப் பொறித்து மீண்டான்; கடம்பமரத்தைத் தம் குலமரமாகக்கொண்டு கடலிடையே வாழ்ந்துவந்த பகைவர்

கனைக் கப்பற்படை கொண்டு அழித்து, அவர் காவல் மரத்தையும் வெட்டி எறிந்தான். பரணரே அல்லாமல், கழாத்தலையார், மாமூலனார், குமட்டூர்க்கண்ணனார் என்ற வேறு புலவர்களும் இவனைப் பாராட்டியுள்ளனர். இவன், தன்னைப் பாடிய புலவர் குமட்டூர்க்கண்ணனார்க்கு, உம்பற் காட்டில் ஐந்நூறு ஊர் பிரம்மதாயமும், தென்னாட்டு வருவாயிற் பாகமும் அளித்துப் பெருமை செய்து, ஐம்பத்தெட்டாண்டு வாழ்ந்திருந்தான்.

இத்துணைப் பெருமையும், பேராற்றலும் வாய்ந்த இந்நெடுஞ் சேரலாதனை, சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி போரிட்டுப் பொருது அவனையும் அழித்துத், தானும் அக்களத்திலேயே மாண்டான். அக்கொடுங் காட்சியினையே பரணர், கசிந்து கண்ணீர் மல்கிப் பாடியுள்ளார். இவனைக்குறித்துக் கழாத்தலையார் பாடிய புறநானூற்றுப்பாடல்களின் அடியில் அப்பாடல்கள், எப்போது, யாரால், யாரைக்குறித்துப் பாடப்பெற்றன என்பதை விளக்க வரும் கொளுவில், "போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தார்," எனவரும் தொடர்க்குப் போர் என்னும் ஊர்ப்புறத்தே போரிட்டு இறந்தனர் எனப் பொருள் கொள்வர் சிலர். அஃது ஏற்றுக்கொள்ளத் தக்கதாயின், அப்போர், சோழநாட்டில், காவிரிக்கரைக் கண் யாண்டோ ஓரிடத்தில் நிகழ்ந்தது எனக்கொள்ளுதல் வேண்டும். காவிரிக்கரையில் போர் என்ற ஊர் இருந்தது எனச் சங்கநூல்கள் அறிவிக்கின்றன. ஆனால், இருவர்க்கும் இடையில் நடந்த அப்போர், போர் என்னும் இடத்தில் நடந்தது என்பதை உறுதிசெய்யும் வேறு அகச்சான்றுகள் கிடைக்காமையால், "போர்ப்புறம்" என்பதற்குப் போர் என்ற ஊர்ப்புறம் என்று பொருள் கொள்ளாது போர்க்களத்தில் எனப்பொருள் கொள்வதே நேரிதாம்.

நெடுஞ்சேரலாதன் இறந்து வீழ்ந்து கிடக்கும் காட்சியினைக் கண்ட பரணர், கண்ணீர்விட்டுக் கலங்கிப்பாடிய பாடற் பொருள் 'பரணர் பண்பு' என்ற தலைப்பின்கீழ்

குறிப்பிடப்பட்டுளது; அதை ஆண்டுக் காண்க. அவன், ஆரியரைவென்று, அவர் தம் பழைமை மிக்க இமயமலை மீது விற்பொறித்து மீண்ட வெற்றியைப் பரணர் பாராட்டிய பாட்டின் பகுதி கீழே தரப்பட்டுளது.

> "ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
> தொன்று முதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
> வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
> வஞ்சி." (அகம். ௩௯௬.)

(4) சேரன் செங்குட்டுவன்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மக்கள் இருவருள் மூத்தோன், தென்தமிழரைத் தீதுரைத்த வடவாரியரை வணக்குவித்த செங்குட்டுவனாவன்; இளையோன், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை ஆக்கித்தந்த ஆசிரியப் பெருந்தகை இளங்கோ வடிகளாவர். மக்கள் இருவரும், மன்னர் பலரும் சூழப் பேரத்தாணிக்கண் இருந்த நெடுஞ் சேரலாதன்முன், ஒருநாள், நிமித்திகன் ஒருவன் தோன்றி, "மன்னர் மன்னவ! நினக்குப்பின் நின் அரியணை இருந்து ஆட்சிபுரியும் ஆகூழ் உடையோன் இவ்விளையோனே," என்றனன். செவிமடுத்த மூத்தோன் உரைத்தானை உருத்து நோக்கினன். இளையோன் அவன் அகத்துயர் அறிந்தான்; நிமித்திகன் உரைத்தது முறையன்று என்பதும் உணர்ந்தான்; மூத்தோன் துயர்தீர, முறைவாழத், துறந்துகுணவாயிற் கோட்டம் புகுந்து அறவாழ்வு மேற் கொண்டான்.

செங்குட்டுவன், கற்பும், பொற்பும் பொருந்திய கோப்பெருந் தேவியாராக, வேளிர்குலத்தாள் ஒருத்தியை மணந்து, குட்டுவன் சேரல் என்ற குமரனையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தான்.

செங்குட்டுவன் அரியணை ஏறிய பின்னர் மேற் கொண்ட போர்களும், பெற்ற வெற்றிகளும் பலவாம்; வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியொடு போரிட்டு

இறந்த தன் தந்தையைத் தொடர்ந்து உயிர்நீத்துப் புகழ் பெற்ற தன் தாய் நற்சோணையின் படிமத்தைக் கங்கையில் நீராட்டக் கருதி வடநாடு சென்றான். கங்கைக் கரையில் ஆரிய அரசர் பலர் ஒன்றுகூடி, அவனை எதிர்த்தனர்; அப்போராற்றங்கரையில் எதிர்த்தார் அனைவரையும், ஒருவனாகவே நின்று போராடி வெற்றிகொண்டான்.

சேரநாட்டின் ஒருபகுதியாகக் கொடுகூர் என்ற நாடொன்று இருந்தது. அந்நாட்டைக் கொங்கர் என்பார் ஆண்டு வந்தனர்; அண்டை நாடுகளின் அமைதியைக் குலைப்பதே அவர்கள் தொழில்; அத்தகையார், தன் அண்மையில் இருப்பதும்கூடாது எனக், குட்டுவன் கொண்டான்; கொங்குநாட்டுக் கொடுகூர் மீது படையுடன் சென்றான்; கொங்கர், சோழனையும், பாண்டியனையும் படைத்துணையாகப்பெற்றுச் செங்குட்டுவனை எதிர்த்தனர்; ஆனால், இறுதியில் படையும், கொடியும் இழந்து தோற்றுப் பின்னிட்டனர். கொடுகூர் நாட்டுத் தலைநகராகிய கொடுகூரும் குட்டுவனால் அழிவுற்றது.

கடல்நீரை அரணாகக் கொண்டு, அக்கடலிடையே வாழ்ந்து வந்த சிலர், சேரர் குலப்பகைவராய் விளங்குவது கண்ட செங்குட்டுவன், கப்பற்படையுடன் சென்று அவர்களை அறவே அழித்து வெற்றி பெற்றான்; குலப்பகை ஒழித்துக் குடிவிளங்கச் செய்த செங்குட்டுவனை நாடு வாழ்த்திற்று; மக்கள் அவனுக்குக் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், கடல் ஓட்டிய வெல்புகழ் குட்டுவன் என்றெல்லாம் பெயரிட்டுச் சிறப்பித்தனர்; புலவர், 'குட்டுவன் கடலையும் பணிகொண்டவன்,' 'அவன் வேற்படைக்கு அஞ்சிப் பணிந்து பின்னிட்டது பெருங்கடல்' என்றெல்லாம் புனைந்துரைகூறிப் போற்றினர்.

மோகூரில் பழையன் என்பான் ஒருவன் பெருவீரனாய் விளங்கியிருந்தான்; இப்பழையன், மோகூர் எனவும் ஊர்ப் பெயரால் அழைக்கவும் பெறுவான்; அவன் மோகூர்,

அரிய வளம்பல வாய்ந்தது; இப்பழையனுக்குப் பகைவன், அறுகை என்பான் ஒருவன்; சேரநாட்டிற்குச் சேய்மைக் கண் சிறக்க வாழ்ந்திருந்தவன்; வெல்லும் போர் பல கண்டவன்; அச்செருக்கால், மோகூர் மீதும் போரிட்டான்; ஆனால் தோற்றான்; தோற்றபழி அஞ்சி ஓடி எங்கோ ஒளிந்து வாழலாயினன்; செங்குட்டுவன், இச்செய்தி அறிந்தான்; அறுகை, செங்குட்டுவன் அரிய நண்பனாவன்; சேய் நாட்டில் வாழ்பவனாதலின், செங்குட்டுவனோடு சேர்ந்து பழகியறியான்; 'புணர்ச்சிப்பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாம் கிழமைதரும்' என்று அறிந்து நடக்கும் பண்புடையான் செங்குட்டுவன்; ஆகவே, 'அறுகை சேய் நாட்டினன் ஆயினும், என் சிறந்த நண்பனாவன்; அவனுக்கு நேர்ந்த இவ்விழிவு, எனக்கு நேர்ந்த இழிவாம்; ஆகவே, அது களைதல் என்கடன்' எனக்கொண்டான்; மோகூர்மீது படையொடு சென்றான்; கொங்கர் செங்களத்தே, சேரர் படைக்குத் தோற்றுப் பின்னிட்ட சோழனும், பாண்டியனும் பழையன் படைத் துணைவராயினர்; பேர் அரசர் இவர்களே அன்றி, குறுநில மன்னர்களான வேளிர் பலரும் அவனுக்குத் துணை நின்றனர்; வேந்தரும், வேளிரும் ஒன்றுகூடித் துணைபுரிதலின், பழையன் பெருஞ் செருக்குற்றான்; பேராற்றல் கொண்டு போரிட்டான்; ஆயினும், அவன் ஆற்றல் செங்குட்டுவன் முன் அழிந்தது; குட்டுவன், துணை வந்தோரைத் துரத்திவிட்டுப் பழையனைப் பணியவைத்தான்; அவன் காவல் மரமாகிய வேம்பை வெட்டி வீழ்த்தினான்; அதை, முரசு செய்தற்காம் சிறுசிறு துண்டுகளாக்கி, அவற்றை, பழையன் மனைவியர் மயிரைத்திரித்துப் பெற்ற கயிற்றால் கட்டி, அவன் யானைகளைக் கொண்டே இழுத்துச் சென்று, நண்பன் இழிவு துடைத்துத்தானும் புகழ்பெற்றான்.

இவ்வெற்றிகளே அல்லாமல், கடற்கரைக்கண் அமைந்து, 'வயலை வேலி வியலூர்,' 'விரிநீர் வியலூர்' என்றெல்லாம் புகழப்பெறும் வியலூரினும் அவன் ஒரு வெற்றி பெற்றான்; வியலூர் அவனால் அழிவுற்றது;

கொல்லும் புலியொத்த போர்வீரர் பலர் ஆங்கே அவனால் அழிந்தனர்; வியலூரில் வெற்றிகண்ட செங்குட்டுவனுக்கு வேறு பணிகள் காத்துக்கிடந்தன; சோழ நாட்டில் தன் அம்மான் இறந்த பின்னர், அவன் இளைய மகன் ஆட்சித் தலைமையேற்பதைப் பொறாது, சோழர் குலத்து வந்த அரசர் ஒன்பதின்மர், நாட்டில் அமைதி குலைத்துப் பெருங்கலகம் விளைவிப்பாராயினர்; செங்குட்டுவன், அவ்வொன்பதின்மரையும், உறையூர்க்குத் தென்பால் உள்ள நேரிவாயில் என்னுமிடத்தே எதிர்த்துப் போரிட்டு ஒரு நாளிலேயே அவர்களை அழித்து நாட்டில் அமைதி நிலைபெறச் செய்து, தன் அம்மான் சேயை அரியணை ஏற்றிவைத்து அகமகிழ்ந்து மீண்டான்; இவ்வெற்றியைத் தொடர்ந்து, சோழநாட்டுத் தேவாரம் பெற்ற திருநகரா கிய இடும்பாவனம் எனப்படும் இரும் பாதவனத்திலும் செங்குட்டுவன் ஒரு வெற்றிக்குரியனாயினன்.

இவையெல்லாவற்றினும், செங்குட்டுவனை உலகறியச் செய்த நிகழ்ச்சி, அவனைச் சேரருட் சிறந்தோன் ஆக்கிய நிகழ்ச்சி, கண்ணகி தேவியார்க்குக் கல்லெடுக்க வடநாடு சென்று, தென்தமிழர் திறம் அறியாது, ஆணவத்தால் அறிவிழந்து இழித்துப் பேசிய வடவாரிய அரசர் கனக விசயரை வென்று, அவர் தலைமீதே கல்லையும் ஏற்றிக் கொணர்ந்து, கோயில் கட்டிக், கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும், நூற்றுவர் கன்னரும் வந்து வழிபட விழாவெடுத்த சிறப்பேயாகும்.

செங்குட்டுவன், இவ்வாறு சிறந்த பெருவீரனாய் விளங்குவது அறிந்த பரணர், அவனையும், அவன் ஆற்றலையும் அவன் நாடாள் திறத்தையும் நேரில் பார்த்து நன்கு உணர்ந்து மகிழ விரும்பினார். விரும்பிய பரணர், ஆண்டுத் தாம்மட்டும் சென்று மகிழ எண்ணினாரல்லர்; தம்மை யொத்த பிறரையும் உடன்கொண்டு செல்லவிரும்பினார்; அவர்களை அழைத்தார்; அவன் புகழ் எடுத்து உரைத்தார்; "அத்தகையானைக் காண நான் செல்கின்றேன்; நீங்களும்

வாருங்கள்," என்று அழைத்துக் கொண்டு செல்ல லாயினர். உடன் வருமாறு விறலியரை அழைக்கும் அவர் பாடலைப் பாருங்கள் :

"யாமும் சேறுகம் ; நீயிரும் வம்மின் ;
துயலும் கோதைத் துளங்கியல் விறலியர் !
கொளைவல் வாழ்க்கைநும் கிளை இனிது உணீஇயர்
..................................................
பெருஞ்சினக் குட்டுவன் கண்டனம் வரற்கே."
(பதிற் : சுகூ.)

செங்குட்டுவன் நாடு சென்று சேரும் எளிமை உடையதன்று ; சேய்மைக்கண் உள்ளது ; இடையே கொடிய நிலங்களைப் பெற்றது ; செல்லும்வழி, கொல் களிறும், கொடும்புலியும் போரிடும் பெருங்காடுகளைக் கொண்டது ; நாட்டுவாழ் விலங்குகளின் கொடுமை ஒரு பால் கிடக்க, இயற்கையாலும் இடர்பல நிறைந்தது ; போகும்வழியில், மழை பெய்யாது பொய்த்துவிட்டமை யால், செல்வார் உண்ணும் நீர்பெறாது பெருந்துன்பம் உறுவர் ; நீரில்லாமையால் உலர்ந்துபோன நீண்ட மூங்கில் களால் நெருப்புத்துயர் போன்றவற்றையும் பொறுத்தல் வேண்டும் ; செங்குட்டுவனைக் காண்போர், இத்தகைய கடத்தற்கரிய வழிபல கடந்துசென்றே காண்பர்; பரணரும் அவற்றைக் கடந்துசென்றே கண்டார் : செங்குட்டுவனைக் காணவேண்டும் என்ற அவர் வேட்கை, வழியருமை உடையது என எண்ண மறுத்தது; தாம் வந்த வழிகளின் அருமையினை அவரே, செங்குட்டுவன்பால் அறிவித் துள்ளார் :

"வயக்களிறு
..................................................
வளையமல் வியன்காடு சிலம்பப் பிளிறும்
மழைபெயல் மாறிய கழைதிரங் கத்தம்
ஒன்று இரண்டு அல, பலகழிந்து, திண்டேர்
வசையில் நெடுந்தகை! காண்டு வந்திசின்." (பதிற் : சுக.)

சேரநாடு சென்று சேர்ந்த பரணர், செங்குட்டுவன் பேராற்றலையும், அவன் படையில் பணியாற்றும் போர் வீரர்களின் பேராண்மையினையும், அவனும் அவன் படையும் பெற்றிருக்கும் பெருமையால், அவன் நாடு, பகைவர்க் கஞ்சிப் பெறவேண்டிய பேர்அரண் எதையும் பெறாப் பெருஞ்சிறப்பையும் பார்த்துப் பார்த்துப் பாராட்டுவா ராயினர்.

செங்குட்டுவன் பகைவர், மலையையும், கடலையும் அர ணாகக்கொண்டு மலைமீதும், கடலிடையேயும் கோட்டை பல அமைத்து வாழ்ந்திருந்தனர்; அப்பகைவர் கோட்டை களை எல்லாம், செங்குட்டுவன், ஏற்ற படைகொண்டு அழித்து, அவர் நாடுகளை அகப்படுத்தினான் :

" கன்மிசை யவ்வும், கடலவும் பிறவும்
அருப்பம் அமைஇய அமர்கடந் துருத்த
ஆண்மலி மருங்கின் நாடகப் படுத்து (பதிற் : ௫0.)

செங்குட்டுவன் மார்பிலே விளங்கும் மலர்மாலைகள், அவன் பகைவர் நாட்டைப் பாழ்செய்து எழுப்பிய பெருந் தீயின் வெம்மையால் வாடிக்கருகிக் கவின் இழக்கும் :

" முனைஅடு கனையெரி எரித்தலின் பெரிதும்
இதழ்கவின் அழிந்த மாலையொடு சாந்துபுலர்
பல்பொறி மார்ப. " (பதிற்று : ௬அ.)

" பணியாப் பகைவர் இன்றும் உளர்; ' வினை, பகை என்றிரண்டின் எச்சம், நினையுங்கால், தீயெச்சம் போலத் தெறும் ' என்பர் பெரியோர்; ஆகவே, அவர்களை வாழ விடாது வெற்றிகொள்ளுதல் வேண்டும், " என்ற எண்ண முடையான் செங்குட்டுவன்; அவன், அவ்வேட்கையுடை யான் ஆகவே, அதைக் குறைவற நிறைவேற்றும் வழி வகைகள் யாவை என்பதை எண்ணித்துணியும் உள்ளத் தால், அவன் கண்கள் உறக்கம் கொள்வதில; ஒருவேளை அவன் தன் எண்ணத்தை மறந்து சிறுதுயில் கொண்டால், அந்நிலையில் அவனிருக்கும் பாசறைக்கண்ணேயிருந்து,

சங்கும் பிற போர்க்கருவிகளும் எழுப்பும் ஒலி, அவனுக்கு அவ்வேட்கையினை நினைப்பூட்டிவிடும்; அதனால், அவன் கண்கள் அரிதாகப்பெற்ற அச்சிறு துயிலையும் செவ்வனே பெறுவதில்லை :

"பகை வெம்மையின் பாசறை மரீஇப்
பாடரிது இயைந்த சிறுதுயில் இயலாது
கோடு முழங்கு இமிழிசை எழுப்பும்
பீடுகெழு செல்வம் மரீஇய கண்ணே." (பதிற்று: ௫0.)

இவ்வாறு, செங்குட்டுவன் போர்க்குணம் பலவற்றைப் பாராட்டிய பரணர், அவன் வெற்றிச் சிறப்பை வேறுவகையாலும் வியந்து பாராட்டுவாராயினர்; புலவர்கள், ஏர்க்கள உழவர்களையும், போர்க்கள அரசர்களையும் பாடும் பண்புடையவராவர்; அதனால் அரசர்களை உழவர்களாகக் கொண்டு, அவ்வுழவர்கள் தொழிலை எல்லாம் அரசர்களுக்கு ஏற்றிப் பாடுவதையும் மரபாகக் கொண்டுள்ளனர்; பரணரும் அம்முறையினைப் பின்பற்றிச் செங்குட்டுவன் போர்ச்சிறப்புக்களைப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில் பாராட்டியுள்ளார் :

உழவுத்தொழில் என்றால் அதற்கு உறுதுணையாய மேகம் தேவை; அது, கறுத்து மழைபெய்யும் காலத்து மின்னலும் இடியும் தோன்றும். பெய்யும் மழையை நாற்றிசையும் பரவச்செய்யப் பெருங்காற்றுத் தேவைப்படும்; இவற்றால் ஈரம்கொண்ட நிலமும் அந்நிலத்தை உழும் ஏரும் வேண்டும்; நிலத்தை உழுதுபெற்ற படைச்சாலில் விதைகளை விதைப்பர்; அவை விளைந்துவிட்ட கதிர்க்கணைகள் முற்றித் தலைசாய்த்து நிற்கும்; அவற்றை அறுத்துப் போரிட்டுக் களத்தே இருந்து, இரவலர்க்கும் பிறர்க்கும் வேண்டும் உணவளித்து உழவர் மகிழ்வர்.

ஏர்உழவர்தம் இச்செயலைப் போன்றே வில்லேர் உழவனாகிய வெல்புகழ்க் குட்டுவனும் யானைகள் மேகமாக, வீரர் கைவாள் மின்னலாக, போர்ப்பறை இடியாக, விரைந்து பாயும் குதிரைகள் வீசும்காற்றாக, வில்லினின்றும்

வெருண்டு களமெங்கும் விரைந்து பாயும் அம்புகள் மழையாக, அம்பாலும் பிற படைக்கலங்களாலும் இறந்து வீழ்ந்தார் உடலினின்றும் ஒழுகிய செந்நீரால் சேறுபட்ட போர்களமாகிய வயலைத், தேரை ஏராகக்கொண்டு உழுது ஆயுதமாகிய படைவாளால், கீழ்மேலாக மறிக்கப்பட்ட படை முதலியவற்றின் நிரைகளாகிய படைச்சாலின்கண் வீசி எறியப்பெற்ற வேல், கணையம் போன்றவற்றை விதைகளாக வித்தி, வீரர்கள் தலைகள் வெட்டுண்டு சாய்கின்ற நிலையினைப் பயிராகக் கொண்டு, களத்தே வீழ்ந்துகிடக்கும் பிணங்களைப் போராகக் குவித்து அப்போர்க்களத்தே இருந்து பாடிவரும் பாணர் முதலியோர்க்குப் போரிட்டுப் பெற்ற பகைவர்பொருள்களை வாரி வாரி வழங்குவானாயினன் :

“ இருப்புமுகம் செறித்த ஏந்தெழில் மருப்பின்
கருங்கை யானை கொண்மூ வாக,
நீள்மொழி மறவர் எறிவனர் உயர்த்த
வாள்மின் னாக, வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய முரசு முழக்காக,
அரசராப் பனிக்கும் அணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசு வளியாக,
விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயின் தேர் ஏராக,
விடியல்புக்கு, நெடிய நீட்டி நின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு பைஞ்சால்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி
விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு
கணநரி யோடு கழுதுகளம் படுப்பப்
பூதம் காப்பப் பொலிகளம் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள ! ” (புறம் : ௩௬௯.)

செங்குட்டுவன் போர்ச்சிறப்புக்களை இவ்வாறு பொதுவாகப் பாராட்டிய பரணர், அவன்பெற்ற வெற்றிகள்

சிலவற்றை விளக்கமாகவும் எடுத்து இயம்பியுள்ளார்; செங்குட்டுவன் மேற்கொண்ட போர்கள் பலவாயினும், பரணரால் பாராட்டப்பெற்ற பெருமை வாய்ந்தன; அவற்றுள் கடல்பிறக்கோட்டிய நிகழ்ச்சியும், மோகூர்ப் பழையனைப் பணியவைத்த நிகழ்ச்சியுமே ஆகும். செங் குட்டுவன் பெற்ற கடற்போரைச் சிறப்பித்துப் பரணர் பல இடங்களில் பாராட்டியுள்ளார்.

ஒருவன் ஓயாது ஒலிக்கும் அலைகளையுடைய கடல்நீர், காற்றால் அலைப்புண்டு சிறு சிறு திவலைகளாக மாறியுடையுமாறு பெரும்போரிட்ட தாள்கள்: "கால்உளைக் கடும் பிசிருடைய வால்உளைக் கடும்பரிப் புரவி யூர்ந்தநின் படுந் திரைப் பனிக்கடல் உழந்ததாளே;" ஓவென முழங்கும் அலைகளோடு கூடிய குளிர்ந்த கடலிடையே, மணிபோல் ஒளிவிட்டு மின்னும் வேற்படைகளைத் துணைகொண்டு சென்று, எதிர்த்த பகைவரை ஆற்றல் தோன்ற அழித்து வென்ற அரசர் குட்டுவ! நின்முன்னோரிலும் ஒருவரும் இலர்; அவ்வாற்றல் உடையார் இனிப் பிறப்பதும் அரிதே?

> "இனியார் உளரோ? நின் முன்னும் இல்லை!
> மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது,
> விலங்குவளி கடவும் துளங்கிரும் கமஞ்சூல்
> வயங்குமணி இமைப்பின் வேலிடுபு
> முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசி னோரே."

தலைமடங்கும் அலைகளையுடைய நீர்ப்பரப்பாகிய ஒலிக்கும் கடலை அரணாகக்கொண்டு வாழ்ந்த பகைவரைச், சங்குகள் ஒலிக்கும் அக்கடலும் கலங்குமாறு வேற்படை கொண்டு சென்று, வென்று ஓட்டிய வெற்றியால் புகழ் பெற்ற குட்டுவன், "கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு, உடைதிரை பரப்பிற் படுகடல் ஓட்டிய வெல்புகழ்க் குட்டுவன்." கடலிடையே சென்று, அக்கடலை அரணாகக் கொண்டு ஆங்கு வாழ்ந்திருந்த கடற்பகைவரோடு அரிய போர் ஆற்றிய, குளிர்ந்த கடற்கரைத் தலைவ: "நீர்புக்குக் கடலொடுழந்த பனித்துறைப் பரதவ!" தன்னோடு எதிர்த்

துப் போரிடத்தக்க பெரும்பகை எதையும், இந்நிலவுலகில் காணமாட்டாமையால், செங்குட்டுவன் தோள்கள் தினவு கொள்ளலாயின; ஆகவே அவன், தன் தோள் பூரிக்கப் போர்புரியவேண்டும் என்ற வேட்கையையே காரணமாகக் கடலைவளைத்துப் போரிட்டான்; உயர்ந்து எழுந்து விழும் அலைகளையுடைய அக்கடல்நீர், அவன் ஆற்றலுக்குத் தோற்றுப் பின்னிடுமாறு ஓட்டிப் பெருமையாற் சிறந்தது அவன் கைவேல்:

"குட்டுவன், பொருமுரண் பெறாஅது
விலங்கு சினம் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய
நீர்மாண் எஃகம்."

(பதிற்று: ௪௧, ௪௫, ௪௬, ௪௮; அகம்: ௨௧௨.)

செங்குட்டுவன் செய்த போர்களுள், மோகூர்ப் பழையனோடு அவன் ஆற்றிய போர் ஒன்றே, பரணரால் பெரிதும் விளங்க உரைக்கப்பட்டுளது; செங்குட்டுவன் செய்துள்ள போர்களில், இப் பழையனோடு செய்த போர் தான் மிக வீரம் சிறந்த போர் என்றும் கொள்ளலாம். ஆகவே, அப்போரின் காரணத்தையும், அப்போர் நிகழ்ச்சிகளையும், அப்போரின் பின் விளைவுகளையும், பரணர், விரிவாக உரைத்துள்ளார். "அறுகை, என் நண்பன் சேய்மைக்கண் வாழ்பவனே ஆயினும், அவன் என் சிறந்த நண்பனே ஆவன்," என்று பலரும் அறியக்கூறி, அவ் அறுகை, மோகூர் மன்னனுக்கு அஞ்சித் தன் நாட்டினின்றும் நீங்கி ஓடி மறைந்து வாழும் பழியினை ஒழித்தற் பொருட்டு, மோகூர் அரண்களைத் தகர்த்து, நகருள் நுழைந்து, அவனது வெற்றிமுரசினைக் கைப்பற்றி, அவன் காவல் மரமான வேம்பினை வெட்டி வீழ்த்தி, போர் முரசு செய்துகொள்ளும் வண்ணம் அதைச் சிறுசிறு துண்டங்களாகச் செய்து வண்டிகளில் ஏற்றிக் களிறு பல பூட்டித் தன்னொடு திரும்பினன்."

" வெல்போர் அறுகை
சேணனாயினும் கேளென மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்கு
அரண்கள் தாவுநீஇ, அணங்கு நிகழ்ந்தன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு
நெடுமொழி பணித்துஅவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய்." (பதிற்று. ௪௪.)

வேந்தர் இருவரும், வேளிர் பலரும் படைத்துணை யாவது கண்டு செருக்குடன் எதிர்த்த மோகூர்ப்பழையன் பெரும்படை நிலைகுலைந்து ஒழியுமாறு தாக்கினான்; பட்டொழிந்த பழையன் படைவீரர்களின் உடலினின்றும் ஒழுகிய செந்நீர், மழைநாட் புனல்போல் பள்ளம் நோக்கிப் பாயுமாறு பாழ்பல செய்தும் செங்குட்டுவன் அமைதி கொண்டான் அல்லன்; போர்முரசு, களத்தின் நடுவே ஒலிப்ப, வாளேந்தி, அவன் நாட்டுவளத்தை அழித்து, வாழவேண்டியவர் பலரையும் வாழாவகை செய்து, பழையன் காவல் மரமாம் கருஞ்சினை வேம்பினையும் வெட்டி வீழ்த்தி வெற்றிகொண்டான் :

" வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
மொய்வளம் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை அதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி
மழைநாட் புனலின் அவற்பரந் தொழுகப்
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரசம் நடுவண் சிலைப்ப
வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கடுஞ்சினை விறல்வேம் பறுத்த
பெருஞ்சினக் குட்டுவன்." (பதிற்று: ௪௯)

செங்குட்டுவன் பெற்ற இவ்விரு வெற்றிகளை மட்டுமே பரணர் குறிப்பிட்டுள்ளார்; அவன் பெற்ற ஏனைய வெற்றி

களோ, கண்ணகிக்குக் கோயில் அமைத்து விழாவெடுத்த பெருஞ்சிறப்போ அவர் பாடல்களில் இடம் பெறவில்லை. இதனால், செங்குட்டுவனின் இவ் வரும்பெரும் செயல்கள், அவன் வாழ்வின் பிற்பகுதியில் நிகழ்ந்தனவாதல் வேண்டும்; பரணர், செங்குட்டுவனுக்கு முன் நான்கு தலைமுறைக் கால வாழ்வுடையவராதலின், அவர், அவன் ஆட்சியின் இடைக்காலத்தே இவ்வுலகு விட்டு மறைந்தாராதல் வேண்டும்; அதனாலேயே, அந்நிகழ்ச்சிகள், அவர் பாக்களில் இடம் பெறவில்லை போலும்; இல்லையேல், தம் வாழ்நாட் காலத்தே நிகழ்ந்த சிறுசிறு நிகழ்ச்சிகளையும், விடாது உரைக்கவல்ல பரணர், செங்குட்டுவனின் இவ்வரும்பெரும் செயல்களை, அவனைப் பாடிய பத்திற்கும் மேற்பட்ட பாடல்களுள் ஒன்றிலேனும் குறியாது போனமைக்கு வேறு காரணம் காண்பதற்கில்லை என எண்ணுவர் அறிஞர்.

செங்குட்டுவன் போர்ச்சிறப்பினைப் புகழ்ந்து பாராட்டிய புலவர், அவன் படைவீரர் மாண்பையும், பகைவரால் கேடு உறல் அறியா அவன் நாட்டின் சிறப்பையும் பாராட்டியுள்ளார்; 'மறனிழுக்கா மானம்,' மன்னர்க்கும், மன்னர்தம் படைவீரர்க்கும் பண்பெனத் திகழ்தல் வேண்டும் என்பர். தம்மினும் ஆண்டால் முதிர்ந்து தளர்ந்தாரையும், ஆண்டால் குறைந்து ஆற்றல் முழுதும் வாய்க்கப்பெறாதாரையும், ஒத்த ஆண்டினராயினும், போர்க்களம் புகுந்து, போர்த்திறம் புரிந்துகொள்ளாதாரையும் பகைத்துப் போரிடல் பெரு வீரர்க்கு அழகன்று; அது ஆண்மையும் ஆகாது. படை இழந்து நிற்பார் மீதும், படைவிட்டுப் பின்னிடுவார்மீதும் படை ஏவுதல் பழியாம் எனக் கொள்வது, பெருவீரராயினார்க்குப் பெருமிதம் தருவதாம். இப் பண்புகளையே 'மறனிழுக்கா மானம்' என்பர் பெரியோர். 'செங்குட்டுவன்வீரர் இவ்வினத்தைச் சேர்ந்த வீரர்களாவர்; அவர்கள், தம்மையொத்த பெருவீரர்களுடனேயே போரிட விரும்புவர்; போராற்றல் பெறாதாரையும், புண் பெற்றுப் புகழ்கொள்ளாதாரையும் எதிர்ப்பதிலர்; போர் பல கண்டு, அப்போரில் பெற்ற புண்களினாலாய வடுக்கள்

நிறைந்த மார்பினரைத் தேர்ந்தே போரிடும் பண்பினராவர்' எனப் பரணர் பாராட்டுவது காண்க :

" நெடுவள் ஊசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
அம்புசேர் உடம்பினர் சேர்ந்தோர் அல்லது
தும்பை சூடாது மலைந்த மாட்சி
அன்னோர் பெரும!" (பதிற்று : சஉ.)

பகைவர் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தும் அரண்களுள் ஒன்றாகத், தங்கள் நாட்டைச் சூழ முள்வேலி யிடுவதைப் பழங்கால வேந்தர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர் ; செங்குட்டுவன் பிறநாடுகள் மீது சென்று தாக்கும் படைவலியுடையான் ; ஆகவே, தம்மீது வரும் பகைவர்களை நின்று தாங்கும் நிலைமை அவனுக்கில்லை ; அவன், பகைவர் நாட்டு அரண்களைப் பாழ்செய்யும் பண்புடையான் ; தன் நாட்டு அழிவைத் தடுக்கும் அரண் அவனுக்குத் தேவையில்லை ; அவனோடு எதிர்நின்று போரிடும் பேராண்மை இன்றிப் பின்னிடுவர் வேந்தர் எல்லாம். ஆகவே, அவன் நாடு நோக்கி வரும் பகைவர் எவரும் இலர் ; பகையில்லை ஆகவே, பகைவர்படையைத் தடுத்து நிறுத்தவேண்டிய தற்காப்பு அரண்முயற்சிகள் அவன் நாட்டார்க்கு இல்லை ; அதனால், அவன் நாட்டெல்லையில், பகைவர்படைகளைத் தடுத்து நிறுத்தவல்ல முள்வேலிகள் இடம்பெறுவதில்லை ; பரணர், செங்குட்டுவன்தன் இப்படைப் பெருமையினைப் பார்த்துப் பாராட்டியுள்ளார் : "முள் இடுபு அறியா ஏணி."

செங்குட்டுவன் போர்ப் பண்புகளைப் புகழ்ந்து போற்றிய பரணர், அவன் அருள் உள்ளத்தையும், புலவர்க்கும், இரவலர்க்கும் பொன்னையும், பொருளையும் வாரி வழங்கும் அவன் வள்ளன்மையினையும் விளங்கப் பாடியுள்ளார்.

செங்குட்டுவன், செருப்பல கடந்த சிறப்புடையனாதலே யன்றி, கொடுத்து மகிழும் குணச்சிறப்பும் உடையனாவன் ; மழை பெய்யாது பொய்த்துப் போதலினால், நாட்டில் மூங்கில்கள் கருகவும், வளங்குன்றாப் பெருங்குன்றுகள்

எல்லாம் வாடவும், அருவிகள் நீர்அற்று அழகிழப்ப வும் பெரும்பஞ்சம் தோன்றியகாலத்தில், சேரநாட்டுப் பேராறு, கரைகளை அழித்து ஓடி, பொன்னேர் பூட்டும் உழவர் உள்ளமெல்லாம் பூரிக்கச்செய்யுமாறு, பெருமழை பெய்து பெருவெள்ளம் வரச்செய்யும் வானத்தைப் போன்ற கொடைக் குணமுடையான் குட்டுவன்.

செங்குட்டுவன், பொருள்பெறு நசையால், தன்னைப் பாடி யடைந்த புலவர் பெருமக்களை விரும்பி ஏற்று, அவர் ஆர உண்ணுமாறு அருகிருந்து உண்பிப்பன்; ஆடல் பாடல்களால் தன் அகம் மகிழச்செய்யும் பாணர், கூத்தர் முதலியோர்க்கு பொற்கலன் பல அளிப்பன்; கையிற் றாங்கிய யாழின் எழுந்த இசையோடு இயைய இன்குரல் எழுப்பிப் பாடும் விறலியர்க்குப் பிடியானைகள் பல அளித்து அன்பு காட்டுவன்; வெற்றிமேல் வெற்றியே வேட்கை யாகக்கொண்டு, பகைவேந்தர் உள்ளம் பதைபதைக்கு மாறு, அவர் நாட்டிற் புகுந்து போரிட்டுப் பொருள்பல கவர்ந்துவரும் ஆண்மை நிறைந்த ஆற்றல்மறவர்க்குக் கொல்லும் யானைகள் பல கொடுத்து மகிழ்வன்; கையில் கோலேந்தி, ஊர் மன்றத்தும், தெருக்களிலும் வேந்தன் விழுப்புகழ் விளங்கப் பாடும் பாணர்க்குக் குதிரைகள் பல பரிசளித்துப் பாராட்டுவன்; இவற்றால் எல்லாம் செங்குட்டுவன் புகழ் ஓங்குவது கண்டு அவன் பகைவர் பொறாமை கொள்வர் எனினும், அவன் புகழ் அவர் உள்ளத்தே அடங்கி மறைந்துபோகா மாண்புடைய தாகவே, அவர்கள் தங்களையும் மறந்து அவன் புகழ் பாராட்டுவர் :

"..........................................
ஆர்கலி வானம் தளிசொரிந் தாங்கு
உறுவர் ஆர ஓம்பாது உண்டு,
நகைவர் ஆர நன்கலம் சிதறி,
ஆடுசிறை அறுத்த நரம்புசேர் இன்குரல்
பாடு விறலியர் பல்பிடி பெறுக;
துய்வீ வாகை நுண்கொடி உழிஞை

வென்றி மேவல் உருகெழு சிறப்பின்
கொண்டி மள்ளர் கொல்களிறு பெறுக ;
மன்றம் படர்ந்து மறுகுசிறைப் புக்குக்
கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே ; என்றும்
இகல்வினை மேவலை யாகலின், பகைவரும்
தாங்காது புகழ்ந்த தூங்கு கொளை முழவின்
தொலையாக் கற்ப." (பதிற்று : சங.)

செங்குட்டுவன், 'போர் பல புரிந்து பெற்ற பொருள்கள் இவை, அருமை உடையவை ; நமக்கு வேண்டுவன என்று கருதாது, போரிற் பெற்ற பொருள்களை எல்லாம், தன்பால்வந்து இரந்தார்க்கு வாரி வாரி வழங்கும் வண்மை உடையனே அன்றி, 'நான் துயர்நிலையில் உள்ளேன் ; என் துயர் களைந்து ஓம்புக' என்று ஒருவர்பின் நின்று இரப்பதைக் கனவினும் கருதாக் கவின்உடையன் ;

"பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற,
அரிய வென்னாது ஓம்பாது வீசிக்,
கலம்செலச் சுரத்தல் அல்லது கனவினும்
களைக என அறியாக் கசடில் நெஞ்சத்து
ஆடுநடை அண்ணல்'' —(பதிற்று : சச.)

என்று செங்குட்டுவன் தன், சுரத்தல் அல்லது இரத்தல் அறியாச் சிறப்பைப் பரணர் பாராட்டினார். செங்குட்டுவனைப் பாடிச்சென்ற பரணர், கூத்தர்போன்ற இரவல் மாக்கள், அவன் இவ்வாறு சிறந்த கொடை வள்ளலாய் விளங்குவது கண்டு, அவனை விட்டுப்பிரிந்து வேற்றார் செல்லவோ, தம்மூர் நண்ணவோ எண்ணாராய், என்றும் அவன் பக்கலிலேயே இருக்க எண்ணுவர் :

"வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்,
செல்குவம் என்னார் பாடுபு பெயர்ந்தே'' —(பதிற்று : சகூ.)

என்றும் பாராட்டும் பரணர்பாக்களின் நலனறிந்து மகிழ்க.

செங்குட்டுவன் ஆற்றல்மிக்க அரசனாகவும், ஏற்றோர் இன்முகம் கண்டுவக்கும் உயர்கொடையாளனாகவும்

விளங்குவது கண்ட பரணர், அவனைச் சென்றுகண்டார்; கண்டு, "குட்டுவ! நின்னைக் காணவேண்டும் என்ற பேராசை பிடர் பிடித்துந்த, கடத்தற்கரிய வழிபல கடந்து வந்துளேன்", 'மழை பெயல் மாறிய கழை திரங்கு அத்தம், ஒன்று இரண்டு அல, பலகழிந்து, திண்தேர் வசையில் நெடுந்தகை' காண்கு வந்திசின்; ஆதலின், எனக்குக் கன்றைவிட்டுப் பிரியாப் பிடியானையோடு கூடிய களிறுகள் பல வேண்டும்; அவற்றை மறாது அளித்து, என்னையும் சிறப்பித்து நீயும் மாண்புறுக! 'துடியடிக் குழவிய பிடியிடை மிடைந்த, வேழ முகவை நல்குமதி!' என்று பாடி நின்றார்.

முதுபெரும் புலவராய பரணர்தம் பாடல் கேட்ட செங்குட்டுவன், அவர்தம் அருமையும் பெருமையும் உணர்ந்து, அவர்க்குத் தன் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய உம்பற்காட்டின் வருவாயினை வழங்கியதோடு, அவர்பால் தன் அருமைமகன் குட்டுவன் சேரலை ஒப்படைத்து, அவனை அறிவுத்துறைபோய பெரியோனாக்கு மாறு வேண்டி நின்றான்.

செங்குட்டுவன் அளித்த சிறப்பினைப் பெற்ற பரணர் உள்ளம், அவன் நெடிது வாழவேண்டும் என்று விரும்பிற்று; அவ்விருப்பம், "ஆற்றல்மிக்க அண்ணல்! புகழ் பெற்ற நின் உடலை, நின்னைப் பாடிப் பரிசில்பெறும் பாண் மகளிர்மட்டுமே காண்பாராக; பெருநிலம் முழுதாண்டு, மாண்ட மன்னர்களை மறைக்கும் முதுமக்கள் தாழி காணாது ஒழிக!"

'ஆடுநடை அண்ணல் நிற்பாடு மகள் காணியர்;
காணிலியரோநிற் புகழ்ந்த யாக்கை
.................................................
முரசுடைத் தாயத்து அரசுபல ஓட்டித்
துளங்குநீர் வியலகம் ஆண்டு இனிது கழிந்த
மன்னர் மறைத்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே." (பதிற்று: சச.)

என்ற அவர் வாழ்த்துரையில் விளங்கிநிற்றல் காண்க.

செங்குட்டுவன் சிறப்புச்செய்யச் சேரநாட்டில் சில ஆண்டு வாழ்ந்திருந்த பரணர், செங்குட்டுவன் உவக்கு மாறு, அவன் புகழ்தோன்றப் பல பாக்கள் பாடினார்; அவனை அவர் பாராட்டிய பாடல்கள், பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்திலும், புறநானூற்றிலும், அகநானூற்றிலும் தொகுக்கப்பெற்றுள்ளன.

(5) பேகன் :

மதுரை மாவட்டத்தில் பொதினி என்றோர் மலை யுண்டு; அது ஆவிநன்குடி என்ற பெயராலும் வழங்கப் பெறும்; மக்கள் அதைப் பழனிமலை என இப்போது அழைக்கின்றனர். ஆவிநன்குடி, முருகன் உறையும் அறு பெரும் குன்றுகளுள் ஒன்றாம் என்பதற்கேற்ப, அம் மலைக் குரியோன் எனப்படும் நெடுவேள் ஆவி என்பான், முரு கனையொத்த பேராற்றல் உடையான் என முருகனோடு உவமிக்கப்பட்டுள்ளான்: "முருகன் நற்போர் நெடுவேள் ஆவி." அப் பொதினிமலையும் தெய்வக்காப்புடையது என்று நூல்களில் கூறப்பட்டுள்ளன: "அருந்திறல் கட வுள் காக்கும் உயர்சிமை."

வள்ளல்கள் என வாழ்த்தப்பெறும் பேறுபெற்றோர் எழுவராவர்; அவர்கள் ஒவ்வொருவரும் வள்ளல்தன்மை யில் ஒத்திருப்பது போன்றே, ஒவ்வொருவரும் ஒவ்வொரு மலையினைத் தங்களுக்கு உரிமையாகப் பெற்றிருப்பதிலும் ஒற்றுமைகொண்டிருக்கக் காண்கிறோம்; பாரிக்குப் பறம்பு, காரிக்கு முள்ளூர், ஓரிக்குக் கொல்லி, ஆய்க்குக் கவிரம், அஞ்சிக்குக் குதிரை, நள்ளிக்குத் தோட்டி என உரிமைப்படுத்திப் பாடியிருப்பதைப்போன்றே, பேகனுக் குப் பொதினிமலை உரிமை உடையது எனப் புலவர்கள் கூறியுள்ளனர். பழனிமலையில் உள்ள குளத்தின் பெய ராகிய வையாவிக்குளம் என்பதற்கும், அப் பொதினி மலைக்குரியோனாகிய பேகனின் மற்றோர் பெயராகிய வையாவிக்கோ என்பதற்கும் உள்ள ஒற்றுமை தொடர் பின்றி வந்ததன்று.

மலை நாட்டிற்குரிய பேகன், "பெருங்கல் நாடன்" எனப் புலவர்களால் அழைக்கப் பெறுவான். அவன் ஆவி யர் குடியிற் பிறந்தவன்; புலவர்கள், "ஆவியர் கோவே," "ஆவியர் பெருமகன்," என்றெல்லாம் அவனை அழைப்பது காண்க; அவன் பெயர்க்கு முன்வரும், "வையாவிக்கோ" என்ற சிறப்புப் பெயரும், அவன் ஆவியர்குடியில் வந்த வன் என்பதை உறுதிசெய்தல் காண்க. தமிழ்நாட்டின் ஏனைய குடிகளின் தோற்றமும் தொன்மையும் அறியக் கூடாதனவாய்க் காணப்படுதலேபோன்று, இவ் அதியர் என்பார்தம் தொடக்க வரலாறும் அறியக் கூடவில்லை. "நெடுவேள் ஆவி அறுகோட்டு யானைப் பொதினி," "நெடு வேள் ஆவி பொன்னுடை நெடுநகர்ப் பொதினி" என்ற தொடர்களில் வரும் நெடுவேள்ஆவி என்பவனே, இவ் ஆவியர்குடி முதல்வனுவன் என்பர் சிலர்; அஃது உண்மை யாயின், இவ் ஆவியர் என்பவரும் வேந்தர்க்கு மகட் கொடுக்கும் உரிமைபெற்ற வேளிருள் ஒரு பிரிவினராவர் எனக் கொள்ளலாம்; ஆனல், மேற்கூறிய தொடர்களில் வரும் "நெடுவேள் ஆவி" என்ற சொற்றொடரை, அக நானூற்று அரும்பத உரையாசிரியர், "ஆவி நெடுவேள்" என மாற்றி, "ஆவி நெடுவேள் - குறுநில மன்னன்" எனப் பொருள்கூறி இருப்பதை நோக்கின், அந் நெடுவேள் என்பான், ஆவியர்குடியில் வந்தவன் ஆவன் என்றே பொருள் கொள்ளவேண்டி யிருத்தலின், அவன், அக்குடி முதல்வன் ஆகான்; அக் குடியில் வந்தோருள் இவனும் ஒருவன் என்றே கருதுதல் வேண்டும்; இதனல், அக்குடி முதல் விளங்கவில்லை என்பதே முடிபாகக் கொள்க.

ஒருநாள் உலாப் போந்த பேகன், குளிர்ந்த வாடை வீசவும், விசும்பில் முகிற்குலம் கறுத்துத் திரண்டு மூடிக் கொள்ளவும் கண்ட மயிலொன்று தன் தோகை விரித்து மகிழ்ந்து ஆடுதலைக் கண்ணுற்றுக் களித்து நின்றான்; அதுவும் தன்னைப்போன்றே வாடையால் வருந்துகிறது என்று எண்ணினன்; அதன்பால் இரக்கம் பிறந்தது; உடனே, வாடைக்கு அஞ்சி, அணிந்து வந்திருந்த அழகிய

தன் ஆடையை அம்மயில்மீது போர்த்து விட்டுப் போயி னான்; பேகனின் அருள் உள்ளத்தையும், கொடைச் சிறப்பையும் உணர்த்தும் இவ்வரிய நிகழ்ச்சியினைப் புலவர் கள் பலரும் பாராட்டுவாராயினர்.

இவ்வாறு பெருமைமிக்க பேகனைப் பார்த்துப் பாராட்டப் பரணர் விரும்பினார்: "மழை, நீரற்று வற்றிய குளத்திலும், வித்திவான் நோக்கும் வயல்களிலும் பெய்து பயனுடையதாகிறது; ஒன்றும் விளையாக் களர்நிலத்திலும் பெய்து பயனின்றிக் கழிதலும் உண்டு. இவ்வாறு, பெய் தால் பயனளிக்கும் இடம் இது; ஆகவே ஈண்டுப் பெய்தல் வேண்டும்; பெய்தாலும் பயனுறா இடம் இது; ஆகவே ஈண்டுப் பெய்தல் கூடாது என வரையறுத்துக் கொள் ளாது, எங்கும் பெய்வதே போல், பேகனும், இரவலர் தம் தகுதி, தகுதியின்மைகளை அறிந்து நோக்கும் அறிவிலனாய்த் தன்பால் வந்து இரப்பார் யாவரே ஆயினும் அவர்க் குப் பொருள்கொடுத்து அறிவற்றவனாவன். ஆனால், அவன், இவ்வாறு கொடைத்தொழிற்கண் அறிவற்றவன் ஆவனேயன்றி, போரின்கண், அறிவின்றிக் கண்மூடிக் கொண்டு போரிடுவானல்லன். போரில், பேராண்மை இலாதார், புறமுதுகிட்டுப் புண்பெற்றோர், இளையர், முதியோர் எனப் போர்த்தகுதி பெறாதாரும் வருவர்; அவர்கள்மீது எல்லாம் அமர்தொடுத்தல் ஆண்மை உடை யார்க்கு அறமாகாது; ஆண்டாலும், ஆற்றலாலும் தம்மை யொத்தார்மீதே போரிடுதல் வேண்டும். இது போர் அறம்; பேகன், இவ்வறம் அறியாது போரிடான். அவன், போர்அறம் அறிந்த பேர்அறிவாளன் ஆவன்."

"அறுகுளத்து உகுத்தும், அகல்வயல் பொழிந்தும்
உறும்இடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்,
கொடை மடம் படுதல் அல்லது,
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே."

(புறம். கசஉ)

என, அவன் கொடையும் கொற்றமும் ஒருங்கே விளக்கும் பாடல் ஒன்றைப் புனைந்துகொண்டு அவன் ஊர் சென்றார்.

ஆவிநன்குடியடைந்த பரணர், பேகன்பெருமனை முன் நின்று, அவனையும், அவன் நாட்டையும் பாடினார்; அப் பாடல்கேட்டு அங்கே வந்தாள் பேகன் பெருந்தேவியார்; கண்ணகி என்னும் நல்லாள்; வந்தவள் முகத்தைப் பரணர் பார்த்தார்; நீலமலர் போன்ற அவள் கண்களி னின்றும் சிந்தும் கண்ணீர், அவள் அணிகளையெல்லாம் நனைத்துக்கொண்டிருப்பதை அறிந்தார்; பேகன், பேராற் றல் உடையவன்; பெருங்கொடை வள்ளல்; ஆகவே, அவனுக்குரியோர் எல்லாம் இன்பவாழ்வினராவர்; ஆனால், ஈண்டு நிற்கும் இவள் அழுகிறாள்; இவள், அவனுக்கு உரிமை உடையாள்அல்லள்போலும் என எண்ணினார்; அவளை வணங்கி, “இளமையும் அழகும் உடையீர்! தாங்கள் எம்மால் விரும்பப்பெறும் பேகனுக்குப் பெருங்கிழமை உடையையோ?” என வினவினார். உடனே, அவள், மலர்போன்ற தன் கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, “நாங்கள், அவனுக்கு உரிமை உடையாரல்லர்; அவன், உங்கள் தலைவன் பேகன், எம்போன்றாள் ஒரு பரத்தையோடு உறவுடையனாய் முல்லைநல்லூரின்கண்ணே வாழ்கின்றான்,” என்று கூறினாள்.

பேகன், பரத்தையரொழுக்கம் உடையான் என்பது கேட்ட பரணர் அவன்பால் பெருவெறுப்புற்றார்; பேகன் தவறினான் எனினும், திருத்தி நல்வழிப்படுத்தல் கூடும் என்று நம்பினார்; அதைச் செய்வது தம்போன்றார் கடமை என்றும் எண்ணினார்; நட்பு, நகுதற்பொருட்டு அல்ல, தவறு கண்டவழி, மேற்சென்று இடித்தற்பொருட்டு அன்றோ? உடனே, பேகன்வாழும் நல்லூர் சென்றார்; ஆங்கே, தம்மைப்போன்றே, கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் முதலிய புலவர்பெருமக்கள் பேகனோடிருந்து அறிவுரை கூறுவதைக் கண்டார்; அப் பணியில், அவர்க்குத் துணையாய்ப் பேகனை நோக்கி, “பேக! மயில், வாடைகண்டு வருந்தாது, மகிழ்ந்து ஆடும் இயல்பின

தாகவும், அது, வாடும் என்று கொண்டு அவ் வாட்டம்தீர ஆடை அளித்து அருட்செய்யும் திறமுடையாய் நீ என்பர்; ஆனால், அவ்வருட்குணம் நின்பால் இருக்கக் காண்கிலேன்; இருக்குமாயின், நின் மனைவி, மனையின்கண் இருந்து வருந்த, ஈண்டு நீ மகிழ்ந்து வாழாய் அன்றே? நின்பால் காணும் இவ்வொழுக்கம் இழிவுடைத்து; யாழ் இசைத்து நின்னைப் பாடுகின்றேன்; அருள் புரிவாயாக என, நின்னை வேண்டுகிறேன்; இவ்வாறெல்லாம் வேண்டுவது, என் பசித் துயர் போக்க அன்று; பசியால் வருந்தும் சுற்றமும் எனக்கில்லை; ஆகவே, பொருள்வேண்டும் புன்மைஉடையேனல்லேன்; உண்மையில், எம்பெருமை அறிந்து அளிக்கும் பேர்உள்ளம் உடையையாயின், உடனே, நின் தேர்ஏறிச் சென்று, நின் மனையின்கண், நின்னையே நினைந்து நைந்துருகும் நின் மனைவியின் துயர் களைவாயாக. அதுவே யாம் வேண்டும் பரிசில்,'' என்று கூறினார்.

'அறம்செய் தீமோ அருள்வெய் யோய்! என
இஃதியாம் இரந்த பரிசில்; அஃது, இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னா துறைவி அரும்படர் களைமே.''

"அருளா யாகலோ கொடிதே.'' (புறம், கசடு, கசச)

புலவர்தம் நல்லுரை கேட்ட பேகன், தேர் ஏறித் தன் வீடடைந்து மனைமாட்சியை மாண்புறச் செய்தான்; பரணர் உள்ளிட்ட புலவர்க்கெல்லாம் பெரும்பொருள் அளித்துப் பெருமை செய்தான்.

பேகன் அளித்த பரிசில்பெற்று மகிழ்ந்த பரணர், அவன் அளித்த பொருளின் பெருமையும், கொடுக்கும் அவன் உள்ளச் சிறப்பும் விளங்கப் பாடிய பாட்டொன்று, பாவலர் போற்றும் பண்புடையதாகும்.

பேகன்பால் பரிசில் பெற்று மீளும் ஒரு பாண்மகனை, இடைவழியில், வறுமையே அணிகலனாக்கொண்ட மற்றோர் பாண்மகன் காண்கின்றான்; பரிசில் பெற்ற பாண்மகன், பொற்றாமரைப்பூச் சூடித்திகழ்வதையும், அவன் உடன்

வரும் விறலியர், பொன்னரிமாலையால் மாண்புற்று விளங்கு வதையும், அவர்கள், வழியை, நடந்து கடக்காது, விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய நெடிய தேர்ஏறி வந்திருப் பதையும், ஒரு குறையும்இன்றி நாட்டிடைவாழ்வாரே போல், காட்டிடையே கவலையற்று வாழும் அவர் வாழ் வினையும் கண்டான்; அக்காட்சி அவனுக்குப் பெரு வியப்பை அளித்தது; 'நம் போன்ற பாண்மகன் இவன்; இவனுக்கு ஏது இத்துணைப் பெரும்செல்வம்?' என்று எண்ணுவானாயினன். அவன் மனக்குறிப்பினை, முகக் குறிப்பால் அறிந்துகொண்ட பரிசில் பெற்ற பாண்மகன், அவனைநோக்கி, "காக்கவேண்டிய பெருஞ் சுற்றத்தினையும், கடும்பசியையும் உடைய பாண்மகனே! வெல்லும் வேலேந் திய பேகனைக்கண்டு, பரிசில் பெறுமுன், யாம் நின்னினும் வறுமை உடையராய் இருந்தோம்; இந்நிலையினை இன்று தான் பெற்றேம்; இது பேகன் அளித்த பரிசில்; பேகன் பெருங்கொடையாளன்; உடையினை உடுக்கவோ, குளிர் போக்கப் போர்வையினை மேற்கொள்ளவோ அறியா இயல் பிற்று மயில்; அவ்வியல்பினதாம் மயிலுக்குப் போர்வை அளித்த அருள் உள்ளம் உடையான் அவன்; அவன், வந்தோர்க்கெல்லாம் பொருள்களை வாரி வழங்குதல், கொடைப்பயன், மறுமையுலகில் வந்து பயனளிக்கும் எனக் கைம்மாறு கருதிக் கொடுப்பவன் அல்லன்; வந்து நிற்பார் தம் வறுமையின் கொடுமைகண்டே, வாரிவழங்கும் வழக் குடையான்; அத்தகையானைச் சென்று காணுங்கள்," என அறிவித்து ஆற்றுப் படுத்தான்:

"பாணன் சூடிய பசும்பொன் தாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்,
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட்டு அசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்!
யாரீ ரோ?என வினவ லானுக்
காரென் ஒக்கல் கடும்பசி இரவல்!
வெள்வேல் அண்ணல் காணா வூங்கே,
நின்னினும் புல்லியேம் மன்னே; இனியே,

இன்னேம் ஆயினேம் மன்னே ; என்றும்
உடாஅ, போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ,
கடாஅ யானைக் கலிமான் பேகன்,
எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே ;
பிறர், வறுமை நோக்கின்று அவன்கை வண்மையே.''

(புறம்: கசுக)

## (6) மலையமான் திருமுடிக்காரி :

தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர் வழிவந்தோர் ஆண்டுகொண்டிருந்த அந்தக் காலத்திலேயே, அவர்களுக்கு அடங்கியும், அடங்காமலும், அதியர், ஆவியர், மலையர், வேளிர் போன்ற வேறு இன அரசர்களும் ஆண்டுவந்துள்ளனர்; மூவேந்தர்கள், குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நாட்டை ஆண்டுவந்தது போன்றே இக்குறுநில மன்னர்களும், தங்கள் ஆட்சிக்குரிய நிலமாக, ஒரு எல்லைக்குட்பட்ட நாட்டைப்பெற்று விளங்கினர்; அத்தகைய அரச இனங்களுள் ஒன்றாகிய மலையர் அல்லது மலையமான்கள் என்பவர், தென்ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளதும், திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டது மான நாட்டை ஆண்டுவந்தனர்; அந்நாடு, பண்டைக் காலத்தில், மலாடு அல்லது மலையமானாடு என்ற பெயர் பெற்றிருந்தது ; அது காடும், மலைகளும் சூழ நடுநாட்டில் இருப்பதால், கடலாலோ, பகைவர்களாலோ அழிவுறும் என்ற அச்சம் அற்றிருந்தது. அந்நாட்டிடையே, முள்ளூர் என்ற அழகிய பயன்மிக்க மலையொன்றும் இருந்தது ; அந்தணர் பலர், அந்நாட்டைத் தங்கள் வாழ்விடமாக விரும்பி மேற்கொண்டிருந்தனர்.

அந்நாடாண்ட மலைய மன்னர்களுள், திருமுடிக்காரி என்பவன் சிறந்தவனாவன் ; வள்ளல் எழுவருள் ஒருவன் என்ற புகழிற்குரியான் ; தன்னைப் பாடிவரும் பாணர், கூத்தர், புலவர் முதலிய இரவலர்க்குக் களிறும், தேரும்

கொடுத்துச் சிறப்புச் செய்தவன்; பேராற்றல் மிக்க பெரு வீரன்; பேர்அரசர் மூவர்க்கும் படைத்துணைபோகும் பெரும்படை வலியுடையவன்; சேரமான் மாந்தரம் சேரல் இரும்பொறையும், சோழன் இராசசூயம்வேட்ட பெருநற் கிள்ளியும் பொருதவழி, சோழர்படைக்குத் துணைபோய் வெற்றிபெற்று வீறெய்தினன். தனக்குரிய முள்ளூர் மலையினைக் கைப்பற்றவேண்டும் என்ற பேராசை கொண்டு பெரும்படையுடன் வந்த ஆரிய அரசர்களை, அலறத் தாக்கி வென்று துரத்தினன்; கொல்லிமலைக்குரிய வில்லாண்மை மிக்க வல்வில்ஓரி என்பானைக் கொன்று, அவன் கொல்லி யைத் தன் நண்பன் பெருஞ்சேரல் இரும்பொறை என்பா னுக்கு அன்பளிப்பாக அளித்தான்; ஆண்டுத் தான்பெற்ற வெற்றி விளங்கித்தோன்றுமாறு, அக்கொல்லிநகர்த் தெருக்களில், நால்வகைப்படையும் சூழ்ந்துவர, பேர் ஆரவாரத்துடன் வலம் வந்து, வெற்றிவிழாக் கொண்டாடி னன்; பகைவர்நாட்டுப் பசுநிரைகளைக்கவர்ந்து வருவதில், தன்னை ஒப்பாரும், மிக்காரும் இல்லாப் பெருவீரனாய் விளங்கினன்.

பெரும்புலவர்பலருடைய பாராட்டைப்பெறும் பேறு இம்மலையனுக்குண்டு; பரணர், இவன் வில்லாண்மையும், கொடைச்சிறப்பும் விளங்கப் பாடிப் பாராட்டியுள்ளார்; "மலையமான், பகைவர்களின் பசுநிரைகளைத் தன் வில்லாண்மை காட்டி ஓட்டி வருவான்; தன் நாடு நோக்கி வந்து தன்பால் இரந்துநிற்பார்க்கு அவன் அளித்த தேர்கள் பலப்பல; அதனால், அவன் நாளோலக்கம் காண வேண்டி வேற்று நாட்டினின்றும் கூத்தர்பலர் விரும்பி வந்து வாழ்த்தி நிற்பர்; அவன்முன் நின்று அவர்கள் முழ வினை முழக்கிப் பாடி மகிழ்வர்," என்று பாடிய அவர் பாட்டில், அவர், அவனைத் தேர்வண்மலையன் என்ற பெயரிட்டு அழைக்கின்றார்; 'மலையன், பரிசிலர்க்களித்த தேர்களின் எண்ணிக்கை, அவன் முள்ளூர்மலையிற் பெய்த மழைத்துளியினும் பலவாம்' என்றெல்லாம் புலவர்கள் பாராட்டியுள்ளனர் எனினும், அவனுக்குத் 'தேர்வண்

மலையன்' எனச் சிறப்புப்பெயரிட்டுப் பாராட்டிய பெருமை பரணரையே சாரும்.

"........................................
முனையூர்ப்.........................................
பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன் முந்தைப் பேரிசைப்
புலம்பிரி வயிரியர் நலம்புரி முழவின்
மண்ணார் கண்." (நற்: ௧00.)

## (7) ஆஅய் ஆண்டிரன் :

தமிழக மலைகளுள் தலைசிறந்ததாகக் கருதப்படும் பொதியமலைக்குரிய ஆஅய், கடையெழுவள்ளல்களுள் ஒருவனாவான் ; அப்பொதியமலைச்சாரலைச் சேர்ந்த ஆய்குடி என்னும் ஊரும் அவன் உடைமை; இவன் பெயர், ஆஅய் அண்டிரன் எனவும் வழங்கப்பெறும்; அண்டிரன் என்பது ஆந்திரன் என்னும் தெலுங்குச் சொல்லின் திரிபாம் எனக்கொண்டு, இவன் தெலுங்குநாட்டினன் ; அகத்திய முனிவர், தமிழ்நாடு போந்தகாலை உடன்கொணர்ந்த பதினெண்குடி வேளிருள் ஒருவன் என்றெல்லாம் ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆய், புலவர்பலர்தம் பாராட்டைப் பெற்றவன் ; "மோசி பாடிய ஆய்" எனப் புலவர் ஒருவர் இவனைச் சிறப்பித்தலும் காண்க.

ஆய், அமர்கடந்து சிறக்கும் ஆண்மையாளன் ; தமிழகத்தில் புகுந்து, பெருந்தொல்லை விளைத்து வந்த கொங்கர் என்ற நாடோடிப் போர்வீரர்கூட்டத்தைப் பொதியமலையிலிருந்து, மேலைக் கடற்கரைவரை துரத்திச் சென்றுவிட்டான் எனின் அவன் வில்லாண்மைக்கு வேறு சான்று வேண்டாவன்றே? ஆய் சிறந்த வள்ளன்மை உடையான் ; அவன் வள்ளல்தன்மையினை வியந்து பாராட்ட, அவன், தனக்கு நாகம் நல்கிய நல்லாடை ஒன்றை, ஆலமர் நீலகண்டனுக்கு அளித்து மகிழ்ந்தான் என்ற ஒரு கதையினையும், அக்கால மக்கள் கட்டிவிட்டிருக்

தனர் ; அவன், தன்பால் வந்து இரந்தார்க்கு அவர் தகுதி நோக்காதே, களிறும் தேரும் கணக்கின்றி ஈவன். அவன் கொடுக்கும் பொருள்களுள் யானைக்கொடையே மிகுதியாக இருப்பதைக் கண்ட புலவர் ஒருவர், "ஆய்! நின்நாட்டு யானைகள், ஒருமுறை கருவுற்றால், பத்துக்கன்றுகளைப் பெற்றுத் தருமோ?" என வியந்து வினவுவார். இவ்வாறு கொடுக்கும் அவன், இம்மைச் செய்தது மறுமைக்காம் எனக் கணக்கிடும் வாணிப உள்ளம் உடையான் அல்லன்.

ஆஅய், இவ்வாறு, அருந்திறலும், பெருங்கொடையும் உடையானுதலை அறிந்த பரணர், தாம் பாடிய அகநானூற்றுப் பாக்கள் இரண்டினுள், அவன் மலையின் மாண்பையும், கொடைகொடுக்கும் அவன் உள்ளத்தின் உயர்வையும் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

" ஆய்குடி என்னும் அவன் நாடு, நன்மைபல செறிந்தது; தெற்கே இருப்பது; அவன் ஆய்குடிநாட்டு மலை தெய்வத்தன்மை உடையது; அம்மலையின் பக்க மலைகளில் ஒன்று கவிரம் என்பது; அது அணுகுதற்காகா அருமை உடையது; அம்மலையில் உள்ள, மலரால் நிறைந்த சுனைகளில் சூரரமகளிர் மகிழ்ந்து ஆடுவர்."

"..........................................

தெனாஅது
ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பில்
கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்
நேர்மலர் நிறைசுனை உறையும்
சூர்மகள்." (அகம் : ககஅ.)

இது அவன் மலையைப் பாராட்டியது.

"ஆஅய், தன்பால் வந்து பொருள்வேண்டி நிற்போர், அப்பொருளைப் பெறும் தகுதிஉடையராயினும், அல்லராயினும் அவர்கள் அனைவர்க்கும், மிடாக்களில் ஆக்கி வைத்திருக்கும் சோற்றை, அவர்கள் கையிற் கொண்ரும் உண்கலன் நிறையக் கொடுப்பன் ; அவன் காடு, யானைக

னால் நிறைந்தது; அக்காடுகளுக்கிடையே, அவனுக்கு உரிமையாய் இருந்தது தலையாறு என்னும் ஊர்; அவ்வூரில் வளர்ந்த மூங்கில்கள், வளம் நிறைந்தது; அதனால், அம் மூங்கிலின் இரு கணுக்களுக்கிடையே உள்ள இடம் மிக நீண்டிருக்கும்."

"வல்லினும் வல்லா ராயினும் சென்றோர்க்குச்
சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும்
மாஅல் யானை ஆஅய் கானத்துத்
தலையாற்று நிலைஇய சேய்உயர் பிறங்கல்
வேயமைக் கண்." (அகம். கடுஉ)

ஆஅய், நாடும் கொடையும் கண்டு பரணர் பாராட்டியது இது.

(8) அதியமான் நெடுமான் அஞ்சி :

சேலம் மாவட்டத்தில் உள்ள தர்மபுரி, பண்டைக் காலத்தில், தகடூர் என்ற பெயர்பூண்டிருந்தது; அத் தகடூரைத் தலைநகராகக் கொண்ட, சேரநாட்டின் ஒரு பகுதியை அதியர் என்பார் ஆண்டுவந்தனர்; அதியர்குடி வந்தோர், அமரரை வணங்கி, அவர்க்கு ஆவுதி அளித்து, அவர்கள் நாட்டுக் கரும்பினைத் தமிழகத்திற்கு ஆதியிற் கொணர்ந்தோராவர் என்ற பெருமையுடையது அக்குடி. அதியர், அண்டை நாட்டாராகிய சேரர்க்கு உறவினர்; குதிரைமலை, அவர்க்குரிய மலை. இவ்வதியர் குடியிலே வந்த அரசர் பல்லோருள்ளும் அன்பும், ஆண்மையும், அருளும், ஆற்றலும் அமைய ஆண்ட அரசன் அஞ்சி என்பவன்; அஞ்சி, அஞ்சாது அமர்புரியும் ஆற்றல் மறவராம் மழவர் என்ற வீரர்க்குத் தலைவனுவன்; அவர் துணை கொண்டு, அவன் பெற்ற வெற்றிகள் பலவாம்; மூவேந்தர் துயரையும் முன்னின்று துடைக்கும் முழுவலிபடைத்தோன் என்ற புகழிற்குரிய திருமுடிக்காரியின் திருக்கோவலூரை, அஞ்சி முற்றிஅழித்தான் எனின், அவன் ஆற்றலுக்கு, வேறு சான்று வேண்டாவன்றே? தன் காலத்தில், தொண்டைநாட்டுக் காஞ்சியைத் தலைநகராகக்

கொண்டு, தமிழகத்தின் ஒரு பகுதியை ஆண்டுவந்த தொண்டைமானிடத்தில், தன் அவைக்களப்புலவராம் ஔவையாரை அனுப்பி, அவர்வழி, தன் படையின் பெருமையினை அவன் அறியச்செய்து, அவன் ஆற்ற இருந்த அருஞ்சமரைத் தடுத்து வெற்றிபெற்றான்; அவன் தலைநகர் தகடூர், தகர்க்கலாகா அரண் பல உடையது; தகடூர் யாத்திரை என்ற நூல், அத்தகடூர்க்கண், அவனுக்கும், பெருஞ்சேரல் இரும்பொறை என்பானுக்கும் நடைபெற்ற பெரும் போரினையும், அதில் அதியமான் இறுதியில் இறக்க; அவன் தகடூர் அழிவுற்றதையும் அழகாக எடுத்துக்கூறுகிறது.

அஞ்சி, எழுபெரும் வள்ளல்களுள் ஒருவனாவன் எனப்புலவர்கள் புகழ்ந்துள்ளனர்; அஞ்சியைப் பாடிப் பாராட்டிய புலவர், பலராயினும், அவருள், அவனைப் பெரிதும் பாராட்டி, அவன் அரசவைப் புலவராய் அமர்ந்து இருந்தார் ஔவையாராவர்; அஞ்சியின் அருள்உள்ளத்திற்கு எடுத்துக்காட்டாய் இருந்தது, அவன், தன் அன்பிற்குரிய ஔவையார்க்கு, அரிய நெல்லிக்கனியொன்றை அளித்த அருட்செயலேயாம்.

அஞ்சி, கோவலூர்எறிந்து பெற்ற வெற்றியைப் புலவர் பலரும் போற்றினர்; அவ்வாறு போற்றினருள் பரணரும் ஒருவராவர்; பரணர் பாராட்டிய பெருமை கண்டு, அஞ்சியின் அவைக்களப்புலவராம் ஔவையார், அகம்மிக மகிழ்ந்து, "அஞ்சி! நின்னைப் பரணனும் பாடினன்!" என்று பாராட்டியுள்ளார். பரணர், அஞ்சியைப் பாராட்டியுள்ளார் எனினும், ஔவையார் கூறுவது போல், அவன், கோவலூரை அழித்துப்பெற்ற வெற்றியைப் பாராட்டிய பாட்டு எதுவும் இப்போது கிடைத்திலது; அகநானூற்றுச் செய்யுள் ஒன்றில், "அஞ்சி, குதிரைமலைக்குரியவன்; அவன் ஆற்றல் மறவர், பகைவர் நாடு புகுந்து, அந்நாட்டுப் பசுக்களைப் போரிட்டுக் கவர்ந்து வருவர்; ஆண்டு நிகழும் அம்மாடுபிடிசண்டையின் சுற்றில் தாம் பெற்ற வெற்றியைப்பாராட்டத் தம் கையில் உள்ள

துடியினை, அதன் வாரும் தளர்ந்து போகுமாறு ஓங்கி அடித்து ஒலிமிக எழுப்பி ஆரவாரம் செய்வர்,'' என்று அவன் ஆண்மையினைப் பொதுவாகவே பாராட்டியுள்ளார்.

> "நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி,
> கடுமுனை அலைத்த கொடுவில் ஆடவர்,
> ஆகொள் பூசலில், பாடுசிறந்து எறியும்
> பெருந்துடி." (அகம். நூஎஉ)

## (9) கண்டீரக் கோப்பெரு நள்ளி :

நள்ளி எனவும், கண்டீரக்கோப் பெருநள்ளி எனவும் வழங்கப்பெறும் இவன், கடையெழுவள்ளல்களுள் ஒருவனாய்க், குமணனுக்கு முற்பட்டோன் எனப்போற்றப் படுவோனாவன். தோட்டி என்ற மலைக்கும், அதைச்சூழ உள்ள மலைநாட்டிற்கும் உரியோன்; வில்லாற்றல் மிக்க வீரர்க்குத்தலைவன் ; இவன், தன் நாடுநோக்கி வருவார்க்கு யானையும், தேரும், பொன்னும், பொருளும் அளிப்பான் ; இவன் அளிப்பது மட்டும் அன்று ; இவன் இல்லாக் காலத்தில், இவன் நாடுநோக்கிச் செல்வார்க்குப் பிடி யானைகள் பலவற்றை இவன் பெண்டிரும் அளிப்பர்.

ஒருநாள் நள்ளி, காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தான் ; அக்காலை, அவ்வழியே வந்த வன்பரணர், வறுமையாலும், வழிநடைவருத்தத்தாலும் மெலிந்து மரமொன்றின்கீழ் இருந்தனர் ; இருந்தாரை, அந்நிலையிற் கண்ட நள்ளி, தான் வேட்டையாடிக் கொன்ற விலங்கின் தசையைக் கடைகோலால் உண்டாக்கிய தீயில் சுட்டு அவர்க்கும், அவரோடு வந்தார்க்கும் வழங்கினான் ; ஆரப் பசித்த அவர்கள், அதுதீர உண்ட பின்னர், மீண்டும் வழியே செல்லலாயினர் ; அந்நிலையில், நள்ளி, "காட்டில் வாழ்கிறேன் ; கையில் ஒன்றுமிலேன்,'' என்று கூறிக் கழுத்தில் அணிந்திருந்த ஆரமொன்றை அவர்க்கு அளித்தான் ; அவன் இன்னான் என்பதை அறியாத வன்பரணர், "வேண்டாதபோதே விருந்தேற்றுப் போற்றும் நீயார் ?''

என்று வினவ, அதற்கு விடையளியாதே வெளியேறினான்: பின்னர் வழிவந்தோரால், அவன் நள்ளி என்பதறிந்த புலவர் அவனை உள்ளத்தாலும், உரையாலும் பாராட்டினார்.

இத்தகைய பெருவள்ளலாம் நள்ளியின் சிறப்பையும், அவன்வீரர்தம் வில்லாற்றலையும், காடு செறிந்த அவன் மலையின் காந்தள்மலரின் கடவுள்சூடும் கவின்மிகு மணத்தையும் பரணர் பாராட்டியுள்ளார்.

"வல்வில் இளையர் பெருமகன் நள்ளி,
சோலை யடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுட் காந்தள்." (அகம். கருஉ)

(10) வல்வில் ஓரி :

கடையெழு வள்ளல்களுள் ஓரியும் ஒருவன்; விற்போரில் வல்லனாய், வல்வில் ஓரி எனப் பாராட்டப் பெறுவன்; இவன் வில்லாற்றல் குறித்து வன்பரணர் கூறிய விளக்கம் வியத்தகு சிறப்புடையதாம். ஓரியின் கைவில்லினின்றும் புறப்பட்டு விரைந்து சென்ற அம்பு, தொடக்கத்தில் வேழத்தை வீழ்த்திப் பின்னர் புலியின் உயிரைப்போக்கி, மானை மாளச்செய்து, பன்றியின் உயிரைப்பறித்து இறுதியில் புற்றில் அடங்கியிருக்கும் உடும்பின் உடலிற்சென்று தைத்து நிற்கும் என்று வரிசையாகக் கூறுவர். மேற்குத்தொடர்ச்சிமலையைச் சேர்ந்த கொல்லிமலை இவனுக்குரியது; அம்மலையில் அழகே உருவெனத் திரண்ட பாவையொன்றுண்டு. அவன்நாட்டு மக்கள், உழுதொழில்தவறி உணவின்றி வருந்தும் காலத்தில், காட்டில் யானைகளைக்கொன்று, அவற்றின் கொம்புகளை விலையாகக்கொடுத்து உணவுபெற்று உண்பர். ஓரி, காரியோடு போரிட்டு இறந்தான்; அதன்பின் அவன் கொல்லிமலையும், காரியின் நண்பராம் சேரவேந்தர்க்கு உரிமை உடையதாயிற்று; ஓரியைக் கொன்ற காரி, அக்கொல்லி நகரில், வெற்றி விழாக் கொண்டாடி, அந்நகர்த் தெருக்கள் வழியாக ஊர்வலம் வந்தான் என்ப.

ஓரி, மாரிபோல் வழங்கும் மாபெரும் வள்ளல்; அவன் கொல்லிமலை, பழம்பல கொண்ட பலாமரங்களால் நிறைந்தது; திண்ணிய தேர் ஏறித்திரியும் ஓரியின் காடு, மணம் மிக்க மலர்களால் சிறந்தது; அவற்றின் நாற்றம், நாற்புறமும் சென்று நலம்பெறும் எனப்பரணர் கூறுவர்.

"மாரி வண்மகள் ஓரிக் கொல்லி" (நற்: உரு)

"ஓரி, பல்பழப் பலவின் பயங் கெழு கொல்லி"
(அகம்: உ0அ)

"திண்தேர்
கைவள் ஓரி கானம் தீண்டி
எறிவளி கமழும் கூந்தல்" (குறுந்: கக௯)

"வல்வில் ஓரி கானம் நாறி" (நற்: ௬)

(11) கரிகாலன் :

கரிகாலன், உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் அருமைத் திருமகனவன்; அவன் தாய், அழுந்தூர் வேள் பெற்ற மகள்: அவன் மனைவி, நாங்கூர் வேள்பெற்ற மகள்; அவன் மகள், ஆட்டனத்தியின் அருமை மனைவியார் பெரும்புலவர் மணியாம் ஆதிமந்தியார். அவன் அம்மான் இரும்பிடர்த்தலையார்; கரிகாலன் பிறப்பதற்குச் சின்னாட்கு முன்னரே, தந்தை விண்ணுலகெய்தினன்; நாடாட்சியில் நாட்டம் கொண்டிருந்த, அவன் தாயத்தார், பிறந்து கடிதிளையனைய கரிகாலனைக் கடுஞ்சிறையில் இட்டனர்; சின்னாள் சிறையகத்தேவாழ்ந்து, பின்னர்த் தன் வாட்டுணை கொண்டு வெளியேறி விடுதலை பெற்றுத் தனக்குரிய அரசுரிமையைக் கைப்பற்றிக் கொண்டான்.

பின்னர், நீடாமங்கலத்திற்கு அண்மையில், கோயில் வெள்ளி என இப்போது வழங்கும் வெண்ணிவாயில் என்னுமிடத்தே, தன்னை எதிர்த்த, சேரமான் பெருஞ் சேரலாதன், பாண்டியன் ஒருவன், வேளிர் பதினொருவர்

ஆகிய அவ்வளவு பேரையும் வென்று ஓட்டினான்; மறுவலும், வாகை என்னுமிடத்தே, ஒன்பது அரசர்கள் அவனோடு பொருது, குடையும் முரசும் களத்தே ஒழிய, நண்பகலிலேயே தோற்றோடினர்; இப் பெருவெற்றிகளை அல்லாமல் அவன் தமிழ் நாட்டில் ஆங்காங்கே வாழ்ந்து வந்த, ஒளியர், அருவாளர், பொதுவர், முதலியோரையும் வென்றான்; வடநாடு சென்று, வச்சிரம், மகதம், அவந்தி முதலாய அந்நாட்டு அரசர்களை வென்று அவர்கள் அளித்த அரும்பொருள் பலபெற்று, இமயத்தில் வெற்றிக் குறிகுறியாகப் புலிக்குறி பொறித்து மீண்டான்; காவிரிக்கு இருமருங்கும் கரைகட்டி நாட்டை வளம்படுத்தி, 'வளவன்' என்ற பெயர் பெற்றான்; புகார்நகரைப் புதுப்பித்துப் புறநாட்டுவாணிபம் வளர வழிசெய்து, உள்நாட்டுச் செல்வ நிலையினைச் செழிப்புறச் செய்தான். தன்னைப்பாடிய புலவர், கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்கும் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்துப் பெருமை செய்தான்.

இவ்வாறு, தமிழ் அரசர்களுள் தலைசிறந்தோன் எனப் பாராட்டப்பெறும் கரிகாற்பெருவளத்தான் வாழ்க்கையில் நிகழ்ந்த அரும்பெரும் செயல்கள் மூன்றினைப் பரணர், தம் அழகிய அகநானூற்றுப் பாடல்கள் மூன்றினுள் அமைத்துப் பாராட்டியுள்ளார்.

"கொடிய சினமும், கடியவலியும் உடைய புகழ் மிக்க கரிகால்வளவன், கள்ளுண்டு மகிழ்வோர் ஆரவாரம் மிக்க வெண்ணிவாயில் என்னுமிடத்தே தன்னை எதிர்த்துப் போரிட்ட வேந்தர்இருவரும், வேளிர் பதினொருவரும் தங்கள் வீரமுரசினைப் போர்க்களத்தே போட்டுவிட்டு நிலை கெட்டு ஓடுமாறு வென்று, அவர்தம் வலியனைத்தையும் அழித்த அந்நாளில், அவன் ஆண்டுப்பெற்ற வெற்றி குறித்து, அவன் தாய் பிறந்த அழுந்தூரில், விழாவெடுப் போர் எழுப்பிய ஆரவாரம், அம்மம்ம! மிகப் பெரிதாம்!" எனக் கரிகாலன் வெண்ணியில் பெற்ற கன்னிப்போர் வெற்றியினை வியந்து பாராட்டினர் ஒரு பாட்டில் :

"காய்சின மொய்ம்பின், பெரும்பெயர்க் கரிகால்,
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்,
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்,
இமிழ்இசை முரசம் பொருகளத்து ஒழிய,
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி அறுத்த ஞான்றைத்
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பு." (அகம் : உசசு)

"கரிகாலன், விரைந்து செல்லும் குதிரைகளைக் கொண்டதாகி, மாற்றார் மனத்திற்கு மருட்சியை விளைவிக்கும் மாபெருந்தானையுடன், வெற்றிதரும் இடம் என அறிந்து விரும்பியிருந்த வாகைப்பறந்தலையில், அவன் முன் நின்று அமர்செய்ய ஆற்றமாட்டாது, தம் வெண்கொற்றக் குடைகளையெல்லாம் ஒழித்துவிட்டு, நடுப்பகலிலேயே ஓடிய மன்னர் ஒன்பதின்மரும், பெருமையறியாப் பேதையர் ஆவர்," என்று வளவன் வாகைப்போர்வெற்றியினை வகுத்துரைத்துள்ளார், வேறு ஒரு பாட்டில் :

"விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத்து இறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்,
சூடா வாகைப் பறந்தலை, ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
பீடில் மன்னர் போல
ஓடுவை மன்." (அகம் : கஉரு.)

இவ்வாறு, கரிகாலன்பெற்ற இருபெரும் வெற்றிகளை விளங்க உரைத்து வியந்து பாராட்டிய பரணர், மற்றொரு பாட்டில், காவிரியாற்றின் கழார்த்துறை, மருதமரங்கள் வளர்ந்த தோட்டங்களாலும், தழைத்து வளர்ந்த கதிர்களை உடைய வயல்களாலும் நிறைந்து கவின்பெற விளங்குவதையும், அக்கழார்த்துறையில் நிகழும் புனல்விழாவினையும், அப்புனல்விழாக் காணக் கரிகாலன், தன் பெரிய சுற்றம் சூழ வந்திருப்பதையும், அவன் மகிழுமாறு ஆற்றில் குதித்து ஆடிய ஆட்டனத்தியின் ஆடற்சிறப்பையும், அழகாக எடுத்துக் காட்டியுள்ளார் :

"மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை
ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்துறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காண
.......................................
புனல்நயந் தாடும் அத்தி." (அகம் : ௩௭௬.)

## (12) ஆட்டனத்தியும், ஆதிமந்தியும் :

அத்தி என்பான், ஆற்றுப்புனலில் ஆடும் தொழிலில் வல்லனுதல்பற்றி ஆட்டனத்தி என அழைக்கப்பெற்றனன். அவன் சேரநாட்டினன்; ஆதிமந்தியாரின் ஆருயிர்க் கணவனுவன்; ஆதிமந்தியார், மன்னன் கரிகால்வளவன் மகள் ஆவர்; புலவரும் போற்றும் புலமையுடையார்; வெள்ளிவீதியார் என்ற பெண்பாற்புலவரின் பாராட்டைப் பெற்ற பெரும்புலவராவர்.

காவிரிஆற்றில் கழார்ப்பெருந்துறையில் ஆண்டு தோறும் புதுப்புனல் வருங்கால் பெருவிழா நிகழும்; ஆற்றுப்புனலில் குதித்து ஆடவல்ல அந்நாட்டு இளைஞர், அன்று ஒருங்கே சேர்ந்து ஆடித் திரிவர்; அவ்வாடல் காணச் சோழநாட்டு மக்களும், மன்னனும் ஆண்டு வந்து மகிழ்வர்; ஓராண்டு நடைபெற்ற விழாவின்போது, கரிகாலனுடன் ஆதிமந்தியும், ஆட்டனத்தியும் வந்திருந்தனர்; விழாக் கண்டு அகமகிழ்ந்திருந்தான் ஆட்டனத்தி; அவனும் ஆடவல்லவன்; ஆடவல்ல அவனுல், பிறர் ஆடுவதைப் பார்த்திருக்க இயலவில்லை போலும்! அவனும் ஆட விரும்பினுன்; புனலாட்டிற்கேற்ற புதுமுறைஆடையணிந்து ஆற்றில் குதித்து ஆடத் தொடங்கிவிட்டான்; அவன் ஆடல்கண்டு அனைவரும் அகம் மகிழ்ந்தனர்; அவன் ஆடல் அத்துணைச் சிறந்திருந்தது; ஆயினும் அவன் வேற்றாரினன்; அவ்வாற்றில் அதற்குமுன் ஆடி அறியாதவன்; ஆகவே, ஆற்றின் ஆற்றலும் தன்மையும் அறிந்து ஆட அவனுல் இயலாது போயிற்று; அதனுல் ஆடிக்கொண்டிருந்த அவன், ஆற்றுப்புனலால் அடித்துக்கொண்டு போகப்பட்டான்.

அவன் ஆடல் சிறப்பால் செம்மாந்திருந்த ஆதிமந்தியாரும் பிறரும் பெருங் கவலையுற்றனர்; அவனை ஆற்றிடமெல்லாம் தேடித் திரிந்தனர்; அகப்படுவோனாகத் தெரிந்திலது; வழியில் வருவார் போவார் எவரையும், அவன் உருவும் திருவும் அறியக்கூறி வினவிக்கொண்டே சென்றார் ஆதிமந்தியார். காவிரி கடலோடு கலக்கும் வரையிலும் காணாது, கலங்கிக் கண்ணீர்விட்டுத் தேடித் திரிவாராயினர்; இறுதியில், கடற்கரை அருகே ஆற்றுப்புனலில் அலைப்புண்டதால் அயர்ந்து அந்நீர்வழிச் சென்றானை மருதி என்பாள் கண்டு, அரிதின் முயன்று கரை சேர்த்து ஆதிமந்தியார்பால் ஒப்படைத்தாள்; ஆனால், அந்தோ! அவனைக் கரைசேர்க்கும் முயற்சியால், மருதி கடல்வாய்ப்பட்டு மறைந்து மாண்புற்றாள்.

ஆட்டனத்தி ஆதிமந்தியார்தம் இவ் வரலாற்றினைத் தமிழ்மக்கள் நன்கு உணருமாறு, பரணர் பல பாக்களில் உரைத்துள்ளார். கச்சும் கழலும் கட்டி இடையில் ஒலிக்கும் பாண்டில் மணியும், மார்பில் மணம் நாறும் மாலையும் அணிந்து, தழைத்து வளர்ந்த தலைமயிரும், பருத்து உயர்ந்த தோளும் உடையனாய் ஏறுபோன்ற எழில்மிகு நடையும், பேரழகும் கொண்டு பெருமிதம் தோன்ற நிற்கும் ஆட்டனத்தியையும், அவன் அப்புனலில் ஆடிய சிறப்பையும் பரணர் பாராட்டிப் பாடியுள்ளார்.

ஆடிய அவனைக் காவிரி ஈர்த்துக்கொண்டதும், அவன் மறைவு கண்டு, மாறாத்துயர்கொண்டு அவன் மனைவி ஆதிமந்தியார், அறிவும் பிறிதாகி, அவன் உருவும் திருவும் உணரக்கூறி, "அவனைக் கடல் கொண்டது; புனல் ஒளித்தது; சுரியலம் பொருநனைக் கண்டீரோ? ஆட்டனத்தியைக் காணீரோ?" என வழியில் எதிர்ப்படுவார் எவரையும் வினவிக்கொண்டே நாடுதோறும், ஊர்தோறும் அலைந்து திரிந்த ஆற்றொணாத் துயர்க்காட்சியினைக் கண்ணீர்விட்டுக் கலங்கிக் காட்டியுள்ளார்.

பனிவார்கண்ணளாய்ப் பலவாறு புலந்து அலைந்து திரியும் ஆதிமந்தியார் அகம் மகிழும் வண்ணம், ஆற்றில்

அடித்துக்கொண்டு போகப்பட்ட அவள் கணவனைக் காட்டிக்கொடுத்துக் கரைசேர்த்து, அம் முயற்சியில் கடலில் மறைந்து மாண்புற்ற மருதி என்பார்தம் மாண்புறு வரலாற்றினையும் வரைந்து வாழ்த்தியுள்ளார் :

“.....................................
கச்சினன், கழலினன், தேந்தார் மார்பினன்,
வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்
சுரியலம் பொருநனைக் காண்டிரோ? என
ஆதிமந்தி பேதுற்று இனையச்
சிறை பறைந்து உரைஇச் செங்குணக் கொழுகும்
அந்தண் காவிரி ” (அகம் : எசு.)

“.....................................
முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டெழில் பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்,
ஆட்டனத்தியின் நலன்நயந்து உரைஇத்
தாழிரும் கதுப்பின் காவிரி வவ்வலின்
மாதிரம் துழைஇ, மதிமருண்டு, அலந்த
ஆதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர் ” (அகம் : உஉஉ.)

“.....................................
ஏற்றியல், எழில்நடைப் பொலிந்த மொய்ம்பின்
தோட்டிரும் சுரியல் மணந்த பித்தை
ஆட்டனத்தியைக் காணீரோ? என
நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்,
கடல்கொண்டன்று எனப், புனல்ஒளித்தன்று எனக்
கலுழ்ந்த கண்ணள், காதலற் கெடுத்த
ஆதிமந்தி ” (அகம் : உநசு.)

“.....................................
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதம் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்

கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனல்நயந் தாடும் அத்தி அணிநயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு" (அகம் : ௩௭௬.)

"..............................மந்தி
பனிவார் கண்ணள் பலபுலந் துறையக்
கடுந்திறல் அத்தி ஆடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்கு"
(அகம் : ௩௯௬.)

(13) நன்னன் :

நன்னன், சேரர்குலத் தொடர்புடையவன்; வேளிர் மரபிலே வந்தவன்; இது அவன், "நன்னன் உதியன்" எனவும், "நன்னன் வேண்மான்" எனவும் அழைக்கப்படுதலால் புலனும்; நன்னன், கொண்கான நாடாண்டவன்; ஏழில்மலையும், பாழிச்சிலம்பும், பாரமும் அவனுக்கு உரியவை; பாடிவரும் பாணர் முதலியோர்க்குப் பகைவரை அழித்துப் பெற்ற பெரும்பொருளை, வந்தார் தம் தகுதி நோக்கி வரிசை அறியாதே வாரி வழங்கும் வள்ளியோனுவன்; போராற்றலும், பேராண்மையும் உடையவன்; அரிய நண்பர்களாகப் பெரிய வீரர்களான மிஞிலி, ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை, கணையன் முதலியோரைப் பெற்றிருந்தான்.

பெரும்படையும் நண்பர்கள் துணையும் பெற்றுள்ள செருக்கால், மேலைக்கடலைச் சேர்ந்த புன்னாட்டின்மீது நன்னன் போர்தொடுத்தான். அவன் செயல்கண்டு, அந்நாட்டு மக்கள் அஞ்சியவழி, ஆய் எயினன் என்பான், 'அஞ்சற்க' என அவர்க்கு அடைக்கலம் கூறி ஆதரித்தான். அதனால், ஆய் எயினனுக்கும் நன்னனுக்கும் இடையே பகைதோன்றி வளரலாயிற்று; நண்பன் முயற்சிக்குத் தடையாயினன் ஆய் எயினன் என்பது கண்ட மிஞிலி, அவனைப் பாழியில் எதிர்த்து மேற்கொண்ட போரில், வென்று கொன்றான். இறந்த எயினன், எவ்வுயிர்க்கும்

இரங்கும் அருள்உள்ளத்தான் ஆதலின், அவன் மறைவு கண்டு பறவைஇனமும் இரங்கி அழுவது காணப்பொரு ஞய், நன்னன் சின்னுள் கரந்துறைந்தான்.

எயினன் உரிமை மகளிர்க்கு, அகுதை என்பான் உறு துணையாய் வந்தானுதல் அறிந்த நன்னன், அவனேடு பகை பூண்டு அழிக்க எண்ணினுன். ஆனல், நன்னனுக்குப் பகைவராய கோசர் என்பார் அவன் உள்ளக்கருத்து அறிந்தவராதலின், அகுதையை, நன்னன் அணுகி அழிக்க லாகா இடத்தே வைத்துக் காத்தனர். பிண்டன் என்பா னெருவன், பெருந்தொல்லை அளித்துவருவது அறிந்த நன்னன், போரிட்டு அவன் ஆற்றலேயும் அழித்து அடக் கினுன்.

இவ்வாறு, தன் பகைவர்களான எயினன், அகுதை, பிண்டன் முதலியோரை முறையே கொன்றும், ஓடி ஒளி யத் துரத்தியும், வென்று அடக்கியும் வீறுகொண்டான் எனினும், பகையற்ற பெருவாழ்வு வாழ்தல் நன்னனல் இயலாது போயிற்று; புதுப்பகைகள் தோன்றலாயின; நன்னன் பகைவளர்தற்கு அவன் போர்வெறியேயன்றி அவன்பால் இருந்த குணஇழிவுகளும் காரணமாம்.

நன்னன் தோட்டம் நறுமாமரங்களாற் சிறந்தது; ஒருநாள் அம் மரத்துக் காயொன்று, அருகே ஓடிய அருவி யில் மிதந்துவந்தது; நீராட வந்த பெண் ஒருத்தி, அக்காய் நன்னனுடையது என அறியாளாய் எடுத்து உண்டனள்; அஃது அறிந்தான் நன்னன்; அவளேக் கொலேசெய்யத் துணிந்தான்; அந் நிலேயில், அவள் பெற்றேர், நன்னன் நல்லியல்பற்றவன் என்பதை உணர்ந்து எதிர்த்து வழக்காடாது 'அவள்நிறைப் பொன்னுல்செய்த பாவையும், எண்பத்தோர் யானேகளும் ஈடாகக் கொடுக்கிறேம்; ஏற்று அவளே விடுக' என வேண்டியும் கேளாது கொலேபுரிந்தான்.

நன்னன் இக் கொடுஞ்செயலே நாடு அறிந்து கண் டித்தது; பெண்கொலேக்குக் காரணமாயது, நன்னன் நறுமா என அறிந்த கோசர், அவன் நாட்டிற்புகுந்து,

அருமையுடன் அவன் போற்றிவளர்த்த அம்மாவினை வெட்டி வீழ்த்தித் துண்டுகளாக்கித் தம்மூர்க்குக் கொண்டு சென்றனர்; இவ்வாறு பகை பெருகிற்று; கடைசியில் கடம்பின் பெருவாயில் என்னுமிடத்தே, களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலோடு போரிட்டு நன்னன் இறந்தான்; அவன் காவல் மரமாம் வாகையும் அழிவுற்றது.

இவ்வாறு வாழ்விழந்து மறைந்து போனதுமட்டுமேயல்லாமல், நன்னன் இந்நிலவுலகு உள்ளவரை நீங்காப் பழியும் உடையனாயினன்; தான் இழுக்குற்றதோடு, அவ்விழிவு, தன் குடிக்கும் நின்றுநிலைபெறச் செய்துவிட்டான்; "பெண்கொலை புரிந்த நன்னன்" என நன்னனைப் பரணர் பழிதூற்றினர்; "நீ, பெண்கொலை புரிந்த நன்னன் மருகன்" என வேறு ஒரு புலவர், நன்னன் வழிவந்தோனைப் பழிக்கிறார்.

நன்னனைக் குறித்துக் கூறப்பட்ட இவ் வரலாற்றில் பரணர்பாக்களால் அறியப்பெற்றன, நன்னனுக்கும் மிஞிலிக்கும் உள்ள நட்புறவும், அவனுக்கும் ஆய் எயினனுக்கும் உள்ள பகையும், எயினன் உரிமைமகளிர்பால் இரக்கம்காட்டி, நன்னன் பெரும்பகையினை அகுதை பெற்றதும், நன்னன் பெண்கொலை புரிந்து பெற்ற பழியும், அப்பழிதீரக், கோசர் அவன் மாவினை அழித்ததும் ஆகிய வரலாறுகளே ஆம். இவ் வரலாறுகளை விளங்க உரைக்கும் பரணர் பாக்கள் பலவாகும்; ஆதலின், அவற்றை எல்லாம் எடுத்து எழுதின் ஏடு விரியுமாதலின், அவற்றை அப் பெருநூல்களிலேயே கண்டு கொள்க.

## (14) மிஞிலி:

நன்னன் நண்பர்களுள் மிஞிலி என்பானும் ஒருவன்; பகைவர்தம் அரண்பல அழித்த ஆற்றல்வாய்ந்த மிகப் பெரிய படையுடையான்; போராற்றலைப் பெருகப் பெற்றவன்; பகைவர்படையாற்றலைப் பாழ்செய்யும் போர் நுணுக்கம் பலவும் பயின்றவன்; நெடிய தேர்ஏறித் திரிப

வன்; தன் நண்பன் நன்னனோடு பகைகொண்டு, அவன் போர்தொடுத்த புன்னாட்டார்க்கு அஞ்சல் என்று அடைக்கலம் அளித்து ஆதரித்த ஆய் எயினனை அழித்தொழிக்க எண்ணினான். எண்ணிய எண்ணம் ஈடேறின், பாழிநகர்ப் பேய்க்குப் பலி தருவேன் எனக் கூறிப் பரவினான்; ஆய் எயினனைப் பாழியில் எதிர்த்துப் போரிட்டான்; எயினன், மிஞிலியின் படையில் பெரும்பகுதியினரைக் கொன்று குவித்தான்; ஆயினும், எதிர்த்தார் எவரையும் அழிக்கும் ஆற்றல்வாய்ந்த ஆய் எயினன், மிஞிலியோடு போரிட்டுத் தளர்ந்து இறந்துவீழ்ந்தான்; வீறெய்தி வெற்றிபெற்ற மிஞிலி, வாக்களித்தவாறே பேய்க்குப் பலி கொடுத்து, களவேள்வியும் ஆற்றி மகிழ்ந்தான்.

மார்பும், தோளும் மறையப் போர்க்கவசம் பூண்டு களம் நோக்கிச்செல்லும் இயல்பினனான மிஞிலி, தனக்கு உற்றதுயர் போக்கி உறுதுணை புரிந்தது அறிந்த நன்னன், தனக்குரியதும், வேளிர் பெரும்பொருளால் நிறைந்தது மான பாழிநகரையும் பாரத்தையும் நண்பனுக்கு நல்கி நன்றி செலுத்தினான்;

மிஞிலியின் வரலாறு பரணர் பாட்டால்மட்டுமே அறியப்படும்; அகத்துறைப்பாடல்கள் ஐந்தில் அவன் வரலாறு உரைக்கப்பட்டுளது; அவற்றுள் ஒரு செய்யுள்,

"முறையில் வழாஅது ஆற்றிப் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி,
ஊட்டரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்கு
ஊட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி,
புள்ளிற்கு ஏம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை எயினன் கொன்றுஉவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பு." (அகம்: கசஉ.)

(15) ஆய் எயினன்:

ஆய் எயினன், வேளிர்வழி வந்தோனாவன்; "வெளியன் வேண்மான் ஆய் எயினன்" என, அவன் அழைக்கப்

பெறுதல் காண்க. முருகனை ஒத்த முழுவலி உடைய எயினன், அருள்உள்ளம் உடைய அண்ணலாய்ப் பறவைகள்பால் பேரன்பு கொண்டிருந்தான்; தன்பால் அன்பு கொண்டு பாடிவரும் பாணர்க்கும், கூத்தர்க்கும், பொருநர்க்கும், வெண்கோட்டு யானைகள் வேண்டுவ ஈந்து மகிழும் மனவளம் உடையவன்.

நன்னன் என்பான், புன்னாட்டின்மீது போர் தொடுத்து எழுந்தானாக, அவன் செயல்கண்டு ஆற்றாத ஆய் எயினன், அந் நாட்டு மக்களை நோக்கி, 'அஞ்சற்க; ஆறுத்துயர் தீர்க்க நான் உள்ளேன்' என்று கூறி, கூறியதோடு அமையாது, நன்னனின் நண்பனும் மிஞிலியோடு, அந் நன்னனுக்குரிய பாழியில் பெரும்போர் செய்தான். ஈண்டுப் போரிட்டால், நன்னன் ஆண்டு புன்னாடுவிட்டுப் போதருவன் என எண்ணினான்போலும்! இஃது அவன் கருத்தாயின், எயினனைப் போர்நுணுக்கம் அறிந்த பெருந் தலைவன் எனப் போற்றுதல்வேண்டும். போரில் மிஞிலியின் படையை முற்றும் அழித்தான் எனினும், இறுதியில் அவனால் உயிரிழந்தான். பிறர்துயர் தீர்க்கத் தன் உயிர் கொடுத்த பெருந்தகையின் உடல், ஞாயிற்றுஒளியால் ஊறுஉறாவண்ணம் பறவைகள் ஒன்றுகூடி உயரே பறந்து நீழல் செய்தன. புள்ளும் இரங்கும் பேர்அருளாளனும் ஆய் எயினன் அழிவிற்குத் தானே காரணமாம் என்பதை நாட்டார் அறிவர் ஆதலின், அவர்முன் வர நாணி நன்னன் ஒளிந்து திரியலாயினன். எயினன் உரிமைமகளிர், தங்கள் அணிமலர் இழந்து அழலாயினர்: அழும் அவர்துயர் போக்கி ஆறுதல் உரைக்க, நன்னன் பேராற்றல் கண்டு அஞ்சி எவரும் முன் வாராராக, அகுதை என்பான் துணிந்துவந்து துயர்போக்கித் துணைபுரிந்தான்.

ஆய் எயினன் வரலாறு, அகநானூற்றுப்பாக்கள் ஐந்தில் இடம் பெற்றுள்ளன; அவ் வைந்து பாடல்களையும் பாடினார் பரணரே ஆவர்: மிகவிரியுமென அப் பாடல்கள் ஈண்டுக் காட்டப்பட்டில.

## (16) அகுதை :

அகுதை, அஃதை எனவும் அழைக்கப்பெறுவான்; இவன் கூடல்மாநகரை வாழ்விடமாகக்கொண்டவன்; மறப்போர் மன்னன்; மாற்றார்படையினைப் பழியொடு மடராப் போர்நெறி நின்று வெல்லும் வீரர்களால் நிறைந்தது அவன் படை; 'அகுதை, பகைவர்கைப் பொற்சக்கரப்படையால் மார்பிற்புண்பட்டான்' என்ற பொய்யுரை ஒன்று, ஒருகாலத்தே தோன்றி மறைந்தது என்பர். அகுதை, அரசவையிருந்து இரந்துவரும் பாணர்க்கும் பொருநர்க்கும் நன்கலனும், கொல்களிறும் நாள்தோறும் அளித்து மகிழும் மாண்புடையான்.

நன்னனுக்குரிய பாழிப்பறந்தலையில், நன்னன் நண்பன் மிஞிலியோடு, ஆய்எயினன் பொருது இறந்தான்; இறந்தான் உடலையும் காண அஞ்சி, நன்னன் ஒளிந்து கொள்வானாயினன். எயினன் உரிமை மகளிர், தம் மங்கல அணிகளை மலர்களோடும் இழந்து அழுவாராயினர்; அவர் துயர்நிலை கண்ட அகுதை, ஆங்குச்சென்று அம்மகளிர்க்கு ஆறுதல் உரைத்து அவர் துயர்மாற்றினான்; தன்பகைவன் உரிமைமகளிர்க்கு உறுதுணையாயினான் அகுதை என்பதறிந்த நன்னன், அவன்மீது மாறாச்சினம் கொண்டான்; கோசர் என்பார், அஃதறிந்தனர்; அவர்கள் நன்னன் பகைவராய் அவன் கொடுங்குணம் அறிந்திருந்தனர்; ஆகவே, அவனால் அன்புகாட்டி நல்லது செய்த அகுதைக்கு அழிவுநேருமோ என அஞ்சினர்; அதனால், அவனை, நன்னனால் நண்ணற்கரிய அரணிலே வைத்துக் காத்தனர்.

> இன்கடும் கள்ளின் அகுதை ", களிற்றொடு
> நன்கலன் ஈயும் நாண்மகிழ் இருக்கை" (அகம் : ௭௬)

> "வெளியன் வேண்மான் ஆய் எயினன்,
> ..........................................................
> உறற செருவில் புண்கூர்ந்து வீழ்ந்தென
> ..........................................................

பெருவிதுப் புற்ற பல்வேள் மகளிர்
குரூஉப்பூம் பைந்தார் அருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
அகுதை களைதந் தாங்கு" (அகம்: உ0அ)

(17) அன்னி மிஞிலியும் அழுந்தூர்த் திதியனும்:

மேற்குக்கடற்கரையை அடுத்து, விந்திய மலைக்குத் தெற்கே துளுநாடு என்றோர் நாடுண்டு; அந்நாட்டில் கோசர் என்ற மரபினர் வாழ்ந்து வந்தனர்; காலம் செல்லச் செல்ல, அவர்கள் தாயகத்தின் நீங்கித் தமிழகத்தின் கீழ்க்கடற்கரைவரை பரவிவாழத்தொடங்கினர். ஆதனெழினி என்பானுக்குரிய செல்லூர்க்குக் கிழக்கே கடலைச் சார்ந்துள்ள நியமம் என்ற ஊர் அவர் உடைமையாயிற்று. பெருந்திறல் பெற்ற போர்வீரர்களாய் விளங்கினமையால், பேர்அரசர்களும் இவர்களை மதித்துப் பெருமைசெய்தனர்; நன்னன் நறுமாவைக்கொன்று நாட்டிற் போக்கியவரும் இக்கோசர்களே.

நாடோடிவாழ்க்கையைக் கைவிட்டு நிலைத்த குடியினராய் வாழத்தொடங்கிய கோசர், உழவுத்தொழிலை உரிய தொழிலாக மேற்கொண்டனர்; இவர்கள் விளைநிலத்தை அடுத்து வாழ்ந்தவளே அன்னிமிஞிலி என்பவள்; அன்னிமிஞிலிக்கு ஒரு தந்தை இருந்தார்; அவர் வாய்மை வழுவாதவர்; தங்கள் பசுக்களை மேய்த்து வருவது அவர் தொழில்; அவ்வாறு மேய்த்து வருங்கால், ஒருநாள் அவர் பசு, அடுத்துள்ள கோசர்நிலத்தில் விளைந்திருந்த பயிரை மேய்ந்துவிட்டது; தங்கள் பயிர் அழிந்து போனமைகண்ட கோசர், அவனைப் பிடித்துத் துன்புறுத்தி அவர் கண்ணையும் போக்கிவிட்டார்கள்; தந்தைக்கு நேர்ந்த துன்பநிலையினை அன்னிமிஞிலி கண்டாள்; கோசர்பால் கடுஞ்சினம் கொண்டாள்; என் தந்தையின் கண்போக்கிக் கொடுமைசெய்த கோசரைக் கொன்று பழிதீர்க்காமுன் உண்ணவும் உண்ணேன்; நல்லாடையும் உடேன்," என்று சூளுரைத்தாள்; அவர்களை அழிக்கும்

திறம் யாது? அவர்களை அழிக்கும் ஆற்றல் வாய்ந்த ஆண் தகை யாவன்? என்றெல்லாம் எண்ணினாள்.

அக்காலை, அழுந்தூரில் திதியன் என்பான் ஒருவன் இருந்தான்; இவ் அழுந்தூர் என்பது, மாயூரத்திற்கு மேற்கே உள்ள திருவழுந்தூராகும். திதியன் பேராற்றல் வாய்ந்த பெரும்படையுடையவன்; களம்பல கண்ட குதிரைப்படையுடையவன்; நெடிய வலிய தேர்ப்படையினையும் பெற்றிருந்தான்; இவ்வாறு அவன் படைப் பலமும், பெருவலியும் உடையான் என்பதறிந்த அன்னி மிஞிலி, அழுந்தூர் சென்று அவனைக்கண்டு தன் குறை கூறி முறை வேண்டி நின்றாள்; தந்தைபால் அவள் கொண்டிருக்கும் அன்பையும், தவறுசெய்தாரைத் தண்டித்தல் வேண்டும் என்பதில் அவள் கொண்டுள்ள உறுதிப்பாட்டினையும், அவள் தந்தை செய்த சிறு தவற்றுக்குக் கோசர் அளித்த தண்டனையின் கொடுமையினையும் அறிந்த திதியன், அன்னிமிஞிலியைத்தேற்றி, கோசர் குடிவாழ் நிலம் நோக்கி நடந்தான்; குற்றம் புரிந்த கோசரைக்கண்டு கொன்றான்; தந்தை கண் அவித்த கோசர் அழிந்தனர் என்பதறிந்த அன்னிமிஞிலி, அகம் மகிழ்ந்து, எண்ணியது எய்தினேன் எனச்செம்மாந்து, உண்ணாதும் உடாதும் இருந்ததைவிட்டு அணிபல அணிந்து அனைவரும் போற்ற அழுந்தைநகரில் வாழ்ந்து வரலாயினள்:

“முதைபடு பசுக்காட்டு அரில்பவர் மயக்கி
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்து,
பாசிலை அமன்ற பயறு ஆபுக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து, அருளாது
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்,
கலத்தும் உண்ணாள், வாலிதும் உடாஅள்,
சினத்திற் கொண்ட படிவம் மாறாள்,
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவியல் நன்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய
அன்னி மிஞிலி.” (அகம்: உகூஉ)

## (18) தித்தன் வெளியன் :

இவன், தித்தன், மாவண்தித்தன், தித்தன் வெளியன் என்றெல்லாம் அழைக்கப்பெறுவன்; இவன் பெயர் தித்தன் வெளியன் என்று அழைக்கப்பெறுவதைக் கொண்டு, இவன் இயற்பெயர் வெளியன் என்பது; அவன் தித்தன் என்பான் மகனாவன் என்று சிலர் கருதுவர்; ஆனால், பரணர் ஒருவரே, பல இடங்களில் 'மாவண்தித்தன் உறந்தை' எனவும், 'தித்தன் உறந்தை' எனவும், 'தித்தன் வெளியன் உறந்தை' எனவும் கூறியுள்ளார் ஆதலின், உறந்தைக்குரியோன் ஒருவனைக் குறிப்பிடும் இம்மூத் தொடர்களும் ஒருவனையே குறிக்கின்றன என்று கொள்ள வேண்டியுளது ஆதலின், இத்தொடரைத் தித்தன் மகன் வெளியன் என்ற பொருளுடையதாகக் கொள்வது பொருந்தாமை அறிக.

தித்தன் வெளியன், உறந்தையிலிருந்து ஊராண்டவன்; உறந்தை, நொச்சிவேலியால் சூழப்பெற்றது; அந்நகரைச்சூழ அமைந்த காவற்காடு கற்களால் நிறைந்து பகைவர்க்குக்கடத்தற்கு அருமை உடையது; அந்நகரை அடுத்து உள்ள கானலம்பெருந்துறையில் கலங்கள் பல நிறைந்திருக்கும்; நெல்வளம் மிக்கமைகண்டு, "பிண்ட நெல்லின் உறந்தை" எனவும், "வெண்ணெல் வேலி உறந்தை" எனவும் புலவர் புகழ்ந்து பாராட்டுவர். இவ்வாறு வளம்பெறுதற்குக் காரணமாய காவிரியாறு, உறந்தைநகர்க்கண் ஓடக்கோலும் நிலைபெறா ஆழம் உடையதாகும். உறந்தை பெற்ற இச்சிறப்புகளுக்கெல்லாம் மேலாக, அறம் நின்றுநிலைபெறும் அவையினையும் உடையது என்ற உறுபுகழும் அதற்கு உண்டு.

பெரும்புகழ்பெற்ற உறந்தையில் வாழும் பேறுபெற்ற தித்தன் வெளியன், தன்னளவிலும் புகழ்உடையனாவன்; அவன் புகழ் விளக்க, அவனுக்கு அமைந்துள்ள 'மாவண் தித்தன்' என்ற பெயரும், அவன் பெயருக்கு முன்வரும் 'மழைவளம் தரூஉம்' என்ற சிறப்படையும் போதிய

வாதல் காண்க. அவன் தன்னைப் பாடி நிற்கும் பாணர்க்குப் பெரும்பொருள் அளித்துப் பரந்த புகழ் உடையவன்; அவன் நாளவை நாட்டுமக்களால் பாராட்டப்பெறும் பெருமை வாய்ந்தது; தித்தன் வெளியன், கற்பாலும் பொற்பாலும் சிறந்த ஐயை என்ற அருமைமகளையும் பெற்றிருந்தான்.

தித்தன் பெரிய வீரன்; பகைகண்டுகொல்லும் பெருஞ்சினம் உடையான்; கட்டி என்பான் ஒரு வீரன்; அவன் தன் நண்பனாகிய பாணன் என்பானையும் துணைகொண்டு தித்தனோடு போரிடவந்தான்; வந்தவர் ஊர் எல்லையிலேயே, தித்தன் நாளவையில், அவனைப் புகழ்ந்து ஒலிக்கும், கிணையோசையினைக் கேட்டனர்; கேட்ட உடனே, இத்துணைப் பெரும்புகழுடையானைப் போரிட்டு வெல்லுதல் இயலாது; போரிட்டால் நாம் பொன்றாது மீள்வதே அரிதாம் என எண்ணினர்; எவரும் காணா வாறு ஆங்கிருந்து ஓடி ஒளிந்தனர்; இச்செய்திகேட்டு அன்றைய தமிழ்நாடே அவர்கள் செயல்கண்டு எள்ளி நகையாடிற்று. அத்துணைப் புகழுடையான் அவன் என்பது அறிந்தே பரணர் அவனைப் பல பாக்களில் பாராட்டியுள்ளார்.

‘ ஐயை தந்தை,
மழைவளம் தரூஉம் மாவண் தித்தன். (அகம்: ௬.)

‘ நுண்கோல் அகவுநர்ப் புரந்த பேரிசைச்
சினங் கெழுதானைத் தித்தன் வெளியன். ”
(அகம்: ௱௫௨.)

‘ வலிமிகு முன்பின் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட்டு அஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅது ஓடிய ஆர்ப்பு ” (அகம்: ௨௨௬.)

(19) பாணன், கட்டி, பொருநன், கணையன் :

பாணன், ஒரு வடநாட்டு வீரன்; மற்போர் வல்லவன்; தன் நாட்டிலேயே அன்றிப் பிற நாடுகளிலும் தன் பேராண்மை காட்டும் பெருவலியுடையான்; காப்புமிகுந்த இடங்களில் இருக்கும் பகைவர்பசுநிரைகளையும் கவர்ந்து வரும் சூழ்ச்சியும் திறனும் உடையான்; இவன் கட்டி என்பானைத் தன் உயிர்நண்பனாகக் கொண்டு வாழ்ந்தான்; கட்டி என்பானும் வடநாட்டைச் சேர்ந்தோனே ஆவன்; அவன்பாலும் பெரும்படையொன்று இருந்தது; வேற்படையும் கொண்டு விளங்கினான்; இவ்வாறு இயல்பால் ஒத்த நண்பர்கள் இருவரும் தமிழகம் வந்தனர்.

தமிழகத்தில் கணையன் என்பான் ஒரு வீரன் இருந்தான்; அவன் அரசவையில், அவன் அன்பிற்குரிய நண்பனாக, ஆரியப்பொருநன் என்ற வடநாட்டு மற்போர் வீரன் ஒருவன் வாழ்ந்துவந்தான்; கணையன், தன் நண்பனை பெருந்திறல்பெற்ற மாபெரும் மல்லனாவன் என்று பெருமை கொண்டாடிக்கொண்டிருந்தான்; அதை அறிந்தனர், பாணனும் கட்டியும். பாணன், அப்புகழுரையைப் பொறாது, ஆரியப் பொருநனைப் போருக்கழைத்தான்; இருவருக்கும் மற்போர் தொடங்கிவிட்டது; போரில், ஆரியப்பொருநன் தோள்களைப் பாணன் தன் மார்போடு அணைத்து இறுகப் பிடித்துக்கொண்டான்; அவன் பிடியினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ளப் பொருநன், தன் முழுவலியும் காட்டி முயன்றான்; ஆனால், அந்தோ! பாணன்பிடி பெரும்பிடியாகிவிட்டது; அதனால், பொருநன் தோள்கள் பாணன் கைகளிலேயே நிற்க, அவன் உடல் மட்டும் அறுபட்டு வெளிப்பட்டு வீழ்ந்தது; கணையன் கண்டான்; வெல்லும் மல்லன் எனத் தன்னால் புகழப் பெற்ற பொருநன் தோற்று உயிர்விட்டது தனக்கே பழி என உணர்ந்தான்; நாணம் கொண்டு நடுங்கினான்.

பொருநனை வென்ற போர்வெறி தணிந்திலது; பொருது புகழ்பெற்ற பாணனையும் துணைகொண்டு, கட்டி, உறந்தை நகர்க்கண் வாழ்ந்திருந்த வள்ளற் பெருந்தகை

யாம் தித்தன் வெளியனை வெல்ல எண்ணினான்; இருவரும் உறந்தை சென்றனர்; உறந்தை நகர்ப்புறத்தே அவர் செல்லும்போது, கிணையோசை கேட்டனர்; கிணையின் பேரொலி கேட்ட அவர்கள், பெரிதும் வியந்து, அப் பேரொலி எங்கிருந்து வருகிறது? பேரொலியால் போற்றப் படும் பெரியோன் யாவன்? என அவ்வழி வந்தாரை வினவினர்; அவர்கள்வழி, அவ்வொலி, தித்தன் நாளவையி னின்றும் வருகிறது என்று உணர்ந்தனர்; அஞ்சினர்; அங்குச் சிறிதும் நில்லாது ஓடிமறைந்தனர்; அவர்கள் செயல் அறிந்து அன்றைய தமிழுலகமே எள்ளி நகை யாடிற்று. பரணர், இச்செய்திகளை எல்லாம் அகநானூற் றில் எடுத்து விளக்கியுள்ளார்.

சேரன் ஒருவன் படைத்தலைவர்களுள், கட்டி கணை யன் என்ற இருவர் இடம்பெற்றுள்ளனர்; அவர்களே, இங்குக்கூறிய கட்டியும், கணையனு மாதலும் கூடும்.

"பாணன்
மல்லடு மார்பின் வலிஉற வருந்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்,
நிறைதிரள் முழவுத்தோள் கையகத்து ஒழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி, நற்போர்க்
கணையன் நாணி யாங்கு" (அகம்: ௩௮௬.)

## (20) பசும்பூட் பாண்டியன் பகையும் நட்பும்:

நக்கீரர், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனைப் பாராட்டியவர் என்பது, அகநானூற்றாலும், நெடுநல்வாடையாலும் தெளிவாம்; தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், எவ்வியின் மிழலையைக் கைப்பற்றினான் என்று மாங்குடிகிழார் கூறுகிறார்; தலை யாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய நக்கீரர், பசும்பூட்பாண்டியன் ஒருவன் கொங்கரை ஓட்டி னான் என்று கூறுகிறார்; பசும்பூட் பாண்டியன் படைத் தலைவன் அதிகன் என்பான் வாகைப் பறந்தலையில் பட்டு

கண்டு கொங்கர் ஆர்த்தனர் என்றும், பசும்பூண் பெருந் திறல் என்பான் ஒருவன் எவ்வியை அடக்கினான் என்றும் பரணர் கூறுகிறார்; இவற்றையெல்லாம் ஒப்புநோக்கிய வழி, பசும்பூட் பாண்டியன் என்ற பெயர், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையே குறிக்கும் எனக் கொள்க.

பசும்பூட் பாண்டியன், அதிகன் என்பானைத் தண்டத் தலைவனாகப் பெற்றிருந்தான்; அதிகன் வேங்கைமலைக் குரியவன்; அவ்வேங்கை பகைவரால் கோடற்கரியது; பலாநிறைந்து பயனளிப்பது; அதிகன், தன்பால் வந்து இரந்து நிற்போர்க்கு இல்லை என்னாமல் ஈயும் இயல்புடை யான்; அதிகன் வேங்கைமலையில், அவன் அரசனின் யானைப்படைகள் நிறுத்தப்பெற்றிருக்கும். இவ்வதிகன், கூகைக்கோழியின் வாகைப்பறந்தலையில் நடந்த போரில் இறந்துவிட்டான்; அவன் இறந்தது கண்டு கொங்கர் மகிழ்ந்து ஆரவாரித்தனர்.

பசும்பூட் பாண்டியன், தான் அதிகன் போன்ற பெரும்படைத் தலைவரைப் பெற்றிருப்பது கண்டும், தனக்கு அடங்கிவாராத எவ்வி என்பான் மீது பெருஞ்சினம் கொண்டான். எவ்வி, நீடூரில் வாழ்ந்தவன்; வறியோர்க்கு வழங்கும் வள்ளியோன்; வாட்போர் வல்லவன்; பசும்பூட் பாண்டியனுக்குப் பணியாது வாழ்ந்த பெருவீரன்; ஆனால், பேரரசனாகிய அவனால் அழிவுற்றான்; எவ்வி இறந்தான் என்பது கேட்ட பரணர் பெருந்துயர் உற்றுப்புலம்பினர்; அவர்கள் தலை, பூவால் பொலிவுறுவதை இழந்தது. எவ்வியை வெற்றிகொண்ட பசும்பூட் பாண்டியன், அரி மணவாயில் உறத்தூரில் படையாளர்க்குச் சோறிட்டு மகிழ்ந்தான்.

(21) மற்றும் பலர்:

இவ்வாறு ஒரு சிறிது வரலாறு விளங்க வந்தோரே அல்லாமல் வேறு பலரும் பரணர் பாக்களால் அறியப்படு

இன்றனர்; பரணர், மத்தி என்பானுக்குரிய கழார், "பல் வேல் மத்தி கழார்" என மத்தியையும், காமூர்க்குரியவன் கழுவுள்; அவன் காமூர் வேளிர் பதினால்வரால் பாழாக்கப் பெற்றது "ஈரெழுவேளிர் இயைந்தொருங்கெறிந்த கழுவுள் காமூர்" எனக் கழுவுளையும், அழிசி ஆர்க்காட்டிற்குரியவன்; ஆற்றல் வாய்ந்த அவன் மக்களுள் சேந்தன் என்பான் சிறந்தவன்; ஆற்றில் புனலாடுவார்க்குத் தொல்லை தந்த யானையைப் பிடித்து மருதமரத்தோடு பிணித்துப் புகழ் பெற்றவன் என அழிசியையும், அவன் மகன் சேந்தனையும், பெரிய படையும், போர் வெல்லும் ஆற்றலும் உடையவன்; தன்பால் வந்து குறைகூறி இரப்போர் கொள்கலம் நிறை யக் கொடுப்பன் என மாந்தரம் பொறையன் கடுங்கோவையும், வேற்படையும், யானைப்படையும் நிறைந்த பெரும் படை யுடையவன்; ஓரியைக் கொன்று கைப்பற்றி, காரி தந்த கொல்லிமலைக் குரியவன்; தொண்டகர்க்குத் தலைவன் எனப் பெரும்பூட் பொறையனையும், யானை மிதித்தலால் உண்டாய தும், வழுதுணங்காய் அளவுள்ளதுமான தழும்பைப் பெற் றுத் தழும்பன் என அழைக்கப்பெறுபவன்; வாய்மை வழுவாதவன்; பாணர் பலரைப் போற்றிக் காத்தவன்; ஊணூரை உறைவிடமாகக் கொண்டவன் எனத் தழும்பனை யும், இருப்பையூரில் வாழ்ந்தவன்; வயவன் எனவும் அழைக்கப்பெறுபவன்; தெவ்வரைத் தேய்க்கும் திறல் உடையான்; வருவோர்க்குத் தேர் வழங்கும் வள்ளன்மை யுடையவன் என விரானையும், குறும்பூரார் ஆரவாரிக்க வேந்தர்களோடு பொருதவன் என விச்சியர் பெருமகனையும், காவிரிக்கரையில் போர் என்னும் ஊரில் வாழ்ந்தவன்; சோழர்படைத்தலைவன் எனப் பழையனையும், நாட்டில் நல்லன அல்லது நடைபெறுவண்ணம் நாடுகாவல் மேற் கொண்டோன்; சோழர்படைத்தலைவன் என வல்லங் கிழவோனையும், புலிகள் திரிய, தேன் சொரிய நிற்கும் பொதியமலைக்குரியவன் எனப் பொதியில்திதியனையும் நமக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளார்.

## ௧௧. பரணர் பாக்களால் அறியப்பெற்ற ஆறு, மலை, ஊர்கள்

பரணர், தமிழக முழுதும் சுற்றிப் பார்த்தவராதலின், ஆங்காங்குள்ள ஆறுகள், மலைகள், ஊர்கள் இவற்றின் இயல்பினை ஏற்ற இடங்களில் எடுத்துக் கூறியுள்ளார். அவர் பாக்களால் அறியப்படும் ஆறுகள், சோழநாட்டுக் காவிரியும், சேரநாட்டுப் பேராறுமாம்; காவிரி பெரும் புனல் பாய்ந்தோடும் பண்புடையது; "கழைநிலை பெறாக் காவிரி," "கழையளந் தறியாக் காவிரி;" காவிரியாற்றில், கழார்ப்பெருந்துறையில் ஆண்டுதோறும் புதுப்புனல் வருங்கால் புனல்விழா நடைபெறும்; விழாக்காண, அந் நாட்டு அரசனும் மக்களும் வருவர். பேராறு, மலைகள், புல்லும் அற்று வற்றவும், மூங்கில்கள் வாடி உலரவும், மழைபெய்யாது பொய்த்த காலத்தும், கடத்தற்கு அருமை உடையதாகுமாறும், கரைகளை உடைத்துக் கொண்டு செல்லுமாறும், பெருவெள்ளம் வரப்பெற்று, பூத்தேர் பூட்டுவோர்க்குப் பேருவகை பெருகச் செய்யும்.

அவர் பாக்களால் அறியப்படும் மலைகள், இமயம், ஏழில், கவிரம், கொல்லி, பறம்பு, பொதியில், வேங்கை முதலியன. இமயம்: இமயம் பொற்கோடுகளுடையது; "பொன்னுடை நெடுங்கோட்டு இமயம்." அம்மலைவாழ் அரமகளிர் அன்னப்பார்ப்புகளை விரும்புவர்; இமயமலை யில் யானைகள் மிகுதி. ஏழில்: மலையாளநாட்டில் கண்ண னூருக்கு வடக்கே உளது. பெண்கொலைபுரிந்த நன்ன னுக்குரியது. "நன்னன் ஏழில் நெடுவரை," கவிரம்: பொதி யில் மலையின் ஓர் பகுதிக்குப் பெயரே கவிரம். நிறையச் சுனைகளை உடையது; ஆய் என்பான் நாட்டில் இருப்பது.

"ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பின்
கவிரம் பெயரிய உருகெழு கவான்
நேர்மலர் நிறைசுனை."

கொல்லி : வல்வில் ஓரிக்குரிய இம்மலையைக், காரி என்பான் அவ்வோரியைக் கொன்று, தன்நண்பன் சேரனுக்கு அளித்தான் ;

"காரி, செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக்கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி."

இம்மலையில் கண்டாரை வருத்தும் பாவையொன்றுண்டு ; அது கொல்லிப்பாவை என அழைக்கப்பெறும். அதன் இயல்பினை,

"கால்பொருது இடிப்பினும் கதழுறை கடுகினும்
உருமுடன்று எறியினும் ஊறுபல தோன்றினும்
பெருநிலம் கிளரினும் திருநல உருவின்
மாயா இயற்கைப் பாவை."

என நன்கு விளக்குவர். பறம்பு : பறம்புமலை பாரிக்கு உரியது என்பர் ; ஆனால், பரணர், பறம்பு நன்னனுக்கு உரியது என்பர்; இம்மலையில் சாணைபிடிப்போன், அரக்கொடு கல்லைச்சேர்த்துச் செய்த சாணைக்கல் உண்டு எனவும், அவ்வாறு சேர்ந்த கல் சிதைக்கலாகா உறுதிப்பாடுடையது எனவும் கூறுவர்.

"நன்னன் பறம்பில்
சிறுகாரோடன் பயினொடு சேர்த்தியகல்."

பொதியில் : தெற்கே இருப்பது ; திதியனுக்கு உரிமை உடையது. இம்மலையின் சாரலில் கவிரம் என்ற பெயர் கொண்ட குன்றும் உண்டு. வேங்கை : அதிகன் என்பானுக்கு உரியது ; எளிதிற் கைப்பற்றுவதற்கு இயலாதது ; பலாமரங்களால் நிறைந்து பயன் தருவது,

'அதிகன்,
கோளற வறியாப் பயங்கெழு பலவின் வேங்கை."

அரிமணவாயில், அலைவாய், அழுந்தூர், ஆர்க்காடு, ஆலமுற்றம், இருப்பை, உறத்தூர், உறையூர், ஊணூர், கழார், காழூர்,

குறும்பூர், குன்றூர், கூடல், தொண்டி, நீடூர், பாரம், பாழி, புகார், போர், மட்டவாயில், மரந்தை, முசிறி, மோகூர், வஞ்சி, வாகை, வெண்ணி முதலிய ஊர்களை அறிந்து கூறியுள்ளார்.

இவற்றுள் சிலவற்றின் பெயர்களை மட்டுமே குறிப்பிட்டுச் செல்லும் பரணர், பலவற்றின் வரலாறுகளை விளங்க உரைத்துள்ளார். அழுந்தூர்: அன்னிமிஞிலியின் தந்தை கண்ணைப் போக்கிய கோசரைக் கொன்ற திதியனுக்குரியது; கரிகாலன், வெண்ணிப்பறந்தலையில் பெற்ற வெற்றி குறித்து விழாக்கொண்டாடிய ஊர். உறையூர்: தித்தனுக்கு உரியது; அங்கு நடைபெறும் அவன் நாளோலக்கம் மிகச் சிறப்பு வாய்ந்தது. கழார்: காவிரிக் கரையில் உளது; மருதமரங்கள் நிறைந்தது; புனல் விழாக் கொண்டாடும் சிறப்புடையது; ஆட்டனத்தி ஆடி மறைந்த இடமும் அதுவே. பாரம்: நன்னனுக்கு உரியது; பின்னர் நன்னனால், தன் நண்பன் மிஞிலிக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. பாழி: போர் பல கண்டது; அரிய காவலை உடையது; வேளிர் பெரும்பொருள் வைத்துக் காத்து நின்ற பெருமை உடையது; ஆய் எயினனைக் கொன்ற மிஞிலி, பேய்க்குப் பலி கொடுத்த இடம் இதுவே. வாகை: காரிகாலனை எதிர்த்த ஒன்பது அரசர்கள், தங்கள் காடி படை குடை ஒழித்து ஓடித்தோற்றது, இவ்வாகைப் போரில் என்ப. வெண்ணி: கரிகாலன் கன்னிப்போர் நிகழ்ந்த இடம் இது; இங்கே நடந்த போரில், வேந்தர் இருவரையும், வேளிர் பதினொருவரையும் வென்றான்; இவ்வெற்றியைப் பாராட்ட அழுந்தூரில் விழாக்கொண்டாடினர்.

இவ்வாறு தமிழகத்தின் பெரும்பாலான இடங்களை அறிந்து கூறிய புலவர் பரணரே; அவர் பெற்றிருந்த இந்நிலநூல் அறிவே, இன்று தமிழகத்தின் சங்ககாலத்திய வரலாற்றினை அறிய விரும்புவோர்க்குப் பெருந்துணை புரிகிறது.

இவர் அறங்குடிகொண்ட நெஞ்சப்பாங்கினர்; அறம் பிறம்பியவரின் செயல்களை மன்னராயினும் பின்னர் வேறு

யாரே ஆயினும், எடுத்துரைத்துத் தெருட்டும் நீர்மை யார்; வெளிப்படுத்தும் மேன்மையாளர்; இவைகட்குச் சான்றாக அவர் பேகனுக்கு அவன் மனைவிபால் கொண்ட வெறுப்பை நீக்கி விருப்புறச்செய்து ஒன்றுபடுத்திய வாறும், மாங்கனிக்காகப் பெண்ணைக் கொன்ற நன்னன் பழியை உலகறியத் தூற்றி யுரைத்த நடுநிலை திறம்பாச் செப்பமும் விளக்குவனவாம். இவர்போன்ற நல்லிசைப் புலவர்தம் ஒழுகலாறுகள், தமிழர் நெறிமுறை கோடாத் தன்மையை உலக மக்கட்கு எடுத்துக்காட்டி விளக்கும் சிறப்புடையனவாம்.

இவர்தம் பாக்கள் முழுதும் துருவிப் பார்த்தால் அதனிடையே உண்மை வரலாறுகளே புலனாகின்றன. இவர் காலத்தில் நிகழ்ந்தவற்றை ஆங்காங்கே நிரல்படுத்து ஏற்ற இடத்தில் அமைத்து விளக்கும் நுண்மாணுழைபுல மிக்க ஒண்மையாளராய்த் திகழ்கின்றார். இவர் பாடல்களில் அரசர்கள் வள்ளல்கள் மக்கள் நிலை முதலியன நன்குணுமாறு அமைந்து கிடக்கின்றன.

இத்தகைப் புலவர் பெருமகனார்க்கு நாம் செய்யுங் கடப்பாடு அவர்தம் உண்மை வரலாற்றை அறிந்து மகிழ்வதேயாகும்.

வாழ்க பரணர்! வாழ்க அவர் வரலாற்றுணர்வு!